

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஏப்ரல் 05, 2012 | புரட்சி 11 | முழக்கம் 12 | விலை: ரூ.2.50

### தாம்பரம் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆதாரங்களுடன் உரை

## சேது சமுத்திரத் திட்டம்: ஜெயலலிதாவின் இரட்டை வேடம்

ஆடம்ஸ் பாலத்தை ராமன் பாலம் என்று இந்துத்துவ பார்ப்பன சக்திகள் கூறி உச்சநீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் மதவெறி கருத்துகளையே முன் வைத்துள்ளது. சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்திவிட்டு, 'ராமன் பாலத்தை' இந்தியாவின் தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று சுப்ரமணியசாமி தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் மத்திய அரசிடம் உச்சநீதி மன்றம் கருத்து கேட்டுள்ளது. இந்த நிலையில் 'இராமன் பாலத்தை' தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதி, தனது பார்ப்பன இந்துத்துவா ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். இதே ஜெயலலிதா கடந்த காலங்களில் சேது சமுத்திரத் திட்டத்தை விரைந்து அமுல்படுத்தக் கோரி தேர்தல் அறிக்கைகளில் கூறியதையும் 'ராமன் பாலம்' என்ற கற்பனைக்கு எவ்வித வரலாற்றுச் சான்றுகளும் இல்லை என்பதையும் விளக்கி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை-தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் உரையாற்றினார். அவரது உரையிலிருந்து:

இந்தப் பிரச்சனையின் பின்னணி உங்களுக்குத் தெரியும். பல காலமாக இந்த செய்தி பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டிருந்தாலும்கூட இந்த பிரச்சனை எப்போது முன்னுக்கு வந்தது என்றால், 2002 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் இருந்து இயங்குகின்ற வைஷ்னவா நியூஸ் நெட் ஓர்க் என்ற இணைய தளத்தில் ஒரு செய்தி போடப்பட்டது.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் இருக்கின்ற மணல் திட்டு என்பது, நாசாவால் ஆய்வு செய்யப்பட்டது. அது 17 லட்சத்து 50ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கிறது என்று நாசா ஆய்வு நிறுவனம் கூறியதாக செய்தி போட்டிருந்தார்கள். (நாசா என்பது அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம்) இந்த செய்தி வெளியிட்டதிலிருந்து தான் இந்த பிரச்சனை தொடங்கியது என்று கூறலாம்.

பி.டி.ஐ. (பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா) என்ற செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியின் உண்மையை அறியாமல் அதை மற்றப் பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டு விட்டன.

பகுத்தறிவு இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இணையதளத்தில் வந்திருக்கும் இந்த செய்தி உண்மை தானா என்று கேட்டு, நாசாவுக்கு கடிதம் எழுதினார்கள். 'நாசா' தனது பதிலில், "விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட படங்களை வெளியிட்டிருப்பது உண்மை. ஆனால், அது கடவுளால் உருவாக்கப்பட்டதா, அல்லது மனிதர்களால் உண்டாக்கப்பட்டதா என்பதெல்லாம் தெரியவில்லை. அந்தப் படங்கள் எங்களுடையது, அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் விளக்கம் எங்களுடையதல்ல" என்று நாசா ஆய்வு மையத்தைச் சார்ந்த அதிகாரி மார்க் ஹெஷ் என்பவர் சொன்னார். அவர் சொன்ன மறுப்பும் பத்திரிகையில் வந்தது. ஆனால் முதலில் வந்த செய்தியை (இராமன் கட்டிய பாலம்) எந்த அளவிற்கு பெரிதாக போட்டார்களோ அந்தளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த மறுப்பு பெரிதாக வராமல், ஏதோ ஒரு மூலையில் சிறியதாக போட்டுவிட்டார்கள். எனவே அந்த மறுப்பு வந்ததே பலருக்கும் தெரியவில்லை.

இதேபோல் இதற்கு முன்பு வேதத்தில் கூறப்படும் சரஸ்வதி என்ற ஒரு ஆறு பூமிக்கு அடியில் இருப்பதாகவும், அதை நாசா படம் எடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். இதேபோல் நாசாவின் பெயரைச் சொல்லி பல பித்தலாட்டங்களை பரப்பி வந்தார்கள். 1998 இல், "கணினிக்கு ஏற்ற மொழி சமஸ்கிருதம் என்று நாசா ஆய்வு செய்து சொல்லியிருப்பதாகவும், அதை நாசாவைச் சார்ந்த ரிக் பெட்ஸ் என்ற விஞ்ஞானி சொன்னதாகவும் சொன்னார்கள். அப்போதும் இதேபோல் நாசாவுக்கு விவரம் கேட்டு கடிதம் எழுதப்பட்டது. இது பொய்ச் செய்தி, யாரும் நம்ப வேண்டாம், எங்கள் நிறுவனத்தில் ரிக் பெட்ஸ் என்ற பெயரில் யாரும் இல்லை என்று நாசா பதில் அளித்தது.

1999 இல் இன்னொரு பித்தலாட்டம்... என்.எஸ். இராஜாராம் என்பவரும், டாக்டர் நட்வர்ஜா என்பவரும் சேர்ந்து, சிந்துவெளியில் இருக்கின்ற நாகரிகத்தைப் பற்றி ஆய்வு செய்வதாகச் சொல்லி, சிந்துவெளியில் இருக்கின்ற முத்திரையான காளைமாட்டு சின்னம் உள்ள ஒரு பிளேட்டை எடுத்து, அதில் உள்ள மாட்டின் திமிலை கொஞ்சம் மறைத்து, இது குதிரை, குதிரை அங்கு இருப்பதால், ஆரியர்கள் அங்கு வந்த பின்னால்தான் சிந்து சமவெளி நாகரிகம் உருவானது. காரணம், குதிரை இந்தியாவின் பரம்பரை விலங்கு அல்ல, ஆரியர்களின் வருகையின்போது ஆரியர்களால் கொண்டு வரப்பட்ட மிருகம் குதிரை. எனவே சிந்துவெளி நாகரிகத்தில் ஆரியர்களின் பங்கும் உண்டு என்று சொன்னார்கள். அதேபோல் சிந்துவெளியில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். (சிந்துவெளி நாகரிக காலம் கி.மு.4500/6000 என்று சொல்கிறார்கள். சமஸ்கிருதம் உண்டானதே ஒரு 2000/2500 ஆண்டுகளுக்கு முன்னர்தான்) சிந்து சமவெளி நாகரிக காலத்தில் சமஸ்கிருதம் என்ற மொழியே தோன்றவும் இல்லை என்று, ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மைக்கேல் விட்ஸல் என்ற சமஸ்கிருத பேராசிரியர் சொன்னார். அதேபோல் மற்ற ஆய்வாளர்களும் ஆய்வு செய்து, அது காளை மாட்டின் சின்னம் தானே தவிர குதிரையின் சின்னம் அல்ல என்று சொன்னார்கள்.

பிறகு இதே மோசடி கருத்துகளை சேது சமுத்திர திட்டத்திலும் பரப்பினர். இத்திட்டம் ஏன் அவசியமானது என்றால் மேற்கத்திய நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் அனைத்தும் ஆப்பிரிக்காவைச் சுற்றித் தான் இங்கு வரவேண்டும். இந்தியாவில் இருந்து, சென்னைக்கு வருவதாக இருந்தாலும், கொழும்புக்குச் சென்று அதை சுற்றிக் கொண்டுதான் இங்கு வர முடியும். ஏனென்றால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பாக் ஜலசந்தி (பாக் நீர் இணை) ஆழம் குறைவான கடல் இதை பிரிட்டிஷ் கப்பல் படையைச் சார்ந்தவர்கள் சுட்டிக் காட்டியதால் அது பற்றி 1860-லிருந்து, நிறைய ஆய்வுகள் நடந்து இருக்கின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் 1960, 61 இல் இருந்துதான் வேகமாக அதைப் பற்றி பேசத் தொடங்கினார்கள். இருந்தாலும் ஐந்தாண்டு திட்டங்களில் சேர்க்கப்படவில்லை. 2002க்கு பிறகுதான் அதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு, வாஜ்பாயி ஆட்சிக் காலத்தில்தான் அதைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள்.

கடலில் புதிய பாதை அமைக்க வேண்டும். ஆனால் நடுவில் மணல் திட்டு இருக்கின்றது. இங்கு மட்டும் அல்ல, உலகம் முழுவதும் ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் பல மணல் திட்டுகள் உள்ளன. 1961 இல் மண்டபம் அருகே நிலத்தை வாய்க்காலாக தோண்டி அந்தப் பக்கமாக செல்லலாம் என்று முதலில் ஒரு ஆலோசனை சொல்லப்பட்டது. இதற்கு அதிக செலவு ஆகுமென கருதி இராமேஸ்வரத்தில் இருந்து செல்லலாம் என்று சொன்னார்கள். இராமேஸ்வரத்தில் கோதண்டசாமி கோவில் உள்ளது. அங்கு தான் விபீசணனுக்கு இராமன் பட்டம் சூட்டினான் என்று கூறி அந்தக் கோவிலை இடிக்கக் கூடாது என்று 1963 வாக்கில் ஒரு பிரச்சனை வந்தது. எனவே இதுவும் கைவிடப்பட்டது. பிறகு மூன்றாவது பாதை, நான்காவது பாதை என்று பார்க்கின்றபோது, எல்லா இடங்களிலும் ஒன்று பவளப் பாறை பாதிக்கப்படும், அல்லது அந்த வழியில் உள்ள நீரியல் தாவரங்கள் பாதிக்கப்படும். இப்படி ஒவ்வொரு ஆய்வாக நடத்தி இப்போது ஆறாவது பாதை வழியாகத்தான் கால்வாய் வெட்டப்படுகின்றது. இந்த ஆறாவது பாதையை ஆய்வு செய்வதற்காக 2002 இல் (மேலே சொல்லப்பட்ட பி.டி.ஐ. செய்தி, அதன் மறுப்பு ஆகியவற்றிற்குப் பின்னால்) அப்போதைய கப்பல் போக்குவரத்து துறையின் அமைச்சர் பா.ஜ.க.வைச் சேர்ந்த உமாபாரதி, இந்தியாவின் புவியியல் ஆய்வுத் துறைக்கு இத் திட்டம் பற்றி ஆய்வு செய்யும்படி கடிதம் அனுப்பினார்.

2002 செப்டம்பர் மாதம் கடிதம் அனுப்பி 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆய்வு செய்தார்கள். நான்கு கி.மீ.க்கு ஒரு இடம் என்ற வீதத்தில், மொத்தம் பதினான்கு இடங்களில் போர் (ஆழ் துளை) போடுகிறார்கள். அதன் மூலம் எடுக்கப்பட்ட மண்ணை ஆய்வு செய்து, இது இயற்கையான மணற்திட்டு என்றும், இராமேஸ்வரம் இரண்டரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் உருவான பகுதி என்றும், அதற்கு கீழே உள்ள பகுதிகள் சமீபத்தில் மெல்ல மெல்ல பத்தாயிரம், ஐந்தாயிரம், மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உருவான பகுதிகள் என்றெல்லாம் அறிவித்தார்கள். அங்கு இருப்பது மணல், பவளப் பாறைகள், சுண்ணாம்புப் பாறைகள் ஆகிய மூன்றும் தான். எனவே இந்த ஆறாவது பாதையில் கால்வாய் அமைப்பதால், சுற்றுச் சூழலுக்கோ, கடல்வாழ் உயிரினங்களுக்கோ, கடலின் சூழலுக்கோ ஆபத்தில்லை என்று, இந்திய கடல் எல்லையில் நடத்திய அந்த 2003 ஆம் ஆண்டு ஆய்வறிக்கையில் பரிந்துரை செய்தார்கள். விண்ணியல் ஆய்வு துறையினரும் ஆய்வு செய்தார்கள்.

(2 ஆம் பக்கம்)

## தலித் பத்திரிகையாளர்கள் இல்லாத ஊடகங்கள்

இந்தியாவின் செய்தி ஏடுகளின் அறைகளிலும், தொலைக்காட்சி நிறுவனங்களின் 'கேமரா' அறைகளிலும் பட்டியல் இனப்பிரிவினரையோ பழங்குடியினரையோ காண முடியவில்லை. இவர்களின் பங்கேற்பு இல்லாமலே ஊடகத் துறைகள் செயல்படுகின்றன என்று, இத்துறையில் நீண்டகாலமாக கவனம் செலுத்திவரும் பேராசிரியர் ஜெஃப்ரே, புதுடில்லி பத்திரிகை ஆசிரியர் சங்கத்தில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார். தேசிய ஊடகங்களில் இந்தப் பிரிவினர் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், இது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தியிருந்தால், இந்த அநீதியை நீக்கியிருக்க முடியும் என்றார். அமெரிக்க ஊடகங்களில் கறுப்பின மைனாரிட்டியினர் பங்கேற்பு இல்லாமல் இருந்ததைக் கண்டறிந்து அந்நாட்டு பத்திரிகையாளர் கழகம் கறுப்பின மைனாரிட்டியினரின் பங்கேற்பை ஒரு காலக்கெடு நிர்ணயித்து உறுதிப்படுத்தியது. அதுபோன்ற சமூகத் தணிக்கை இங்கே கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். பட்டியல் இன பழங்குடியினரின் பிரச்சனைகளுக்காக தரமான பத்திரிகை கொண்டு வருவதற்கு தனியாக அறக்கட்டளை ஒன்றை உருவாக்கலாம் என்ற யோசனையையும் அவர் முன் வைத்தார். மார்ச் 31 ஆம் தேதி பத்திரிகையாளர் கழகம் ஏற்பாடு செய்த அறக்கட்டளை சொற்பொழிவில் அவர் உரையாற்றினார்.

# ராமன் பாலமா? தொல்லியல் துறை தந்த மறுப்பு

முதல் பக்கத் தொடர்ச்சி

இறுதியாக தேசிய சுற்றுச் சூழல் அமைப்பிற்கு அனுப்புகிறார்கள். இப்படி பல துறைகள் ஆய்வு செய்துதான் இந்த ஆறாவது பாதையை தேர்ந்தெடுத்தார்கள்.

வாஜ்பேயி பிரதமராக இருக்கும்போது, இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்காக முன்னூறு கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. (தற்போது இதற்கு ஆகும் செலவாக திட்டமிடப் பட்டுள்ள தொகை 2427 கோடி ரூபாய்) மீண்டும் நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வந்ததற்கு பின்னால், அப்போது கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக, பிரதமர் மன்மோகன் சிங், சோனியா ஆகியோரெல்லாம் வந்து இத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

2001 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஜெயலலிதா, "இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கில் இருந்து கடல் வழியாக கிழக்கு நோக்கி கப்பல்கள் செல்ல வேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்கு தீர்வாக அமைவதுதான் சேது சமுத்திரத் திட்டம். இத் திட்டத்தின்படி இராமேஸ்வரத்திற்கும் தலை மன்னாருக்கும் இடையில் உள்ள ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில், கப்பல் போக்குவரத்திற்கு தடையாக உள்ள மணல்மேடுகள், பாறைகளை அகற்றி, ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம். சேது சமுத்திர திட்டத்தால் நம்நாடு மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசிய நாடுகளும், கடலோர பகுதியில் அமைந்துள்ள நாடுகளும் பயனடையும். வாணிபமும் தொழிலும் பெருகும். அன்னிய முதலீடு அதிகரிக்கும். அன்னிய செலவாணி அதிகம் கிடைக்கும். கப்பலின் பயணத் தூரம் வெகுவாக குறைவதால், எரிபொருளும் பயண நேரமும் மிச்சமாகும். ஏற்றுமதி இறக்குமதி அதிகரிக்கும். குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற மிக மிக பிற்படுத்தப்பட்ட தமிழக தென்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். வேலை வாய்ப்பு பெருகும். தூத்துக்குடி துறைமுகம் சர்வதேச அளவில் விரிவடையும். சுற்றுலா வளர்ச்சியடையும்" என்று அந்த அறிக்கை கூறியது.

2004 நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையில்... "நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் ஒட்டுமொத்த தொழில் மேம்பாட்டிலும், முக்கிய பங்கு ஆற்றவிருக்கும் சேது சமுத்திர திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க, மைய ஆட்சி பொறுப்பில் ஐந்தாண்டு காலம் இருக்கும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. கட்சிகள் தவறிவிட்டதை இந்த நாடு நன்கு அறியும். இத் திட்டத்திற்கு போதிய நிதியை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று, அமையவிருக்கும் மைய அரசை கழகம் வலியுறுத்தும்" என்றும் ஜெயலலிதா சொன்னார்.

ஆக, திட்டத்தை மத அடிப்படையில் இப்போது எதிர்க்கிற பா.ஜ.க. ஆட்சியில் தான் திட்டம் தொடங்கப்பட்டது. இப்போது எதிர்க்கின்ற ஜெயலலிதாவும் இரண்டு தேர்தல் அறிக்கைகளிலும் திட்டத்தை வலியுறுத்தியவர்தான். அதுவும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் என்றுதான் சொல்லப்பட்டிருந்தது, இராமர் பாலம் என்றல்ல.

தற்போதைய விவகாரத்தின் தொடக்கமே சுப்ரமணிய சாமியின் வழக்கு மனு தான் . இந்திய அரசியல் சட்ட 49 பிரிவின்படி, இந்த இராமர் பாலம் என்பதை, இந்தியாவின் பழமையான ஒரு நினைவுச் சின்னம் என்பதை ஏற்றுக் கொண்டு, அதை பாதுகாக்கும் நடவடிக்கையில் இந்திய அரசு ஈடுபட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில், சுப்பிரமணியசாமி ஒரு வழக்குப் போட்டார். (இதற்கு முன்னரே 2005 ஆம் ஆண்டு முதல் ஜார்ஜ் பெர்னாண்டர்ஸ், சுவாமி ஓம்காரநந்தா, இராமகோபாலன், உட்பட பலர் வழக்குத் தொடுத்தார்கள்) வால்மீகி இராமாயணத்திலும், துளசிதாச இராமாயணத்திலும், இராமரின் வரலாறு சொல்லப்பட்டிருக்கின்றது. அதில், சீதையை மீட்பதற்காக இராமர் பாலம் கட்டிப் போனார் என்றும் சொல்லப்படுகின்றது. அது திரேதா யுகத்தில் பதினேழு லட்சத்து ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. அந்தப் பாலத்தை நினைவு சின்னமாக அறிவித்து, அதை காப்பதற்கான முயற்சியில் இந்திய அரசு ஈடுபட வேண்டும் என்பதுதான் சுப்ரமணியசாமியின் மனு.

உச்சநீதிமன்றத்தில் இந்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு, தொல்லியல் ஆய்வு துறைக்கு விளக்கம் கேட்டு அனுப்பப்பட்டது. 'திரேதாயுகம்' என்று சொல்லப்படும் காலத்தில் மக்கள் வாழ்ந்தார்களா? இல்லையா? என்று பல ஆய்வுகள் நடந்தன. இவர்கள் கூறும் திரேதாயுகத்தில் கார்பன் டேட்டிங் என்று ஒரு ஆய்வு முறை உள்ளது. அந்தப் பகுதி பொருளை எடுத்து எரித்து அந்த கரியை ஆய்வு செய்து எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் உருவானது என்று சொல்ல முடியும். இமயமலை ஒரு காலத்தில் கடலாக இருந்தது என்று ஒரு செய்தி உண்டு. பூமியில் ஒவ்வொரு கண்டங்களும் தனித் தனி பிளேட்டுகளாக உள்ளது. அவை ஒன்றோடொன்று இடிக்கும்போது இமயமலை உயர்ந்தது என்பது ஆய்வில் கண்டறியப்பட்டது. இமயமலையின் மேல் சென்று அங்குள்ள கடல்வாழ் உயிரினங்களின் எலும்புத் துண்டுகள் முதலானவற்றை ஆய்வு செய்து இதை நிரூபிக்க முடியும். எனவே தொல்லியல் துறை இதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் வந்தது.

வால்மீகி இராமாயணமோ, துளசி தாச இராமாயணமோ சொல்லுகிறபடி, நிகழ்ச்சிகள் நடந்ததாகவோ, அதில் சொல்லப்படுகிற கதாபாத்திரங்கள் இருந்ததாகவோ தெரியவில்லை என்று தொல்லியல் துறை கூறியது. எங்கள் ஆய்வின்படி, அது இயற்கையாக அமைந்த ஒரு அமைப்பே தவிர, மனிதரால் உண்டாக்கப்பட்டதல்ல என்று தொல்லியல் துறை உச்சநீதிமன்றத்தில் கூறியது. பாலத்தைப் பற்றி எது சொன்னாலும் பரவாயில்லை, இராமனே இல்லை என்று சொல்வதா? என பி.ஜே.பி. பிரச்சனையை கிளப்பியது. அப்போது குஜராத்தில் தேர்தல் வரவிருந்ததால் மத்திய அரசு பயந்து பின்வாங்கிக் கொண்டது. அந்த மனுவை திரும்பப் பெற்றதுடன், தொல்லியல் துறையைச் சார்ந்த ஆய்வாளர்கள் இருவரை பணி இடை நீக்கம் செய்தது மன்மோகன் ஆட்சி. மூன்று மாதம் காலக்கெடு கேட்டார்கள். (மூன்று மாதத்தில் தேர்தல் முடிந்துவிடும் என்ற எண்ணத்தில்)

இது குறித்து விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றபோது, ஈரோட்டில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில், இராமன் என்று ஒருவன் இருந்தானா? அவன் எந்த பொறியியல் கல்லூரியில் படித்து, பாலம் கட்டினான்? என்று கலைஞர் கருணாநிதி பேசினார். இராமர் என்று சொல்லாமல் இராமன் என்று மரியாதை இல்லாமல் சொல்லுகிறாரே? இவ்வளவு பெரிய தலைவருக்கு மரியாதை கொடுக்கத் தெரியவில்லையே? என்று ஜெயலலிதா கேள்வி எழுப்பினார். சிவன், கிருஷ்ணன் என்பதை சிவர், கிருஷ்ணர் என்றா கூறுகிறோம்? பிறகு இது அரசியல் ஆக்கப்பட்டது. இராம் விலாஸ் வேதாந்தி என்ற ஒருவர், கலைஞர் கருணாநிதியின் நாக்கை அறுக்க வேண்டும், தலையை வெட்ட வேண்டும், எடைக்கு எடை தங்கம் பரிசு என்றெல்லாம் பேசினார். கருணாநிதியின் தலையைக் கொண்டு வந்தால் ஒரு கோடி ரூபாய் பரிசு என்று பெங்களூரில் இருக்கும் மார்க் தர்ஷன் மண்டல் (விஸ்வ ஹிந்து பரிசத் இன் வழிகாட்டி அமைப்பு) தலைவர் விஜயகுமார் ரெட்டியும் அறிவித்தார். இது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கில செய்தி ஏடுகளிலும் வெளி யானது. ஆனால் தமிழ்நாட்டில் இராம்விலாஸ் வேதாந்தி சொன்னதைப் பற்றி மட்டும் பேசப் பட்டது. அது குறித்து கேட்டதற்கு... "ஆம் சொன்னது உண்மைதான், தெய்வ நிந்தனை பேசுபவன் நாக்கை அறுக்க வேண்டும், கழுத்தை வெட்ட வேண்டும் என்றுதான் மனுதர்மமும் சொல்கிறது. சட்டம் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், நான் சாஸ்திரத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டவன். இப்போதும் அதையே சொல்கிறேன்" என்று திரும்ப திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (5)

அன்னிபெசன்டின் ஹோம்ரூல் இயக்கப் பணிகள் செப்டம்பரில் தீவிரப்படுத்தப்பட்டன. இதனால் பார்ப்பன ரல்லாத இனத்திற்கு பெரும் பாதிப்பு நிகழக் கூடும் என்கிற நியாயமான அச்சம், பார்ப்பனரல்லாதார் பெரிய அளவில் ஒன்றுபட்டு ஒரு இயக்கமாக இணைந்து இயங்க வேண்டியதின் இன்றியமையாமை யினை உணர்த்திற்று.

இந்த முயற்சியின் விளைவாக, நவம்பர் 20 இல் சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள உயர்நீதிமன்ற வழக்கறிஞர் டி.எத்திராஜ் (முதலியார்) வீட்டில் நடேசனார், தியாகராயர், நாயர் உட்பட ஏறத்தாழ 30 பார்ப்பனரல்லாத பிரமுகர்கள், நாடெங்கிலும் இருந்து வந்து கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர். ("விக்டோரியா பப்ளிக் ஹாலில்" கூடியதாகவும் ஒரு கருத்து இருக்கிறது) அவர்களுள் பனகல் அரசர், நாகை பக்கிரிசாமி, சர்.எ.ராமசாமி (முதலியார்), சேலம் எல்லப்பன், தஞ்சை அப்பாசாமி (வாண்டையார்), கரந்தை உமா மகேஸ்வரன் (பிள்ளை), மதுரை எம்.டி. சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இக்கூட்டத்தில் "தென்னிந்திய மக்கள் சங்கம்" என்ற பெயரில் ஒரு ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி துவக்குவது என்றும், அதன் சார்பில், பார்ப்பனரல்லாதார் நலனுக்காக வாதாடும் நோக்குடன் நாளிதழ் வெளியிடுவது என்றும், அதன் சார்பில், பார்ப்பனரல்லாதார் நலன்களைப் பேணிக் காப்பதற்கென்று ஓர் அரசியல் கட்சியைத் துவக்குவது என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி முதல் கட்டமாக "தென்னிந்திய மக்கள் சங்கம்" என்ற பெயரில் ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனி ஒன்று சென்னையில், ஒரு பங்கு ரூ.100 வீதம் 1000 பங்குகளைக் கொண்ட மூலதனத்துடன் ஆரம்பமானது. இதற்கெனச் சொந்தக் கட்டடம் ஒன்றும் வாங்கப்பட்டது. (சென்னையில் பிளாசா தியேட்டர் இருந்த இடம்) உபரிச் செலவுகளுக்கு ராஜா ரங்கராவ் பகதூர் என்ற டேலாப்பூர் ஜமீன்தார் கடன் கொடுத்து உதவினார். இக்காலகட்டத்தில் தியாகராயர் "நான் பிராமின்" என்ற ஆங்கில இதழுக்கு ஆசிரியராகவும், நாயர் "ஆண்டி செப்டிக்" என்ற மருத்துவ இதழுக்கு ஆசிரியராகவும் விளங்கி வந்தனர்.

தென்னிந்திய மக்கள் சங்கம் சார்பில் அதன் செயலாளர் சர்.பி.தியாகராயர் கையொப்பமுடன் டிசம்பர் 20 இல் 'பார்ப்பனர் அல்லாதார் கொள்கை அறிக்கை' வெளியிடப் பட்டது. வரலாற்று புகழ்மிக்க அவ்வறிக்கையில் பார்ப்பனர் அல்லாதாரின் நிலைமை, பார்ப்பனர் எவ்வாறு பல்வேறு துறைகளிலும் விகிதாச்சாரத்துக்கும் கூடுதலாக ஆக்ரமித்துக் கொண்டுள்ளார்கள் என்ற விளக்கம், பார்ப்பனரல்லாதார் இனி என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரை ஆகியவை இடம் பெற்றிருந்தன. இவ்வறிக்கை, அலெக்சாண்டர் கார்டியூ (1913) ராயல் கமிஷனின் முன் அளித்த பார்ப்பனரல்லாதார் நிலை குறித்த தகவல்களையும் விரிவாக எடுத்துக்காட்டி விளக்கியது. 'சுய ஆட்சி' என்பதைப் பார்ப்பனர் அல்லாதார் ஆதரிக்க வில்லை என்பதையும் அவ்வறிக்கை தெளிவாக்கியது.

**(தொடரும்)**

**கழக வெளியீடான**
**'திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்' நூலிலிருந்து**

# சைதையில் கழகக் கூட்டம்

19.3.2012 திங்கள் மாலை 6 மணிக்கு மேற்கு ஜோன்ஸ் சாலை, மேற்கு சைதாப்பேட்டையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கோரி விளக்க கூட்டம் நடை பெற்றது. சா. இராசு தலைமை வகித்தார். அ. தியாகு வரவேற் புரையாற்ற, ப.மனோகர் முன்னிலை வகித்தார். உடுமலை தமிழ்ச் செல்வன், கு. அன்பு தனசேகர் சிறப்புரை யாற்றினர். நிகழ்வின் தொடக்கத்தில் சம்பூகன் இசைக்குழுவினர் கலை நிகழ்ச்சி நடை பெற்றது. தோழர் நாத்திகன், ஜெயந்தி அம்பிகா பாடல்கள் பாடினார். கழகத் தோழர் அருண், தபேலா வாசித்தார்.

# தமிழ்ச் செல்வன் – தனவதி வாழ்க்கை ஒப்பந்தம்

கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வடலூர் வே. கலியமுர்த்தி-இராதா ஆகியோரது மகன் க. தமிழ்ச்செல்வன், எம்.எஸ்.சி., பிஎச்.டி. - செ. தனவதி, பி.எஸ்சி., பி.ஜி.டி.சி.ஏ. ஆகியோரது வாழ்க்கைத் துணை ஏற்பு விழா, 29.1.2012 காலை 7 மணிக்கு வடலூர் இராதா திருமண மண்டபத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன், மத்திய அமைச்சர் வி.நாரா யணசாமி, புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன் உள்பட பலரும் வாழ்த்தினர். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏடு வளர்ச்சிக்கு ரூ.2000 கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# இது ஜனநாயகமா? சாதிய நாயகமா?

*25.3.2012 'இந்து' நாளேட்டில் பேராசிரியர் சுரா தராபுரி - இந்தியாவில் சாதிய தீண்டாமைக் கொடுமைகளை விளக்கி எழுதிய கட்டுரையின் சுருக்கம்:*

1949 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்ட வரைவு நகலை முன்மொழிந்த அம்பேத்கர், மனிதர்களை பிளவுபடுத்தும் ஒரு சமூகமாக இந்த நாடு இருக்கிறதே, அதன் விளைவுகள் என்னவாகும் என்று தனது அச்சத்தைத் தெரிவித்தார். நிறுவனமாக்கப் பட்ட சாதிய கட்டமைப்பில் தலித் மக்கள் சந்திக்கும் சாதிய ஏற்றத்தாழ்வு கொடுமைகள் பற்றிய சரியான புரிதல் அவருக்கு இருந்தது. மேல் கீழ் என்று ஏணிப்படி வரிசை போல் இந்த ஏற்றத் தாழ்வுகள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். தீண்டாமைக் கொடுமைகளை அவரே தனது வாழ்க்கையில் சந்தித்தார். சாதிக் கட்டமைப்பின் விளைவான தீண்டாமைக் கொடுமைகள் இப்போதும் தொடருகின்றன.

2012 பிப்.15 அன்று அரியானா மாநிலம் தவுகாத்பூர் கிராமத்தில் ஒரு தலித் இளைஞன் பொது குடிநீர்ப் பானையில் தண்ணீர் குடித்ததற்காக உயர்சாதியினர், அவரது கையை வெட்டினர். உலகின் மிக் பெரும் ஜனநாயக நாட்டில் 21 ஆம் நூற்றாண்டில் இதுதான் நிலை.

- கணக்கெடுப்புகள் வழியாகக் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி தருபவை. 27.6 சதவீத தலித் மக்கள் காவல் நிலையங்களுக்குள்ளே நுழைய தடை.
- பொது சுகாதாரத் துறையில் 33 சதவீத பணியாளர்கள் தலித் மக்கள் வீட்டுக்குச் செல்ல மறுக்கிறார்கள்.
- 23.5 சதவீத தலித் மக்களுக்கு அஞ்சல் துறை ஊழியர்கள் கடிதங்களை விநியோகிப்பது இல்லை.
- கூட்டுறவு அமைப்புகள் மற்றும் சுய உதவி குழுக்களின் கூட்டங்களில் 30.8 சதவீத தலித் மக்கள் மற்றவர்களுடன் சேர்ந்து உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. 29.6 சதவீத பஞ்சாயத்துகளிலும் இதே நிலைதான்.
- 14.4 சதவீத கிராமங்களில் தலித்துகள் பஞ்சாயத்து அலுவலகங்களுக்குள் நுழைய தடை இருக்கிறது.
- 12 சதவீத கிராமங்களில் வாக்குச் சாவடியில் வாக்களிக்க தடை உள்ளது. அப்படியே வாக்களிக்க அனுமதித்தாலும் அவர்கள் தனியாக ஒரு வரிசையில் நிற்க வேண்டும்.
- 48.4 சதவீத கிராமங்களில் பொதுக் குழாய்களில் தண்ணீர் பிடிக்கத் தடை.
- 35.8 சதவீத கிராமங்களில் ஊர்க் கடைகளில் நுழைய தடை; கடைகளிலிருந்து தூரத்தில் நின்று கொண்டு பொருள் வாங்க காத்திருக்க வேண்டும். கடைகாரர் பொருளைக் கொண்டு வந்து தரையில் வைப்பார்; பணத்தையும் அப்படியே பெற்றுக் கொள்வார்.
- 3 இல் ஒரு பங்கு கிராம தேனீர்க் கடைகளில் தனிக் குவளைகள், தனி இருக்கைகள்.
- 73 சதவீத கிராமங்களில் தலித் அல்லாதவர் வீடுகளுக்குள் நுழைய தடை.
- 70 சதவீத கிராமங்களில் தலித் அல்லாதவர்கள் சேர்ந்து உணவு உண்ண மறுப்பு.
- 47 சதவீதத்துக்கும் அதிகமான கிராமங்களில் திருமண ஊர்வலங்களில் பங்கேற்க அனுமதி இல்லை.
- 20 சதவீத கிராமங்களில் சுத்தமான நாகரிக ஆடைகளை அணிவதற்கோ, கண்ணாடி அணிவதற்கோ (கூலிங் கிளாஸ்) அனுமதி இல்லை.
- சொந்த சைக்கிள் இருந்தாலும் ஏறிச் செல்லக் கூடாது; குடை பிடிக்கக் கூடாது; பொது சாலைகளில் செருப்பு அணியக் கூடாது; புகை பிடிக்கக் கூடாது; தலையை குனிந்து தான் நிற்க வேண்டும்; நிமிர்ந்து நிற்கக் கூடாது.
- சராசரியாக 64 சதவீத கோயில்களில் தலித் மக்கள் நுழைய தடை நீடிக்கிறது. உ.பி.யில் 47 சதவீத கோயில்களிலும் கருநாடகத்தில் 94 சதவீத கோயில்களிலும் நுழைய தடை போட்டுள்ளார்கள்.
- 25 சதவீத கிராமங்களில் ஒரே வேலை செய்யும் தலித்துகளுக்கு மற்ற தொழிலாளர்களைவிட கூலி குறைவு. கூடுதல் நேரம் உழைக்க வேண்டும். கூலியும், காலம் கடந்து வழங்கப்படும். அடி, உதைக்கு உள்ளாக வேண்டும். உ.பி., பீகார் போன்ற நிலப் பிரபுத்துவ மாநிலங்களில் மட்டுமல்ல, பஞ்சாபில் கூட இந்த நிலைதான். 37 சதவீத கிராமங்களில் தலித் மக்கள் வெகுதூரத்துக்கு அப்பால் நின்று, கூலியைப் பெற வேண்டும்.
- 35 சதவீத கிராமங்களில் தலித் மக்கள் தங்கள் உற்பத்தி பொருள்களை உள்ளூர் சந்தைகளில் விற்பதற்கு தடை உள்ளது. சாதி அடையாளம் தெரியாத ஊர்களுக்குச் சென்றுதான் சந்தைகளில் பொருள்களை விற்க வேண்டியிருக்கிறது. இதனால் பெரும் இழப்புகளை சந்திக்கிறார்கள்.
- ஆட்சி அதிகார நிர்வாக அமைப்புகளில் பெரும்பான்மையினர் தலித் அல்லாதவர்கள் என்பதால் போராடினாலும் நீதி கிடைப்பது இல்லை.
- உயர்பதவிகளை நெருங்கி வரும் வாய்ப்புகள் கிடைத்தால் தலித் பிரிவினர், குறுக்கு வழிகளில் பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். 1950லிருந்து 2000 வரை 47 சதவீத தலைமை நீதிபதிகளும், 40 சதவீத நீதிபதிகளும் பார்ப்பனர்களாகவே இருந்துள்ளனர் என்ற தகவலை நாடாளுமன்ற குழு அறிக்கை தெரிவிக்கிறது.
- பிரிட்டிஷ் ஆட்சி பிரித்து ஆளும் சூழ்ச்சியை மேற்கொண்டதாக கூறப்பட்டது. இப்போது சுதந்திர இந்தியாவில் சொந்த நாடே சொந்த மக்களை பிரித்தாளுகிறது.

ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிடும் சாதிய அமைப்பில் நிலவும் இந்த சமூகச் சூழலில் நேர்மை, ஒழுங்கு, ஜனநாயக மதிப்பீடுகள் குழி தோண்டி புதைக்கப்படுகின்றன. ஜனநாயகத்தை மேலும் செயல்பட வைக்க வேண்டும் என்ற எண்ணம் கூட அடிமனதில் தோன்றுவதில்லை. ஏணிப்படி வரிசையில் அமைந்த சாதி ஏற்றத்தாழ்வு மட்டுமே செல்வாக்குடன் ஆட்டிப் படைக்கிறது. அதுவே உயர்சாதியினரின் தனி உரிமையாக கருதப்படுகிறது. இந்த நிலையில் சமத்துவம் என்ற சிந்தனையே மேலோங்க முடியாமல் தடைபட்டு நிற்கிறது, சாதி - சமூ கத்தைப் பிளவுபடுத்துகிறது. இந்த 'பிளவு' அன்னிய ஆட்சி என்ற உணர்வையே தலித் மக்களிடம் உருவாக்குகிறது. சொந்த நாடு, சொந்த மதத்தைச் சார்ந்த மக்களையே வேறுபடுத்துவதும் அதில் ஆழ்மனப் பெருமை அடைவதுமே நீடிக்கிறது.

## "குடிஅரசு" வாசகர் வட்டம் தொடக்க விழா

24.3.2012 சென்னை பெரம்பூர் ராஜலட்சுமி அரங்கத்தில் குடிஅரசு வாசகர் வட்டம் தொடக்க விழாவும் சிறப்பு சொற்பொழிவும் நடைபெற்றது. 'குடிஅரசு' வாசகர் வட்டத்தின் தலைவர் வழக்கறிஞர் குமாரதேவன் தலைமையேற்க செயலாளர் க.ராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். கழகத்தின் துணைத்தலைவர் ஆனூர் செகதீசன், பெரம்பூர் கந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்புரையாற்றியவர்களுக்கு 'குடிஅரசு' வாசகர் வட்டத்தின் சார்பாக நினைவு பரிசும் பொன்னாடையும் வழங்கப்பட்டன.

'திராவிடர் இயக்கம் தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி' என்ற தலைப்பில் கழகத்தின் மூத்த வழக்கறிஞர் துரைசாமி, 'திராவிடர் இயக்கத்தின் தேவை இப்பொழுதும்' எனற தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினர்.

இறுதியாக 'குடிஅரசு' வாசகர் வட்டத்தின் பொருளாளர் வி.ஜனார்த்தனன் நன்றியுரையாற்றினார். திராவிடர் இயக்க உணர்வாளர்களும், நடுநிலையாளர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

## சேலம் மாணவர்களுக்கு கழகத்தினர் வழங்கிய இலவச குறுந்தகடுகள்

சிங்கள ராணுவம் ஈழத்தில் நடத்திய இனப்படுகொலைகளை சித்தரிக்கும் குறுந்தகடுகள், தாதகாப்பட்டி பெரியார் நூலகம் சார்பாக கல்லூரி மாணவர்களுக்கு, பொது மக்களுக்கு, சமூக ஆர்வலர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.1350 குறுந்தகடுகள் வழங்கப்பட்டன.

16.3.2012 வெள்ளியன்று சேலம் அரசு கலைக் கல்லூரி மாணவர்களிடம் பகல் 1.30 மணி முதல் 3 மணி வரை 650 குறுந்தகடுகளும்,

17.3.2012 சனி அன்று சேலம் சட்டக் கல்லூரி சேலம் கெண்டலாம்பட்டி சௌடேஸ்வரி கல்லூரி மாணவர்களிடமும் மற்றும் பொது மக்கள், சமூக ஆர்வலர்களிடமும் சேலம் பழைய சூரமங்கலம் நீலாம்பாள் மேல்நிலைப் பள்ளியிலும் குறுந்தகடுகள் வழங்கப்பட்டன.

கழகத் தோழர்கள் வெ.ப.அம்பிகாபதி (சிவசக்தி நகர்), செந்தில்குமார் (கொண்டலாம்பட்டி), செந்தில் (அன்னதானப்பட்டி), ல.லோகநாதன் (இந்திய பொதுவுடைமை கட்சி), மணிகண்டன் (இந்திய பொதுவுடைமை கட்சி) ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர்.

## கழக தலைமை நிலையத்தில் திராவிடர் இயக்கக் கருத்தரங்கு

18.3.2012 அன்று மாலை 5 மணிக்கு சென்னை கழக தலைமை அலுவலகத்தில் பட்டுக்கோட்டை இராமசாமி மணல்மேடு வெள்ளைச்சாமி சிந்தனை வட்டக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்விற்கு குரு. சரவணன் தலைமை வகித்தார். 'திராவிடர் இயக்கம் - ஓர் ஓய்வு' என்ற தலைப்பில் ஆய்வாளர் க. திருநாவுக்கரசு கருத்துரை வழங்கினார். 70-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்களின் கேள்விகளுக்கு க. திருநாவுக்கரசு பதிலளித்தார்.

# சாதி அமைப்பைத் தகர்க்காமல் புரட்சி மலராது: மாவோயிசப் பெண் போராளி கூறுகிறார்



பார்ப்பனர்கள் உருவாக்கிய சாதியமைப்பு இந்து மதத்தின் கோட்பாடாகி அதுவே சமூக அமைப்பாக கெட்டிப் படுத்தப்பட்ட நிலையில் சாதியமைப்பு தகர்க்கப்படாதவரை எந்த சமூகப் புரட்சியையும் கொண்டு வர முடியாது என்று பெரியாரும் அம்பேத்கரும் கூறினார்கள். சாதியக் கட்டமைப்பின் இறுக்கத்தைப் புரிந்து கொள்ளாத இடதுசாரிகள் வர்க்கப் போராட்டம் வெற்றிப் பெற்றால் சாதியை ஒழித்து விடலாம் என்றனர். இப்போது, தமிழ் தேசியம் பேசும் சில அமைப்புகள்கூட தமிழ் தேசியம் கிடைத்தால் சாதியை ஒழித்து விடலாம் என்கிறார்கள்.

சாதி எதிர்ப்பு இயக்கங்களை நடத்தாமலே தமிழ் தேசியத்தைக் கூர்மைப்படுத்திவிட முடியும் என்று கருதுகிறார்கள். இடதுசாரி கட்சிகள் சாதியப் பிரச்சனையைக் கடப்பது அவ்வளவு எளிதானது அல்ல என்ற முடிவுக்கு வந்து இந்தியாவில் வர்க்கமும் சாதியும் ஒன்றாகவே இருப்பதாகக் கூறி வருகிறார்கள். மார்க்சிய லெனினிய, மாவோயிச, புரட்சிகர குழுக்கள் நிலபிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியை முன் வைக்கிறார்கள். ஆயுதம் தாங்கிய புரட்சியை முன்னெடுக்கும் மாவோயிச புரட்சியாளர்களும் தீவிரமாக இயங்கி வருகிறார்கள். இந்த இயக்கத்திலும் சாதிப் பிரச்சனைகள் விவாதத்துக்கு வந்துள்ளன.

தண்டகாரண்யா பகுதியில் பழங்குடி மக்களிடம் தங்கி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த அனுராதா காந்தி, இந்திய பொதுவுடைமை கட்சியின் (மாவோயிஸ்டு) தத்துவார்த்த சிந்தனையாளராகவும் களப் போராளியாகவும் செயல்பட்டவர். மலேரியா நோயில் மூளை பாதிக்கப்பட்டு, 12.4.2008 இல் 54 ஆவது வயதில் அவர் மரணமடைந்தார். தாம் சார்ந்துள்ள மாவோயிச இயக்கம், சாதியப் பிரச்னையில் சரியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்று அவர் எழுதிய கட்டுரைகள் நூலாக வெளி வந்துள்ளது.

“மாற்றத்துக்கான எழுத்துகள்” என்ற தலைப்பில் அவரது கட்டுரைகள் ஆங்கிலத்தில் நூலாக வெளி வந்துள்ளது. நூலின் வெளியீட்டு நிகழ்வு அனுராதா நினைவுக் குழு சார்பில் ஏப்ரல் முதல் தேதி சென்னையில் நடந்தது. அந்த நூலில் “உழைக்கும் மக்களின் போராட்டம் சாதியமைப்புக்கு எதிரான போராட்ட இலக்கை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்” என்று வலியுறுத்துகிறார். சாதியமைப்பை தகர்க்காமல் புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்த முடியாது என்று கூறும் அவர், பகவத் கீதை, மனுஸ்மிருதி, பார்ப்பனத் திமிர், பூணூல் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு கருத்துகளை இயக்கமாகப் பரப்ப வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

சாதி ஒழிப்புக்காக அவர் முன் வைத்துள்ள செயல் திட்டங்கள்:

- புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்கும் பாட்டாளி வர்க்கம் சாதிக்கு எதிரான போராட்டத்தை அதன் பிரிக்க முடியாத பகுதி என்பதை உணர வேண்டும்.
- சாதியால் பின்னப்பட்ட நிலவுடைமை அதிகாரத்தைத் தகர்க்காமல் அரசியல் அதிகாரம் சாத்தியமில்லை.
- ஒடுக்கப்படும் நிலமற்ற ஏழை விவசாயிகளின் மீட்சி ‘உழைப்பவனுக்கே நிலம் சொந்தம்’ என்பதை நடைமுறைப்படுத்துவதில்தான் உள்ளது.
- மனுஸ்மிருதி, கீதை மற்றும் வேதங்கள் உணர்த்தும் சாதியப் பாகுபாட்டை அம்பலப்படுத்துவது மற்றும் பார்ப்பன சாதியத் திமிருக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தை நடத்துவதே இன்றைய தேவை.
- பூணூல் அணிவது போன்ற அனைத்து சாதியச் சடங்குகளுக்கும் எதிரான போராட்டங்களை அயராமல் நடத்துவது.
- சைவ உணவைச் சுத்தமானது; சுகாதாரமானது என்னும் பிரசாரத்தை எதிர்ப்பதோடு மாட்டுக்கறி, பன்றிக் கறி உண்பதற்கு எதிரான சமூக இழிவுப் போக்கையும் எதிர்க்க வேண்டும்.
- சாதிய அடையாளங்களையும், சில சாதிகளை இழிவுபடுத்தும் சொல்லாடல்களையும் முறியடிக்கக் களம் காண வேண்டும்.
- தலித் இன மக்களின் சுயமரியாதைக்காகவும் மதமாற்றம் மற்றும் கோயில் நுழைவுக்கான உரிமைக்காகவும் தோளொடு தோள் நின்று குரல் கொடுக்க வேண்டும்.
- சாதிப் பாகுபாட்டை நிலைநிறுத்தும் வண்ணம் வழங்கப்படும் வீட்டுவசதித் திட்டங்களைப் புறந்தள்ள வேண்டும். சமபந்தி சாப்பாடு, பொதுக் கிணறு, உணவகம், விடுதி, கழிவறை ஆகியவற்றுக்குப் போராட வேண்டும்.
- சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றிற்கான சலுகைகளைக் கோரிப் பெற வேண்டும்.
- சாதிப் பெயர்களைப் பயன்படுத்துவதையும் அரசு, தனியார் ஆவணங்களில் பதிவதையும் எதிர்க்க வேண்டும்.
- பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்குப் பங்கம் நேரக்கூடிய வகையில் செயல்படும் ஒடுக்கப்பட்ட சாதித் தலைவர்களை அம்பலப்படுத்த வேண்டும். உயர்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த ஏழை எளிய மக்கள் சமூகத் தளத்தில் அவர்களின் சாதியைச் சார்ந்த பணக்காரர்களுக்கு இணையாகக் கருதப்படுவதில்லை. உண்மையில் அவர்களைப் பிறசாதிகளைச் சார்ந்த ஒடுக்கப்பட்ட மக்களே அரவணைக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.
- நடைமுறையில் சாதி வெறியர்களாக உள்ள போலி கம்யூனிஸ்ட்டுகளை மக்களிடம் இனம் காட்ட கம்யூனிஸ்ட்டுகள் தவறக் கூடாது.
- சாதிய மோதல் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் கலவரத் தடுப்பு குழுக்களைக் கட்டமைக்க வேண்டும்.
- பொருள் முதல் வாதக் கருத்துக்களையும், இறை மறுப்புக் கொள்கையையும் பரவலாக பரப்புரை செய்ய வேண்டும்.

(அனுராதா காந்தி நினைவுக் குழுவின் தமிழ் நாடு கிளை வெளியிட்டுள்ள சிறு வெளியீட்டில், அனுராதாவின் இந்த செயல் திட்டங்கள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன)

நூல் வெளியீட்டு நிகழ்வில் எஸ்.வி. இராஜதுரை, அகராதி வழக்கறிஞர் பானுமதி, கோவை ஈசுவரன், பம்பாய் வழக்கறிஞர் சூசன், சமூக ஆய்வாளர் ஆனந்த் டெல்டும்பே ஆகியோர் உரையாற்றினர்.


## கழகத்தின் புதிய வெளியீடுகள்




**“இராவண லீலா” – தமிழ்நாட்டின் தேசிய விழா – ஈ.வெ.ரா. மணியம்மையார்**

1974 ஆம் ஆண்டு அன்னை மணியம்மையார் நடத்திய ‘இராவண லீலா’ தொடர்பாக ‘விடுதலை’ ஏட்டில் வெளியிட்ட அறிக்கைகள். பக்.32; விலை: ரூ.10

**“தமிழ்நாடு தமிழருக்கே” – ஈ.வெ.ரா. மணியம்மையார்**




‘விடுதலை’யில் எழுதிய அறிக்கைகள், சொற்பொழிவுகளின் தொகுப்பு. பக்.16; விலை: ரூ.5

(திருப்பூரில் மார்ச் 18 அன்று நடைபெற்ற கழகக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூல்களை வெளியிட்டு, அறிமுக உரை நிகழ்த்தினார்.)

நூல் பெற தொடர்புக்கு: பெரியார் திராவிடர் கழகம் தலைமையகம், 95 டாக்டர் நடேசன் சாலை, (முதல் மாடி), அம்பேத்கர் பாலம், சென்னை - 600 004. பேசி: 9941613535

## மும்பையில் பெரியார் பயிலரங்கம்


மும்பையில் 4.3.2012 அன்று தாராவி காமராசர் பள்ளியில் பெரியார் பயிலரங்கம் நடந்தது. தோழர் பால் வண்ணன் ஏற்பாடு செய்த இந்த பயிலரங்கில் கழக தலைமை நிலையப் பேச்சாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், ‘பெரியார் நேற்று-இன்று-நாளை’ என்ற தலைப்பில் விரிவாகப் பேசினார். புதிய தோழர்களும் பத்துக்கும் மேற்பட்ட பெண்களும் பங்கேற்றனர். மும்பை கழகப் பொறுப்பாளர் கதிரவன் வரவேற்புரையாற்ற, ஆசிரியர் ஜெய. காண்டீபன் தலைமை தாங்கினார். நாடோடி தமிழன், ஜஸ்டின், மேட்டூர் ராசா, தூத்துக்குடி முத்து, க.இராசேந்திரன், தமிழ்நேசன், ஜார்ஜ் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் கட்டுரைத் தொடர் – அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 05th April 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஏப்ரல் 12, 2012 | புரட்சி 11 | முழக்கம் 13 | விலை: ரூ.2.50


# ஊர்த் தமிழன் - சேரித் தமிழன் பேதத்தை ஒழித்திட தயாராவோம்!

இரட்டை தம்ளர், இரட்டை சுடுகாடு என்ற சாதித் தீண்டாமை வடிவங்களை எதிர்த்து பரப்புரை நடத்திய பெரியார் திராவிடர் கழகம், அம்பேத்கர் பிறந்த நாளில் பரமக்குடியிலிருந்து 'ஊர்-சேரி' என்ற இரட்டை வாழ்வுரிமை அவலங்களை எதிர்த்து பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறது.

'சுதந்திரம்' பெற்று விட்டதாக கூறப்படும் ஒரு நாட்டில், ஊரின் கடைக் கோடியில் சாதியால் ஒதுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் தனியாகக் குடியமர்த்தப்பட்டுக் கிடக்கிறார்கள். ஒவ்வொரு கிராமமும், 'ஊர்-சேரி' என்று பிரிந்து கிடக்கிறது. இப்படி ஒரு இழிவானதலைகுனியத்தக்க பிரிவினை அமைப்பு நீடித்து வருகிறதே என்ற சிந்தனைகூட வற்றிப் போய், தமிழர் சமூகம் கிடக்கிறது என்பதுதான் வேதனை.

> *"மனிதனை மனிதன் தொடக் கூடாது; கண்ணில் படக்கூடாது; கோயிலுக்குள் போகக் கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கின்றவை போன்ற கொள்கை தாண்டவமாடும். ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் மூழ்கச் செய்யாமலோ பூமிப் பிளவில் அழியச் செய்யாமலோ, சண்ட மாருதத்தால் துகளாக்காமலோ விட்டிருப்பதைப் பார்த்த பிறகும்கூட, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்ன வென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப் படுத்தித் தாழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும் சாந்தத்தோடும் அகிம்சா தர்மத்தோடும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"*

- என்று பெரியார் 1920 ஆம் ஆண்டிலேயே திருச்செங்கோட்டிலே கேட்டார்.

கேரள மாநிலம் வைக்கத்திலே, 'தெருத் தீண்டாமை'யை எதிர்த்து வீதிகளில் நடக்கும் உரிமை கோரி போராடி சிறை சென்றார். அருவிக்குத்தி தீவுச் சிறையில் ஒரு மாதம் அடைக்கப்பட்டு விடுதலையானவுடன் மீண்டும் களம் புகுந்த பெரியாரை திருவாங்கூர் சிறையில் கடுங்காவல் கைதியாக 6 மாதத் தண்டனை விதித்து அடைத்தார்கள்.

திருவாங்கூர் சிறையில் பெரியார் எப்படி அடைக்கப்பட்டிருந்தார்?

> *"கால்களில் விலங்குச் சங்கிலி தலையிலே கைதிகள் அணியும் குல்லாய். முழங்கால் களுக்குக் கீழே தொங்குகின்ற ஒரு வேஷ்டி. கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட ஒரு மரப்பட்டை. இவற்றோடு ஈ.வெ.ராமசாமி கொலைகாரர்களோடும் கொள்ளைக்காரர் களோடும் வேலை செய்து கொண்டு இருக்கிறார். தண்டனை அடைந்த ஒரு சாதாரண கைதி எவ்வளவு வேலை ஒரு நாளைக்குச் செய்வானோ அதுபோல இரு மடங்கு வேலை செய்கிறார்"* என்று வைக்கம் போராட்டத்தைத் தொடங்கிய கேசவ மேனன் எழுதியுள்ளார்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் முதன்மையான இலக்கே சாதி ஒழிப்புதான். தீண்டாமைக்கு மூலம், சாதி யமைப்புதான். சாதியமைப்பை முன்னிறுத்தியே பெரியார் பார்ப்பன எதிர்ப்பு, மத எதிர்ப்பு, கடவுள் எதிாப்பு என்ற எல்லை வரை கொள்கைப் பரப்பை விரிவாக்கினார். பெரியார் இறுதி வரை வலியுறுத்திய 'தனித் தமிழ்நாடு' கோரிக்கையும் முதன்மையாக 'சூத்திர இழிவு' ஒழிப்புக்காகத்தான்.

தமிழர்களின் ஒற்றுமையை சிதைத்து, ஒருமித்த கூட்டு உளவியலை தகர்த்ததில் சாதிக்கு பெரும் பங்கு உண்டு. சாதி - மனித நேயத்தை - ஜனநாயக பண்பை - கூட்டுச் செயல்பாட்டை - சமூக மயமாக்கலைத் தடுத்து நிறுத்தியதோடு, வெறுப்புகளுக்கு உரமேற்றி மனித மாண்புகளை குழி தோண்டிப் புதைத்து விட்டது. தமிழனாக ஒன்று சேரவிடாமல் தடுத்து நிறுத்தும் சாதி; சாதியால் மட்டும் குழுக்களை ஒன்று திரட்டுகிறது என்றால், தமிழினம் எப்படி வலிமை பெற்று தனது உரிமைக்குப் போராட முடியும்?

அனைவருக்கும் சம உரிமை என்ற உண்மையான ஜனநாயகப் பண்புகளை சாதி மறுக்கிறது. அனைவரும் சமமாக முடியாது என்ற பார்ப்பனியமே - சாதியமாக உருத்திரட்சி பெற்று திகழ்கிறது. ஜனநாயகப் பண்புக்கு எதிரான இதே சாதி தான் இந்த நாட்டில் 'ஜனநாயக' தேர்தலில் சக்தியோடு பங்காற்றுகிறது என்பதுதான் விதித்திரமான நகை முரண்! ஆக, தேர்தல் ஜனநாயகத்திற்குள்ளும் சாதி தலைநீட்டுவதற்கான வாய்ப்புகள் வருகிறது என்றால், ஜனநாயகத்தின் உயிரோட்டம், கொலை செய்யப்படுகிறது என்பது தானே!

தமிழனின் ஜனநாயகத்தை - தமிழனின் வாழ்க்கை முறையை - தமிழனின் உறவு முறையை - தமிழனின் பண்பாட்டுக் கூறுகளை - தமிழனின் மொழி தீர்மானிக்காமல், சாதியக் கூறுகளே மேலாதிக்கம் செலுத்தி நிற்கிறது. இவை எல்லா வற்றையும்விட தமிழன் உருவாக்கும் கட்சிகளுக்கே கூட சாதியமே அடித்தளமாகும் அவலநிலை அதிகரித்து வருகிறது; மொழி வழித் தமிழனை தேட வேண்டியிருக்கிறதே!

அரசியல் - பண்பாடு - சமூகங்களில் சாதியைப் பேணிக் கொண்டிருப்பதை எதிர்க்காமல், கண்டும் காணாமல், ஒதுங்கிக் கொண்டு, தமிழின அரசியலை நோக்கி அறைகூவல் விடுப்பது எப்படி தமிழின அரசியலுக்கு வலிமை சேர்க்கும்?

சாதி எதிர்ப்புக் களம் நோக்கிய தொடர்ச்சியான பயணத்தின் வழியாகவே சாதிய ஒடுக்குமுறையின் இறுக்கத்தை தகர்த்து பலவீனமாக்க முடியும். அந்தப் பாதைகளில் பயணப்பட்டுக் கொண்டேதான் தமிழின ஒர்மைக்கு வழியமைக்க முடியும் என்பதே பெரியாரியம் தந்துள்ள கொள்கை வெளிச்சம். **சாதித் தமிழனை தமிழனாக்குவோம் என்ற நோக்கோடு பெரியார் திராவிடர் கழகம் சாதிய பிரிவினைகளுக்கு சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பரப்புரை இயக்கத்தை மீண்டும் தொடங்குகிறது.**

மனிதனுக்கு மனிதன் இழைக்கும் இந்த 'அவமானங்களை' இழிவுகளை எதிர்த்து நாம் புறப்படும்போது பெரியாரை இழித்துப் பழித்துப் பேசிக் கொண்டு, ஒரு சிறு கும்பல் புறப்பட்டிருக் கிறது. இப்படி எத்தனையோ 'வசை'களை துரோகங்களை சந்தித்தே பெரியாரியத்தின் பயணம் தொடருகிறது.

சாதி எதிர்ப்பு - பார்ப்பன எதிர்ப்பு - இந்துத்துவ எதிர்ப்புகளைவிட பெரியார் எதிர்ப்பே எங்களது முதன்மைப் பணி என்று பேசுகிற கூட்டங்கள், எவ்வளவு வேண்டுமானாலும் கூச்சல் போடட்டும்; அது பற்றி நமக்குக் கவலை இல்லை.

பெரியாரின் கொள்கை வழி நிற்கும் சாதி எதிர்ப்பாளர்களாகிய நாம், நமது கொள்கைப் பயணத்தைத் தொடருவோம்!

**பயணம் வெற்றிப் பெற தோழர்களே, அணியமாவீர்!**

## அணி திரட்ட முடியுமா?




பொருளாதாரப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த, பாட்டாளிகளைத் தட்டி எழுப்ப அவர்களிடம் மார்க்ஸ் கூறினார்: "அடிமை விலங்குகளைத் தவிர இழப்பதற்கு வேறு எதுவும் உங்களிடம் இல்லை" என்று.

ஆனால், சமுதாய மற்றும் மதவியல் உரிமைகளை சில சாதிகளுக்கு அதிகமாகவும், சில சாதிகளுக்கு குறைவாகவும் பல்வேறு சாதிகளுக்கு இடையே மிக வஞ்சகமாகவும் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ள நிலையில், சாதியமைப்புக்கு எதிராக இந்துக்களைத் தட்டி எழுப்ப, காரல்மார்க்சின் முழக்கம் சிறிதும் பயன் அளிக்காது. சாதிகள் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற வரிசைப்படி தரம் பிரிக்கப்பட்டுள்ளன. தங்கள் அந்தஸ்தை சாதிகள் மிகவும் அக்கறையோடு காப்பாற்றி வர எண்ணு கின்றன. சாதிய அமைப்பு ஒழிக்கப்பட்டால், சில சாதிகள் மற்ற சாதிகளைவிட அதிகமாக தங்கள் தனியுரிமைகளையும், அதிகாரங்களையும் இழக்க வேண்டியிருக்கும் என்பது எல்லாரும் அறிந்த உண்மை.

எனவே, சாதி அமைப்பு என்னும் கோட்டையைத் தகர்க்க, இந்துக்களை பொதுவான ஓர் அணியாக ஒன்று திரட்ட உங்களால் முடியாது.

**புரட்சியாளர் அம்பேத்கர்**



## 86 ஆம் அகவையில் மூத்த பெரியார் தொண்டர் திருவாரூர் தங்கராசு

கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும் நாடறிந்த பேச்சாளருமான திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு ஏப்ரல் 6 ஆம் தேதி 86 ஆவது பிறந்த நாளாகும். பிறந்த நாளில் இராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள அவரது இல்லம் சென்று கழகத் தோழர்கள் வாழ்த்துகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தனர்.

கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ, வழக்கறிஞர் குமாரதேவன், சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் உமாபதி, அன்பு தனசேகர், சுகுமார், இராவணன், கோவை ராசுக்குமார், ஜான் உள்ளிட்ட தோழர்கள் திருவாரூர் தங்கராசு அவர்களை சந்தித்து சால்வை அணிவித்து, மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். கழகத் தோழர்களை சந்தித்த மகிழ்வில் பழைய வரலாறுகளை நினைவுகூர்ந்து, திருவாரூர் தங்கராசு நீண்ட நேரம் உரையாடினார்.

பெரியார் கொள்கைக்கே அர்ப்பணித்து, நாடு முழுதும் கொள்கைகளை எடுத்துச் சென்ற திருவாரூர் தங்கராசு அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாழ்த்துகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

## உச்சநீதிமன்றத்தின் முரண்பாடுகளை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

# நர்மதா அணைக்கு ஒரு தீர்ப்பு, சேது சமுத்திரத்துக்கு வேறு ஒரு தீர்ப்பா?

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை-தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் உரையாற்றினார். அவரது உரையிலிருந்து:

இப்படிப்பட்ட சூழலில்தான் நாம் இராமாயணத்தைப் பற்றி பேச வேண்டி வந்துள்ளது. சேது சமுத்திர திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாட்டில் அக்டோபர் 1 அன்று பொது வேலை நிறுத்தம் நடத்துவது என்று தி.மு.க.வும் அதன் தோழமை கட்சிகளும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்தார்கள். இதில் நீதிமன்றங்களின் போக்கைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று கோரி தடை ஆணை கேட்டு சுப்ரமணியசாமி வழக்குத் தொடுத்தார். மத்திய அரசிடம் எந்த கருத்தும் கேட்காமல், இராமர் பாலத்திற்கு எந்தவித சேதமும் வராமல் வேலை நடக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றமும் ஆணை வழங்கியது. (நாம் சாதாரண ஒரு குடிமகன் நினைத்தால்கூட என்னுடைய நிலத்தில் ஒருவன் ஆக்கிரமிப்பு செய்கிறான் என்றோ, அல்லது எனது வீட்டை இடிக்க முயற்சிக்கிறான் என்றோ, உரிமையியல் நீதிமன்றத்தில் அதற்கு தடை ஆணை கேட்டுப் போனால், அந்த இடம் இருக்கின்றது, அது எனக்கு சொந்தமானது, இதில் சொந்தமில்லாத மற்றொருவன் நுழைய முயற்சிக்கின்றான் என்ற மூன்று விசயங்களை நிரூபிக்க வேண்டும்) ஆனால், இராமர் பாலம் வழக்கில் இடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்த பாலம் தன்னுடையது என்றோ அல்லது இந்தியாவிற்கு சொந்தமானது என்றோ சொல்லாமல் தடை ஆணை கேட்கின்றான். தலைமை நீதிபதியும் தடை ஆணை கொடுக்கிறார். 2500 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற இருக்கும் ஒரு பெரிய திட்டத்தை, மத்திய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறபோது, ஒரு தனி மனிதனான சுப்ரமணியசாமி, இராமன் என்று ஒருவர் இருந்ததாகவும், அவர் பாலம் கட்டினார் என்றும், நான் நம்புகிறேன், எனது நம்பிக்கை அதற்கு பாதகம் வந்துவிடக் கூடாது என்று தான் வழக்கு தொடுத்தார். அதை நீதிமன்றங்களும் விசாரணைக்கு ஏற்கின்றன.

ஒரு வளர்ச்சித் திட்டத்தை தடுக்கப்படுகிறபோது, அதற்கு அறிவியல் பூர்வமாக கேள்விகளை வைத்தவர், தனிநபரல்ல. அஞ்சுகம் - முத்துவேல் மகன் கருணாநிதி அல்ல, தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி அல்ல. தமிழ்நாட்டின் முதலமைச்சர், தமிழ்நாட்டின் ஒரு வளர்ச்சித் திட்டம் தடுக்கப்படுகிறபோது, அறிவியல் பூர்வமான ஆதாரம் இருக்கின்றதா? என்று கேட்கிறார். அதற்கு பதில் சொல்லாமல், அவரின் தலையை வெட்டு என்று சொல்வதும், அவரின் மகள் வீட்டின் மீது தாக்குதல் நடத்துவதும், அங்கு போகும் பேருந்துகளுக்கு தீ வைத்து அதில் பலபேர் சாவதும், என்று தொடர்ந்தபோது, சிலர் பி.ஜே.பி. அலுவலகத்தில் கற்களை வீசினர். உடனே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. ஆட்சியை கலைக்க வேண்டும் என்று பி.ஜே.பி.யினர் மனு கொடுத்தனர். இவர்கள் யார்? வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு, இரண்டாயிரம் இஸ்லாமியர்களை கேள்வி கேட்பாரின்றி கொலை செய்த குஜராத் அரசை நீக்கவேண்டும் என்று இவர்கள் சொல்லவில்லை. அது பற்றி கேட்கப்பட்டபோது, தேர்தலில் வெற்றிப் பெற்றவர்கள், மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்களை நீக்க முடியாது என்ற அடிப்படை அரசியல்கூட தெரியாதவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள் என்று சொன்ன பி.ஜே.பி., இரண்டு கண்ணாடி உடைந்ததற்காக, ஆட்சியைக் கலைக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் மனு போட்டது.

சேது சமுத்திர திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாட்டில் அக்டோபர் 1 அன்று பொது வேலை நிறுத்தம் நடத்துவது என்று தி.மு.க.வும் அதன் தோழமை கட்சிகளும் சேர்ந்து ஒரு முடிவெடுத்தார்கள். (நீதிமன்றங்களின் போக்கைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்) தமிழ்நாட்டு அரசையே கலைக்க முடியும். அந்த முதலமைச்சரையும், தலைமை செயலாளரையும் சம்மன் போட்டு நீதி மன்றத்தின்முன் நிறுத்த முடியும் என்று கூறியதோடு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடருங்கள் என்று யோசனையும் சொன்னார்கள்.

அ.தி.மு.க. சார்பிலும் வழக்கு தொடரப்பட்டது. அக்டோபர் முதல் தேதி காலையே தமிழகத்தில் வர்த்தக நிறுவனங்கள் திறப்பதற்கு முன்பே நீதிபதி அகர்வால் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். சட்டம் ஒழுங்கு தமிழகத்தில் சீர்குலைந்து விட்டது என்றும், ஆட்சியை கலைக்கலாம் என்றும், நீதிமன்றமே குடிரயசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யும் என்று நீதிபதி மிரட்டினார்.

இராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று கோரி தடை ஆணை கேட்டு சுப்ரமணியசாமியும் வழக்குத் தொடுத்தார். மத்திய அரசிடம் எந்த கருத்தும் கேட்காமல், இராமர் பாலத்திற்கு எந்தவித சேதமும் வராமல் சேது சமுத்திர திட்ட வேலை நடக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றமும் தடையாணை வழங்கிவிட்டது. (நாம் சாதாரண ஒரு குடிமகன் நினைத்தால்கூட, என்னுடைய நிலத்தில் ஒருவன் ஆக்கிரமிப்பு செய்கிறான் என்றோ, அல்லது எனது வீட்டை இடிக்க முயற்சிக்கிறான் என்றோ, உரிமையியல் நீதிமன்றத்தில் அதற்கு தடை ஆணை கேட்டுப் போனால், அப்படி ஒரு இடம் இருக்கின்றது, அது எனக்குச் சொந்தமானது, இதில் சொந்தமில்லாத மற்றொருவன் நுழைய முயற்சிக்கின்றான் என்ற மூன்று விசயங்களை நிரூபிக்க வேண்டும்.) ஆனால், இராமர் பாலம் வழக்கில் இடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்த பாலம் தன்னுடையது என்றோ, அல்லது இந்தியாவிற்கு சொந்தமானது என்றோ சொல்லாமல் தடை ஆணை கேட்கின்றார். தலைமை நீதிபதியும் தடை ஆணை கொடுக்கிறார். 2500 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற இருக்கும் ஒரு பெரிய திட்டத்தை, மத்திய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறபோது, ஒரு தனி மனிதன், இராமன் என்று ஒருவர் இருந்ததாகவும், அவர் பாலம் கட்டினார் என்றும், நான் நம்புகிறேன், எனது நம்பிக்கை அதற்கு பாதகம் வந்துவிடக் கூடாது என்று வழக்கு தொடுத்தார் என்றவுடன் தடையாணை கொடுக்கிறார்கள்.

### நர்மதா அணைத் திட்டம்

இதே போன்ற திட்டம் ஒன்றில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சிக்கல் வந்தது. நர்மதாவில் அணை கட்டுகிறார்கள். நர்மதா அணை கட்டப்படும்போது, மேதாபட்கர் போன்றவர்கள் அப்போது போராடினார்கள். காரணம் அந்த பகுதியில் வாழும் அரிய வகை உயிரினங்கள் அழிந்துவிடும் என்பது ஒன்று. மற்றொன்று இலட்சக்கணக்கான மக்கள் குடிபெயர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆண்டாண்டு காலமாக அங்கு வாழ்ந்து வந்த அந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. எனவே வேறு இடத்தில் நிலம் ஒதுக்கி அரசே அவர்களுக்கு குடியிருப்புகள் அமைத்து அதன் பின்னர் தான் அணை வேலையைத் தொடர வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை.

பல்லாயிரக்கணக்கான மக்களின் பிரச்சினையை விட அரசின் வளர்ச்சித் திட்டத்தை தொடருவது தான் சரி என்று கூறிய அதே உச்சநீதிமன்றம், கோடிக்கணக்கான மக்களுக்கு பயனளிக்கும் தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த கோரிக்கையான அரசின் வளர்ச்சித் திட்டமான சேது சமுத்திர திட்டத்தைவிட ஒரு தனி மனிதனின் நம்பிக்கையே பெரிதென மதித்து தடையை விதித்தது. சுப்பிரமணிய சாமி என்ற பார்ப்பானின் உணர்வை அவ்வளவு மதிக்கிறது நமது உச்சநீதிமன்றம்!

வடநாட்டு ஆய்வாளர்கள் எல்லாம் சொல்வது, இந்தி பேசும் மக்கள் இருக்கும் பகுதியில்தான் இராமர் கடவுள். (வங்காளத்துக்கு துர்க்கா தான் பெரிய கடவுள். ஒரிசாவிற்கு - ஜகநாதர்) மற்றப் பல பகுதிகளில் இராமனை வணங்குகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு அதைவிட முதன்மையான கடவுள்கள் உண்டு. ஆனால், தமிழ்நாட்டைப் பொருத்தவரை இராமனுக்கு கோவில்கள் என்பதே அரிதாக உள்ளது. "தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் இராமன் என்ற கதாபாத்திரம், மதிக்கத்தக்க கதா பாத்திரமாக இல்லை. இராமர் என்பவர் மறைந்திருந்து வாலியைக் கொன்ற கோழை; காரணமில்லாமல் மனைவியை காட்டுக்கு துரத்திய ஆணாதிக்கக்காரன்; கடவுளை வணங்கியதற்காக சம்பூகனை கொன்ற பார்ப்பன ஆதரவாளன். இப்படிப்பட்ட எதிர்ப்புணர்வுகள் தான் தமிழ்நாட்டில் உள்ளதே தவிர ஆதரவான உணர்வலைகள் இல்லை" என்று வடநாட்டு ஆய்வறிஞர்கள் எழுதுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் பெரியாரியல் இயக்கம் அங்கு உண்டாக்கி வைத்திருக்கின்ற ஒரு நிலை என்பது, இராமரைப் பற்றி யாரும் புகழ்ந்து பேசுவதற்கு தயங்குகிற அளவிற்கு இருக்கின்றது என்று செய்தி வெளியிட்ட 'அவுட்லுக்' பத்திரிகை, "நாங்கள் பல பார்ப்பனர் களை பேட்டி கண்டோம். இராமனை ஒரு பக்கம் வணங்குவதும், ஒரு பக்கம் இராமனை செருப்பால் அடிப்பதும் இயல்பாக நடந்து கொண்டிருக்கின்றது என்று அவர்கள் சொன்னார்கள்" என்று எழுதுகிறது.

**(தொடரும்)**

## திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (6)

1917 "தென்னிந்திய மக்கள் சங்கம்" சார்பில் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மும்மொழிகளில் நாளிதழ்கள் வெளி வந்தன. ஆங்கில நாளிதழ் 'ஜஸ்டிஸ்' பிப்ரவரி 26-ல் வெளியிடப்பட்டது. இவ்விதழுக்கு ஆசிரியராகப் பணியாற்ற சி.கருணாகரமேனன் ஒப்புக் கொண்டிருந்தார். அன்னிபெசன்ட் சர். சி.பி.ராமசாமி (அய்யர்), கேசவ (பிள்ளை) ஆகியோர் குறுக்கிட்டு அவரைத் தடுத்தனர். எனவே ஜஸ்டிஸ் நாளிதழ் வெளிவர 6 நாட்களே இருக்கும் நிலையில் கருணாகரமேனன் 'பல்டி' அடித்து ஆசிரியராக இருக்க மறுத்து விட்டார். பின்னர், நாயரே கவுரவ ஆசிரியர் ஆனார். 'மதராஸ் ஸ்டாண்டர்ட்' பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த பி.ராமன் (பிள்ளை) துணை ஆசிரியர் ஆனார். தமிழ் நாளிதழ் 'திராவிடன்' ஜூன் மாதத்தி லிருந்து வெளிவரத் துவங்கியது. இவ்விதழின் ஆசிரியராக என்.பகவத்சலம் (பிள்ளை), துணை ஆசிரியர்களாக சாமி ருத்ர கோடீஸ்வரர், பண்டித வில்வபதி (செட்டியார்) ஆகியோர் பணியாற்றினர். ஏற்கனவே நடைபெற்று வந்த (நிறுவியது 1885-ல்) 'ஆந்திரப் பிரகா சிகா' என்ற தெலுங்கு வார இதழின் உரிமையைப் பெற்று, நாளிதழாக மாற்றி அதுவும் நடத்தப் பட்டது. இந்த தெலுங்கு நாளிதழின் ஆசிரியராக ஏ.சி. பார்த்தசாரதி (நாயுடு), துணை ஆசிரியர்களாக, பண்டித கானாலா ராகவையா (நாயுடு), நரசிம்மராவ் (நாயுடு) ஆகியோர் அமர்ந்தனர்.

தென்னிந்திய மக்கள் சங்கத்தின் சார்பில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற அரசியல் கட்சி அக்டோபரில் அமைக்கப்பட்டு, அதன் சட்ட திட்டங்கள் வெளியிடப்பட்டன. (1916-ல் தெ.இ.ந.உ. சங்கம் துவக்கப்பட்டாலும் அமைப்பு ரீதியாக சட்ட திட்டங்களுடன் இவ்வாண்டு செயல்படத் துவங்கியது) தென்னிந்தியாவில் உள்ள பார்ப்பனர் அல்லாத எவரும் இதில் உறுப்பினராக ஆகலாம் என்பது இச்சட்ட திட்டத்தில் உள்ள ஒரு முக்கிய விதி ஆகும். இந்த காலகட்டத்தில், பார்ப்பனர் அல்லாதாரின் இன எழுச்சியைத் தூண்டும் வகையில் நாடெங்கிலும் பார்ப்பனர் அல்லாதார் மாநாடுகள் நடைபெற்றன. ஆகஸ்டு 19 இல் பனகல் அரசர் தலைமையில் கோவையிலும், அக்டோபர் 27-28 இல் எம்.வெங்கடரத்னம் தலைமையில் கோதாவரி மாவட்டம் பிக்காவோவிலும், நவம்பர் 3-4 இல் பாரிஸ்டர் கே.சுப்பாரெட்டி தலைமையில் ராயல் சீமா-புலிவெந்தலாவிலும், நவம்பர் 11, 12 இல் தியாகராயர் தலைமையில் பெஜவாடாவிலும், டிசம்பர் 9 இல் புதுக்கோட்டை இளவரசர் கே.எஸ்.துரைராஜ் தலைமையில் சேலத்திலும் பார்ப்பனரல்லாதோர் மாநாடுகள் எழுச்சியுடன் நடைபெற்றன.

மேலும், நவம்பர் 3 இல் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை மாவட்ட தமிழ்த் தலைவர்கள்மாநாடு திருநெல்வேலியில் தெலப்ரோல் ஜமீன்தார் தலைமையில் நடைபெறறது. இந்த மாநாடுகள் அனைத்திற்கும் சிகரமாக டிசம்பர் 28-29 இல் சென்னை மவுண்ட்ரோடு (அன்றைய பெயர்) வெலிங்டன் தியேட்டரில் சென்னை மாகாண முதலாவது தென்னிந்திய நல உரிமைச் சங்க மாநாடு நடைபெற்றது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பது அது நடத்தி வந்த 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில நாளிதழின் பெயரால் 'ஜஸ்டிஸ் கட்சி' என்று ஆங்கிலத்திலும் அதன் மொழி பெயர்ப்பான 'நீதிக் கட்சி' என்றும் அழைக்கப் பெற்றது.

**(தொடரும்)**

**கழக வெளியீடான 'திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்' நூலிலிருந்து**

# பா.ஜ.க.வின் ‘தமிழ் தேசியம்’

சாதி எதிர்ப்பு - பார்ப்பன எதிர்ப்பு - இந்து மத எதிர்ப்புகளை புறந்தள்ளி விட்டு, மொழி அடிப்படையில் முன் வைக்கப்படும் தமிழ் தேசிய முழக்கத்தில் பா.ஜ.க.வினரும் பங்கேற்க தயாராகவே இருக்கிறார்கள் என்பதை அண்மையில் வந்துள்ள செய்திகள் உறுதி செய்கின்றன. தமிழக பா.ஜ.க. மதுரையில் ஏப்ரல் மாதத்தில் ‘தாமரை சங்கமம்’ என்ற பெயரில் மாநாடு நடத்தவிருக்கிறது. இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்த பா.ஜ.க. தலைவர் பொன். இராதா கிருட்டிணன், “மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் **2 தமிழ்த் தாய் சிலைகளின்** பவனி 8 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் (‘தினத்தந்தி’ 6.4.2012) என்று கூறியுள்ளார். மதுரை மாவட்ட பா.ஜ.க. தலைவர் ராஜரத்தினம் அளித்துள்ள பேட்டி ஒன்றில், “கன்யாகுமரியிலிருந்து தமிழன்னை சிலை மதுரைக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படவிருக்கிறது. தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க பா.ஜ.க.வால் தான் முடியும் என்பதோடு, **தமிழ் உணர்வு கலந்த தேசியமே தமிழக பா.ஜ.க.வின் பார்வை** என்பதைத் தெளிவுபடுத்தவே இந்த ஏற்பாடு” என்று கூறியுள்ளார். (‘குமுதம் ரிப்போர்ட்டர்’ 8.4.2012) இத்தகைய ‘ஊடுருவல்’ ஆபத்துகள் நேர்ந்து விடக் கூடாதே என்ற காரணத்தால்தான் பெரியார் ‘திராவிடர்’ என்ற பெயரைத் தேர்வு செய்து, தமிழின விடுதலையை முன்னெடுத்தார். ‘தமிழ்த் தாய்’ இந்துத்துவ பார்ப்பன சக்திகளுக்கும் தமிழ் தேசிய சக்திகளுக்கும் ‘தாயாகி’ விட்டபோது, அவரது புதல்வர்கள் சகோதரப் பாசத்துடன் குடும்பம் நடத்திவிடக் கூடாது என்பதே நமது கவலை.

### பால்ய விவாகங்கள்

குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து விட வேண்டும் என்ற பார்ப்பனியக் கொடுமைக்கு எதிராக பிரிட்டிஷ் இந்தியாவில் தடைச் சட்டம் வந்தபோது அதை எதிர்த்து கூக்குரலிட்டவர்கள் பார்ப்பனர்கள். பெரியாரின் ‘குடிஅரசு’ பார்ப்பனர்கள் ஓலங்களுக்கு பதிலடி தந்தும், சட்டத்தை ஆதரித்தும் உறுதியாக கட்டுரைகளை எழுதியது. ‘சுதந்திர’ இந்தியாவில் பெண்களின் திருமண வயது 18 ஆகவும், ஆண்களின் திருமண வயது 21 ஆகவும் உயர்த்தப்பட்டாலும், சட்டங்களை புறந்தள்ளி ‘பார்ப்பனிய’ பால்ய விவாகங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்து பார்ப்பனியம் சமூகத்தில் செல்வாக்குடன் தொடருவதையே இது வெளிப்படுத்துகிறது. இது தொடர்பாக அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ‘(ஏப்.5) வெளியிட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் 18 வயக்கு முன்பே நடக்கும் சட்ட விரோத ‘பால்ய விவாகங்களில்’ ஜார்கண்ட் முதலிடத்தையும் (13 சதவீதம்), ராஜஸ்தான் இரண்டாவது இடத்தையும் (10.1 சதவீதம்) பிடித்துள்ளது. இவையெல்லாம் இந்து பழமைவாதத்தில் ஊறிப் போன மாநிலங்கள். ஆனால், தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேல் இடதுசாரிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி ஆட்சி செய்த மேற்கு வங்க மாநிலம், இந்த பார்ப்பனியப் பிற்போக்குத்தனத்தில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருப்பதுதான் (8.2) அதிசயம். பீகாரும் (7.2 சதவீதம்), ஒடிசாவும் (6.3 சதவீதம்) கூட மேற்கு வங்கத்துக்குப் பின்னால் தான் வருகின்றன. டெல்லியில்தான் மிகக் குறைந்த அளவில் ‘பால்ய விவாகங்கள்’ நடக்கின்றன (0.5 சதவீதம்) தமிழ்நாடு, அய்ந்தாவது இடத்தில் இருக்கிறது (1.8. சதவீதம்).

‘யுனிசெப்’ நிறுவனம், உலக குழந்தைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் உலகில் நடக்கும் குழந்தைகள் திருமணங்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமாக இந்தியாவில்தான் நடக்கின்றன என்று கூறுகிறது. 2001-2010 ஆம் ஆண்டுகளுக்குள் ‘பால்ய விவாகங்கள்’ இந்தியாவில் 6.1 சதவீத அளவுக்கு குறைந்துள்ளன என்றும், அந்த புள்ளி விவரம் கூறுகிறது. குஜராத், இமாசலப் பிரதேசம், உ.பி., மகாராஷ்டிரா, ஒடிசா மாநிலங்களில் கடந்த 10 ஆண்டுகளில் பால்ய விவாகங்கள் குறையாது, பின் தங்கிய நிலையிலேயே இருப்பதை புள்ளி விவரம் சுட்டிக் காட்டுகிறது. இம்மாநிலங்களில் ‘திராவிடகட்சிகள்’ ஆட்சி எதுவும் நடக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. பெண்கள் கட்டாயத் திருமணத்தில் காலமெல்லாம் அவதிப்படாமல், மணவிலக்கு பெற்றுக்கொள்ளலாம் என்று பெண்களுக்கு சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை அதிக அளவில் பயன்படுததிய மாநிலம் தமிழ்நாடு. 2010 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே விவகாரத்துகள் அதிகம் பெற்ற மாநிலம் தமிழ்நாடு (8.8. சதவீதம்). கருநாடகம் இரண்டாவது இடத்தில் (8.2 சதவீதம்) உள்ளது. ‘விவாகரத்து’ பெறுவது ஒன்றும் சமூக அவலமல்ல என்ற சிந்தனை தமிழ்நாட்டில் மேலோங்கி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### கோயில் சொத்துகளை ஏப்பமிடும் பார்ப்பனர்கள்

கோயில் நிர்வாகத்தை அரசு கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி, தனி வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று ராமகோபாலன் ‘பிராமண சங்கம்’ இந்து முன்னணி போன்ற பார்ப்பன பார்ப்பனிய அமைப்புகள் கூப்பாடு போடுகின்றன. கோயில் சொத்துகளை சுருட்டுவதில் பார்ப்பனாகளே முன்னணியில் இருக்கிறார்கள் என்ற உண்மை அம்பலத்துக்கு வந்துள்ளது. மயிலாப்பூர் கபாலீசுவரன் கோயில் நிர்வாக அதிகாரி பரஞ்சோதி, கோயில் சொத்துகளை ஆக்கிரமித்துள்ளவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். 473 பேரில், இரண்டு பேர் மட்டுமே முஸ்லீம்கள், இந்துக்களில் ஒரு சில பார்ப்பனரல்லாதார் தவிர, பெரும்பான்மையினர், அய்யர், அய்யங்கார்கள்தான். கே.எம்.முன்ஷி ராஜ கோபாலாச்சாரி பார்ப்பனர்களால் தொடங்கப்பட்ட பாரதிய வித்யாபவன், ‘காபாலீசுவரனுக்கு’ 35 லட்சம் ரூபாய் வாடகை தரவில்லை. 1903 ஆம் ஆண்டு பார்ப்பனர்கள் தொடங்கிய மயிலாப்பூர் கிளப் ‘கபாலீசுவரனுக்கு’ தரவேண்டிய வாடகை பாக்கி 3.57 கோடி, ‘புதிய ஜனநாயகம்’ பத்திரிகை இதை விரிவாக அம்பலப்படுத்தியுள்ளது. தில்லை நடராசன் கோயில் நிர்வாகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தீட்சப் பார்ப்பனர் கோயில் சொத்துகளை நகைகளைத் திருடியதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதால், சென்னை உயர்நீதிமன்றம், தில்லை நடராசன் கோயிலை அறநிலையத் துறையிடம் ஒப்படைத்து உத்தரவிட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றுள்ள தீட்சதர்கள், தங்களில் ஒருவர்தான் ‘நடராசப் பெருமான்’ என்றும், எனவே கோயிலும், அதன் சொத்துகளும் தங்களின் ஆன்மிக உரிமை என்று வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

**பெ. மணியரசன் கூறுகிறார்...**

“தமிழர் ஒற்றுமை என்ற பெயரில் சாதி ஒடுக்குமுறையைக் கண்டு கொள்ளாமல் இருக்க மாட்டோம். சாதி ஒடுக்கு முறை நீங்கும்போதுதான் உண்மையான தமிழர் ஒற்றுமை ஏற்படும் என்பது எங்கள் கொள்கை.”

**– த.தே.பொ.க. செயலாளர் பெ. மணியரசன் பேட்டியிலிருந்து**

**– ‘கருக்கல்’ இதழ் மார்ச்–ஏப். 2012**

### பெரு முதலாளிகளுக்கு...

நாடாளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜி தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையில் பெரு முதலாளிகள் மீதான கம்பெனி வரி மற்றும் நேர் முகவரிகளில் ரூ.4500 கோடி வரை சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதை ஈடு கட்டுவதற்காக எக்சைஸ் வரி, சேவை வரி ஆகியவை 10-லிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் 73 ஆயிரம் கோடி கூடுதல் வருமானம் கிடைக்கும். பெரும் முதலாளிகளிடமிருந்து சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட வரிகளையே வசூலிக்காமல் விட்டது 65,29,000 கோடி. இதில் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்காமல் விட்டது 50,000 கோடி. நாட்டின் நிதிப் பற்றாக் குறையின் அளவே ரூ.5,21,000 கோடிதான். விதிக்கப்பட்டிருந்த வரிகளை கண்டிப்பாக வசூலித்திருந்தாலே ரூ.8000 கோடி நிதி உபரியாக இருந்திருக்கும். ஆனால், நிதிப் பற்றாக்குறை அதிகரிக்காமல் இருப்பதற்காக மக்களின் சொத்தாகிய பொதுத் துறை சொத்துகளில் ரூ.30,000 கோடி அளவுக்கு விற்பனை செய்ய அரசு முன் வந்துள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் செல்லப் பிள்ளையாகி மக்களை வாட்டி வதைக்கிறது, இந்திய ஆட்சி!

### காந்தி – தேசத் தந்தையா?

உ.பி. மாநிலம் லக்னோவில் 6 ஆம் வகுப்பு படிக்கும் மாணவி அய்ஸ்வர்யா, தனது பாடப் புத்தகத்தில் ‘காந்தி தேசத் தந்தை’ என்று படித்த போது ஒரு சந்தேகம் எழுந்தது. இந்தப் பட்டத்தை யார் கொடுத்தார்கள் என்று பெற்றோரிடம் கேட்க, அவர்களுக்கு விடை தெரியவில்லை. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பல தகவல்களைப் பெற்று வரும் அவரது தாயார் ஊர்வசி சர்மா ஆலோசனையின் பேரில் பிரதமர் அலுவலகத்துக்கு எழுதி கேட்டார். தேசத் தந்தை என்பதற்கான அரசு உத்தரவோ, ஆவணமோ ஏதும் கிடைக்காத பிரதமர் அலுவலகம், உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பியது. அங்கும் எந்த ஆவணமும் இல்லாத நிலையில் தொல் பொருள் ஆய்வகத்துக்கு கடிதத்தை அனுப்பியது. உள்துறை ஆய்வகத்தின் தகவல் அதிகாரி ஜெயப் பிரகாஷ் ரவீந்திரன், இதற்கான பதிலைத் தர முடியாத நிலையில் அய்ஸ்வர்யாவே நேரடியாக ஆய்வகம் வந்து ஏதேனும் ஆதாரங்கள் இருக்கிறதா என்று தேடிப் பார்க்கட்டும் என்று பதில் கூறி விட்டார். தேசத் தந்தை என்று காந்தி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையிலேயே அவர் தேசத் தந்தையாக்கப்பட்டு, தேசிய சின்னமாக்கப் பட்டு காந்தியை அவமதிப்பது தேச விரோத குற்றமாக்கப்பட்டுள்ளது.

பார்ப்பனர்கள்தான் காந்தியை ‘மகாத்மா’ வாக்கினார்கள் என்றும், ‘என்னிடம் பெரும் தொகையைக் கொடுங்கள். நான் கழுதையைக்கூட மகாத்மாவாக்கிக் காட்டுகிறேன்’ என்றும் பெரியார் கூறியது எவ்வளவு சரியான உண்மை என்பதும் இதன் மூலம் உறுதியாகியுள்ளது. உண்மையில், 1944 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் தேதி சிங்கப்பூரில் வானொலி உரை ஒன்றில், சுபாஷ் சந்திரபோஸ் காந்தியை ‘தேசத் தந்தை’ என்று பேசினார். அதைத் தவிர வேறு எந்த அரசு ஆணையோ, ஆவணமோ, அப்படிப் பிறப்பிக்கப்படவில்லை.

**– ‘இரா’**

### கழகத் தோழர்களை தாக்கிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர்

கிருட்டிணகிரி மாவட்டம் நீலகிரியில் கழகத் தோழர்கள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த கழகத் தோழர்கள் ஓசூர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தபோது மருத்துவமனைக்குள்ளும் நுழைந்து தாக்கினர். இதனால் மருத்துவர்களும் மருத்துவமனை ஊழியர்களும் அதிர்ச்சியடைந்தனர்.

நீலகிரி கிராமத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினராக உள்ள இராமச்சந்திரா என்பவரின் அண்ணன் வரதராசன் என்பவரே வேன்களில் ஆட்களை அழைத்து வந்து 6 ஆம் தேதி இரவு ஒரு மணிக்கு கழகத்தினர் மீது தாக்குதலை நடத்தியுள்ளார். இந்த கிராமத்தில் நடந்த பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிட்ட சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் குடும்பத்தினரை எதிர்த்து வேறு அரசியல் கட்சிகள் போட்டியிடாத நிலையில் கழகத்தைச் சார்ந்த தோழர் மாருதி, தனது குடும்பத்தவரை வேட்பாளராக நிறுத்தியதால் ஆத்திரமடைந்தனர். ராமச்சந்திரனும் அவரது ஆதரவாளர்களும் பெரியார் திராவிடர் கழகத்தை கலைத்துவிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து விடுமாறு கட்டாயப்படுத்தினர்.


தோழர்கள் அதை ஏற்க மறுத்து வருவதால் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. கழகத் தோழர் மாருதி, அவரது தந்தை, தம்பி ஆகியோரை சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரனின் அண்ணன் வரதராசன் ஒரு கூட்டத்தினருடன் வந்து வீடு புகுந்து தாக்கினார். காப்பாற்ற வந்த கழகத்தினரும் தாக்கப்பட்டார்கள். காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றவர்களையும் தாக்கினர். கழகத் தோழர்கள் காவல் நிலையத்தில் புகார் தந்தனர். காவல் துறையோ, தாக்கியவர்களை கைது செய்யாமல், கழகத் தோழர்களின் உறவினர்களையே கைது செய்துள்ளது. மாவட்ட காவல் துறை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு கழகத் தலைவர் கொளத்தூர், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# லஞ்சம் வாங்குவதற்கு சித்திரவதை செய்யும் இராணுவம்–3

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்ந்து வெளிவரத் தொடங்கியுள்ளன. ‘ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்’ எனும் சர்வதேச மனித உரிமை அமைப்பு, போர் முடிந்த பிறகு இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களை, கடந்த 13 ஆம் தேதி அய்.நா.வின் அறிக்கையாக சமர்ப்பித்தது. இலங்கை அரசுக்கு உலக அரங்கில் மேலும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ள அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் இவை:

- பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழோ, சந்தேகத்தில் பேரிலோ கைது செய்யப்படுகிறவர்களுக்கு எந்த முறையான சட்ட நடைமுறைகளையும் இலங்கை அரசு பின்பற்றுவது கிடையாது. ‘ஆம்னஸ்ட்டி இன்டர் நேஷனல்’ இப்படி ஏராளமான வழக்குகளை கண்டறிந்துள்ளது.
- பிரிட்டனில் செயல்படும் ஒரு மனித உரிமை அமைப்பு (Freedom from torture) இலங்கையில் செயல்படும் தமது பிரதிநிதிகளிடமிருந்து பெற்ற புகார்களை அறிக்கையாக 2011 டிசம்பரில் வெளியிட்டுள்ளது. இதன்படி 32 மனித உரிமை களப் பணியாளர்கள் சித்திரவதை செய்யப்பட்டு, ராணுவ தடுப்பு முகாம்களிலும் காவல் நிலையங்களிலும் சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ளது. இவர்கள் குடும்பத்தினருக்கும் தெரிவிக்கப்படவில்லை. நீதி மன்றத்தை அணுகும் வழிமுறைகளும் முற்றாக தடுக்கப்பட்டுவிட்டன.
- இலங்கை மனித உரிமைகளுக்கான ஆணையம், பூசா தடுப்புக் காவல் முகாமில் நேரில் சென்று ஆய்வு நடத்தியதில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு எதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளோம் என்பதே தெரியவில்லை என்று 2008 ஆம் ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- விடுதலைப் புலிகளுக்கு உதவினார் என்ற சந்தேகத்தில் கொழும்பு நகரில் தடுத்து சிறை வைக்கப்பட்ட ரவீந்திரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற அய்ரோப்பிய குடிஉரிமை பெற்ற ஈழத் தமிழர் பூசா சிறையிலுள்ள ரகசிய புலனாய்வு துறை சித்திரவதை முகாமில் 2007 செப்டம்பர் 5 ஆம் தேதியிலிருந்து சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டுள்ளார். பிறகு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.




அந்த சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட வேண்டிய காலக்கெடு முடிந்த பிறகும், சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரது மனைவி நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு (ஹேபியஸ் கார்பஸ்) மீதான விசாரணையே 18 மாதங்களாக 16 விசாரணைகளாக நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் தமக்கு தொடர்பு உண்டு என்று ராணுவம் ஒப்புக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவதை அவர் மறுப்பதே இதற்குக் காரணம். அவர் தனிமையாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அய்.நா.வின் சட்டவிரோத காவல் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் இதை சுட்டிக்காட்டி கண்டித்துள்ளது.

- இலங்கை அரசே நியமித்த கற்ற பாடம் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணையமும் தனது அறிக்கையில் எந்தக் குற்றமும் சாட்டப்படாமலே ஏராளமானவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஒப்புக் கொண்டுள்ளது.
- கொழும்பு நகரத்திலும் அதன் சுற்றுப் பகுதியிலும் அமைச்சரவையே நியமித்த ஒரு சிறப்பு புலனாய்வுக்குழு ரகசிய இடங்களில் பலரை விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தில் பிடித்துச் சென்று சித்திரவதை செய்து கொலை செய்து வருகிறார்கள். நேரில் பார்த்தவர்களிடமிருந்து தகவல்கள் ஆம்னஸ்டி இன்டடர்நேஷனுக்கு கிடைத் துள்ளன.
- விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை கப்பல் படை புலனாய்வுத் துறை பிடித்து சித்திரவதை செய்து தனது உளவாளியாக மாற்றியுள்ளது. அவர் மூலம் பலரைப் பிடித்து வந்து சித்திரவதை செய்து சாகடிக்கிறார்கள். இதில் 15, வயதுக்குட்பட்ட சிறுவர்களும் அடங்குவர்.
- இப்படி அடைத்து வைக்கப்பட்ட ஒருவரிடமிருந்து வெளியே ரகசியமாக குடும்பத்தாருக்கு 2010 பிப்.1 இல் அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் ஆம்னஸ்ட்டி இன்டர்நேஷனுக்கு கிடைத்துள்ளது. தன்னைத் தேடும் முயற்சிகளில் இறங்க வேண்டாம் என்று அந்த கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.
- வவுனியாவிலுள்ள 211 ராணுவ அலுவலகங்கள் மற்றும் ‘புளோட்’ என்ற அமைப்பின் அலுவலகங்களில் சட்ட விரோதமாக கடத்தப்பட்டவர்கள் கொண்டு வரப்பட்டு, சித்திரவதை செய்யப்படுவது குறித்து ரகசிய தகவல்கள் ஆம்னஸ்டி இன்டர்நேஷனுக்கு கிடைத்துள்ளது.
- கல்முனையைச் சேர்ந்த 45 வயதுள்ள கணவனை இழந்த பெண், இலங்கை அரசு நியமித்த ஆணையத்தின் முன் மட்டக்களப்பு காவல் நிலையத்தில் தன்னை சட்டவிரோத காவலில் வைத்து சித்திரவதை செய்ததை வாக்கு மூலமாக தந்துள்ளார். தன்னுடன் இருந்தவர்களில் 5 பேர் மரணமடைந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.
- ஆர்.டி. விக்கிரமசிங்கே என்ற முன்னாள் ராணுவத்திலிருந்த ஆசிரியர், கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார். தமிழில் எழுதப்பட்ட 5 கடிதங்களை அவரிடம் காட்டி, அதை சிங்களத்தில் மொழி பெயர்க்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். 5 போலீசார் பற்றிய குற்றச்சாட்டுகள் அதில் இருந்தன. அதை மிகைப்படுத்தி, சிங்கள போலீசாரை மிரட்டவே இந்த ஏற்பாடு.
- இப்படி சித்திரவதைக்குட்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்கள் குடும்பத்திடமிருந்து பெரும் தொகையை லஞ்சமாக வாங்கிக் கொண்டு, விடுவிப்பதாக ‘சித்திரவதையிலிருந்து விடுதலை’ என்ற மனித உரிமை அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுளள்து. 2011 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் இதுபோன்ற 35 லஞ்சம் பெற்ற சம்பவங்களை பட்டியலிட்டுள்ளது.

## கல்பாக்கம் அணுமின் நிலைய கதை என்ன?

கல்பாக்கம் அணுமின் நிலையம் - அதன் இலக்கு உற்பத்தி திறனில் 30 சதவீதத்தைத் தாண்டியதே இல்லை

1969 இல் கட்டுமானத்தைத் துவங்கிய மெட்ராஸ் அட்டாமிக் பவர் ஸ்டேஷன் என்ற கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் அணு உலைகளின் முதல் யூனிட் தன் மின் உற்பத்தியை ஜூலை 1983 இல் துவங்கியது. இது 235 மெகாவாட் திறனுள்ள அணு உலையாகும். இரண்டாவது யூனிட் 23.1.1986 இல் தன் உற்பத்தியைச் துவங்கியது.

1983-84-லிருந்து 2007-08 ஆம் ஆண்டு வரையிலான 25 ஆண்டுகளில் இந்த அணுமின் நிலையமானது -

50 சதவீதம் மேலாக இரண்டு ஆண்டுகளிலும் (1987-88 = 53.42%, 2006-07 = 58.26%)

40 % - 50% உற்பத்தியை நான்கு ஆண்டுகளிலும் (1984-85 = 45.04%, 1985-86 = 48.46%, 1986-86 = 41.71%, 2005-06 = 40.58%)

30% - 40% - உற்பத்தியை நான்கு ஆண்டுகளிலும் (1988-89 = 30.46%, 2003-04 = 33.39%, 2004-05 = 321.59%, 2007-08 = 36.82%)

20% - 30% உற்பத்தியை ஏழு ஆண்டுகளிலும் (1990-91 = 25.89%, 1991-92 = 21.03%, 1994-95 = 22.77%, 1998-99 = 21.07%, 1999-2000 = 20.62%, 2000-2001 = 24.57%, 2001-2002 = 20.79%)

10% - 20% உற்பத்தியை எட்டு ஆண்டுகளிலும் (1983-84 = 17.95%, 1989-90 = 12.91%, 1992-93 = 17.92%, 1993-94 = 12.63%, 1995-96 = 11.59%, 1996-97 = 16.47%, 1997-98 = 16.67%, 2002-03 = 13.91%) செய்தது.

ஆக, இந்த அணுமின் நிலையம் செயல்பட்ட 25 ஆண்டுகளில் 15 ஆண்டுகளில் 30% க் குக் கீழாகவே மின் உற்பத்தியை செய்தது.[1] ஆக, மின்சார நெருக்கடியான காலகட்டத்தில்கூட அணுமின் நிலையத்தால் எவ்வித உதவியையும் செய்ய முடியவில்லை.

Source: 1. Calculated from - TNEB Satistics at a Glance, 1996-1997 (p-25); 2007-2008 (p-18)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


## சங்கமித்ரா முடிவெய்தினார்

நெருப்பு எழுத்துகளால் ஆரியத்தை அலற வைத்த ஆற்றல்மிகு எழுத்தாளர் சங்கமித்ரா (72) முடிவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். கடந்த சில மாதங்களாக இரைப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, திருச்சி கி.ஆ.பெ. மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த அவர், கடந்த 7 ஆம் தேதி காலை முடிவெய்தினார். 1970களில் ‘விடுதலை’ நாளேட்டில், ‘காஞ்சிப் பெரியவாளின் கல்கி முகாரி’ என்று எழுதத் தொடங்கிய அவர், தனது எண்ணங்களை எழுதிக் குவித்துக் கொண்டே இருந்தார். ‘பெரியார் தமிழ்ப் பேரவை’ என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வந்த அவர், வே. ஆனைமுத்து அவர்களுடன் வட மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்து, வகுப்புவாரி உரிமை, பெரியார் சிந்தனைகளை ‘இந்தி’ மொழியில் பேசி பரப்பி வந்தார். ‘ஸ்டேட் வங்கி’யில் உயரதிகாரியாகப் பணியாற்றி, பார்ப்பன அதிகாரிகளின் பூணூல் வெறி சகிக்காது, பதவியை உதறி வெளியே வந்த அவர், பார்ப்பன அதிகார வர்க்கத்தை தனது எழுத்துகளால் தோலுரித்துக் காட்டி வந்தார். திருச்சி தென்னூரில் அவரது உறவினர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், மற்றும் திருச்சி மாவட்டக் கழகத் தோழர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th April 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஏப்ரல் 19, 2012 | புரட்சி 11 | முழக்கம் 14 | விலை: ரூ.2.50

## சமூக ஒற்றுமையை சீர்குலைத்து வெறுப்பை வளர்க்கும் சாதிய வாழ்க்கைக்கு முடிவு கட்டுவோம்

# பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் கழகத்தின் 15 நாள் பரப்புரை இயக்கம் தொடங்கியது

## உசிலம்பட்டியில் சாதி வெறியர்கள் கல்வீச்சில் தோழர் படுகாயம்; சலசலப்புகளுக்கு அஞ்சாமல் பயணம் தொடருகிறது

இரட்டைக் குவளை, இரட்டை சுடுகாடு போன்றவற்றிற்கு எதிராக பரப்புரை நடத்திய பெரியார் திராவிடர் கழகம், இந்த ஆண்டு ஊர் – சேரி என்று இருப்பதற்கு எதிராக, பரப்புரை பயணத்தை துவங்கியுள்ளது. அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 அன்று இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில், சாதி ஒழிப்புப் போராளி தியாகி இமானுவேல் சேகரன் நினைவிடத்தில், சாதி ஒழிப்பு உறுதி மொழி ஏற்றுக் கழகம் பயணத்தை துவங்கியது.

தாழ்த்தப்பட்டவர் மத்தியில் மட்டுமே பேசிய சாதி ஒழிப்பு இயக்கங்களுக்கு மாறாக, பிற்படுத்தப் பட்டவர்கள் இருக்கும் பகுதிகளுக்கு சென்று, அவர்களிடத்திலே தீண்டாமை கொடுமைகளை விட்டொழிக்குமாறு வலியுறுத்தி, பிற்படுத்தப்பட்ட மக்களிடையே ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பரப்புரை செய்து வரும் கழகம், இவ்வாண்டு தாழ்த்தப்பட்ட அமைப்புகளோ, சாதி ஒழிப்பு அமைப்புகளோ இதுவரை நுழைய முடியாத ஊர்களுக்கும் செல்வது என்று புறப்பட்டுள்ளது.

முதல் இரண்டு நாட்கள் எந்த இடையூறும் இல்லாமல் நடந்த பரப்புரை மூன்றாவது நாளான 16.4.2012 திங்கள்கிழமை அன்று இரவு மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பிரச்சாரத்தை துவக்கியவுடன் தோழர்கள் மீது மர்மநபரால் கல் வீசப்பட்டது. இராவணன் இடது கை மணிக்கட்டு அருகே பலமான காயம் ஏற்பட்டது. பாது காப்புக்காக இருந்த காவல் துறை அதிகாரி ஒருவர், இராவணனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அதன் பின்னரும் தோழர்கள் அஞ்சாமல், எந்தவிதமான சலசலப்பும் இல்லாமல், எந்தவிதமான தடைகள் வந்தாலும், நமது கருத்துகளை பதிவு செய்ய வேண்டும் என்ற உறுதியோடு பரப்புரை பணிகளை நிறுத்தாமல் செய்தனர். தலைமைக் கழகப் பேச்சாளர் கா.சு.நாகராசு, சமூக ஒற்றுமையை சீர்குலைத்து வெறுப்பை வளர்க்கும் பார்ப்பனிய அமைப்பான சாதியைவிட்டு ஒழிக்க வலியுறுத்திப் பேசினார். சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார். சிலர், கழக வெளியீடுகளை வாங்கியும் சென்றனர். சாதி ஒழிப்பு சம்பந்தமான பிரச்சாரம் அந்த பகுதியில் இவ்வளவு நேரம் நடந்தது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத் தகுந்தது.

பயணம் துவங்குவதற்கு முதல் நாளான 13.4.2012 அன்று இரவே பயணத்தில் பங்கேற்கும் தோழர்கள் அனைவரும் திண்டுக்கல் கருந்திணை இல்லம் வந்து சேர்ந்தனர். அடுத்த நாள் காலை ஒரு தனி சிற்றுந்தில் ஒலி பெருக்கிகளை அமைத்து பரமக்குடி நோக்கிப் புறப்பட்டனர். தியாகி இமானுவேல் சேகரன் பேரவை (தி.இ.பே) தோழர்களால் பயணக் குழுவினர் வரவேற்கப்பட்டனர். பரமக்குடி தேவேந்திர பண்பாட்டு கழக திருமண மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தியாகி இமானுவேல் சேகரன் பேரவை பொதுச் செயலாளர் சந்திரபோசு மற்றும் அந்த அமைப்பைச் சார்ந்த சுமார் 20 பெண்கள் உள்பட 50 தோழர்கள், கழகத் தோழர்கள், பயணக் குழுவினர் என 80 தோழர்கள் மாலை 6 மணிக்கு, தியாகி இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் திரண்டு சாதி ஒழிப்பு உறுதிமொழி



ஏற்றனர். கழகத் தலைவர் உறுதிமொழியை சொல்ல, அதை அனைவரும் வழிமொழிந்தனர்.

இரவு 7 மணிக்கு பரமக்குடி காந்தி சிலை அருகே பரப்புரையின் துவக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பறை முழக்கத்துடன் துவங்கிய இப்பொதுக் கூட்டத்தில் தி.இ.பே. தோழர் சந்திரசேகர், சாதி ஒழிப்புப் பாடல் ஒன்று பாடினார். தோழர்கள் திருச்சி புதியவன், சூலூர் வீரமணி, வெள்ளமடை நாகராசு ஆகியோர் உரையாற்றி யதைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்ட திராவிடர்

4 ஆம் பக்கம்

## ஆனூராருக்குப் ‘பெரியார் ஒளி’ விருது

### நெய்வேலியில் நடந்த அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் தொல். திருமாவளவன் வழங்கினார்



2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சமூகத் தொண்டாற்றி வரும் தலித் அல்லாதவர்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டி வருகின்றனர். 2012 ஆம் ஆண்டிற்கான ‘பெரியார் ஒளி’ விருது கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் செகதீசனுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதேபோல் ‘அம்பேத்கர் சுடர்’ விருது முதுபெரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் என். வரதராஜனுக்கும், ‘அயோத்திதாசர் ஆதவன்’ விருது ஆய்வறிஞர் கந்தசாமிக்கும் ‘காமராசர் கதிர்’ விருது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜெயகுமாருக்கும், ‘காயிதே மில்லத் பிறை’ விருது பேராசிரியர் அப்துல் காதருக்கும், ‘மொழி ஞாயிறு’ விருது பேராசிரியர் க.பா.அறவாணனுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த நாள் அன்று மாலை 7 மணிக்கு நெய்வேலியில் நடந்த எழுச்சியான விழாவில் வழங்கப்பட்டது. விழாவில் ஆனூராரின் சிறப்புகளை ஒரு பாராட்டுப் பத்திரமாக பதிவு செய்து இரண்டடி நீளமுள்ள பாராட்டுப் பத்திரமாகவும், இரண்டு கைவிரல்கள் மேலும் கீழுமாக இணைந்த அளவில் இரண்டடி உயருமுள்ள ஒரு நினைவுப் பரிசும், பெரியார் ஒளி என்று எழுதப்பட்ட பட்டுத் துணியினாலான பதாகையும் அணிவிக்கப்பட்டு, ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலையும் பலத்த கரவொலிக்கிடையே வழங்கப்பட்டது.

தனது ஏற்புரையில் ஆனூரார், “அம்பேத்கர் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு இந்து மதத்தைப் புறக்கணிப்பதே அம்பேத்கருக்கு நாம் செய்யும் அரிய தொண்டாகும்” என்று குறிப்பிட்டார். நிகழ்ச்சி இரவு 10.45 மணிக்கு முடிவுற்றது. சென்னையிலிருந்து கழகத் தோழர்கள் வேனிலும், மகிழுந்திலும் சென்று கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து, ஆனூராரையும் வாழ்த்தினர்.

**தலையங்கம்**

## ‘மனுதர்மத்துக்கு’ மரண அடி

‘சூத்திரர்களுக்கு கல்வி தரக் கூடாது’ என்று கூறியது ‘மனுதர்மம்’. அந்த பார்ப்பன மனுதர்மக் கோட்பாட்டுக்கு தந்துள்ள மரண அடிதான். 2009 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட குழந்தைகளுக்கான கட்டாய இலவச கல்வித் திட்டம், 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வியை இலவசமாக கட்டாயமாக வழங்குவதை உறுதி செய்யும் இத் திட்டத்தை எதிர்த்து தனியார் பள்ளிகள் தொடர்ந்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. தலைமை நீதிபதி எஸ்.எச். கபாடியா, நீதிபதி சுவதந்தர் குமார் ஆகியோர், அரசு கொண்டு வந்த சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளார், நீதிபதி கே.எஸ். இராதா கிருஷ்ணன். இத் தீர்ப்பு அரசு நிதி உதவி பெறாத மைனாரிட்டி கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என்ற மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார். பெரும்பான்மை தீர்ப்பின்படி அரசின் இந்த சட்டம், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறாத மைனாரிட்டி அல்லாத பள்ளிகளுக்கு பொருந்தும். தனியார் பள்ளிகள், 25 சதவித இடங்களை ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்ய இந்த சட்டம் வற்புறுத்துகிறது. அரசு உதவி பெறாத மைனாரிட்டி நிறுவனங்களுக்கு இது பொருந்தாது என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

அரசு உதவி பெறாத மைனாரிட்டி கல்வி நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டுள்ள விதிவிலக்குகூட மறுபரிசீலனை செய்வதே நல்லது. இந்த நிறுவனங்களில் மொழி, மத சிறுபான்மையினரைவிட ஏனைய பிரிவினர்தான் அதிகமாக படிக்கிறார்கள். தனியார் பள்ளிகளைப் போலவே தான் இவைகளும் வணிக நோக்கில் செயல்படுகின்றன. அரசியல் சட்டம் வழங்கியுள்ள (உறுப்பு 29 மற்றும் 30) உரிமைகள் பெருமளவில் தவறாகவே பயன்படுத்தப்படுகின்றன. இத்தீர்ப்பு தொடர்பாக உச்சநீதி மன்றம் வெளியிட்டுள்ள வேறு சில கருத்துகள் மிகவும் முக்கியம் பெற்றவை.

“கல்விக்கான அடிப்படை உரிமையை அரசியல் சட்டம் வலியுறுத்தும் உயிர் வாழ்தலுக்கான அடிப்படை உரிமை (பிரிவு 21ஏ)யுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். ஒரு குழந்தைக்கான அடிப்படைக் கல்வி உரிமை மறுக்கப்படுவதன் மூலம் அந்தக் குழந்தையின் கவுரவமாக உயிர் வாழும் உரிமையும், கருத்துகளை வெளியிடும் அடிப்படை உரிமை யான கருத்துரிமையும் (பிரிவு 19(1)(ஏ) பறிக்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டம், ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த குழந்தைகளின் பொருளாதார உளவியல் ரீதியான தடைகளை நீக்கியிருக்கிறது. வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் கல்வியைப் பெறுவதில் சந்திக்க வேண்டியிருந்த இடர்ப்பாடுகளை அகற்றியுள்ளது. அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதால் ஜனநாயகத்தின் சமூக ஒருங்கிணைப்பு வலிமைப்படுத்தப்பட்டுள்ளது” என்று நீதிபதிகள் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

“சூத்திர - பஞ்சம மக்களுக்கு” மனுதர்மத்தால் தடை செய்யப்பட்ட கல்வி உரிமையை மீட்க பெரியாரின் திராவிடர் இயக்கம் தொடர்ந்து போராடியது. நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலேயே சென்னை மாநகராட்சியிலே முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவு திட்டம், காமராசர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுதும் விரிவாக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த காலத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கும் திட்டமாகி, பிறகு தி.மு.க. ஆட்சியில் சத்துணவுடன் வாரத்துக்கு இரண்டு நாள் முட்டையுடன் கிடைக்கக்கூடிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. பள்ளிக் கல்வியை பரவலாக அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்ல “திராவிட” கட்சிகளின் ஆட்சிகள் மேற்கொண்ட முனைப்பான திட்டங்கள் இவை. உச்சநீதிமன்றமே தமிழகத்தில் தொடங்கி வைக்கப்பட்ட இத் திட்டத்தை இந்தியா முழுதும் அனைத்து மாநில அரசுகளும் நடைமுறைப்படுத்த ஆணையிட்டது.

“ஒரு நாணயமான சர்க்கார் மக்கள் படித்து அறிவு பெற வேண்டும் என்றே கருத வேண்டும். மக்கள் படித்தால் அரசாங்கத்துக்கு தொந்தரவு, மதத்திற்கு ஆபத்து என்றல்லவா கருதி வந்தார்கள்?” என்று கூறிய பெரியார், “54 கோடி மக்களில் 39 கோடி மக்கள் தற்குறிகள் என்றால் இதற்குப் பெயர் சுதந்திர ஆட்சியா? அடிமை ஆட்சியா?” (‘விடுதலை’ 15.8.1972) என்று கேட்டார். சேலம் மாவட்டத்தில் கள்ளுக்கடை மூடியதால், அரசுக்கு ஏற்பட்ட பொருளிழப்புக்கு தமிழகம் முழுதும் மூவாயிரம் பள்ளிகளை மூட உத்தரவிட்ட பார்ப்பன முதல்வர் ராஜகோபாலாச்சாரியைத்தான், தேர்ந்த நிர்வாகி, அரசியல் சாணக்கியர் என்று பார்ப்பனர்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார்கள். அதே ராஜகோபாலாச்சாரி தான் அப்பன் தொழிலை பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலே அரை நாள் செய்ய வேண்டும் என்ற குலக் கல்வித் திட்டத்தை தொடக்கப் பள்ளிகளிலேயே கொண்டு வந்தார். அதை எதிர்த்து பெரியார் கொட்டிய போர் முரசுதான் ஆச்சாரியாரை பதவியை விட்டே ஓட வைத்தது.

ஆச்சாரியாரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த காமராசர், குலக் கல்வித் திட்டத்தை ஒழிக்க அவரால் மூடப்பட்ட பள்ளிகளைத் திறந்து, மேலும் கூடுதல் பள்ளிகளைத் திறக்க முன் வந்தபோது, இதோ பச்சைத் தமிழர் ஆட்சி என்று தோளின் மீது காமராசரைத் தூக்கிக் கொண்டு ஆடியவர் பெரியார். இந்த வரலாறுகளின் தொடர்ச்சியாகவே இப்போது வந்திருக்கிற சட்டத்தையும் பார்க்கிறோம். அடிப்படைக் கல்வி என்பது, உயிர் வாழும் உரிமைகளிலிருந்து பிரிக்க முடியாத ஒன்று என்று உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மனு தர்மத்துக்கும், ஆச்சாரியார் பரம்பரைக்கும் ஆரியத் திமிருக்கும் விழுந்துள்ள மரண அடி. பெரியார் போராட்டங்களுக்கு கிடைத்த பெரும் வெற்றி.

## சேலம் கிழக்கு கழகம் சாதனை; கழக ஏட்டுக்கு 580 சந்தாக்கள்



2.4.2012 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சேலம் தாதகாப்பட்டி பெரியார் உடற்பயிற்சி மையத்தில் சேலம் கிழக்கு மாவட்ட பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்க, மாவட்ட தலைவர் சக்திவேல் முன்னிலை வகித்தார்.

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா ஆயிரம் சேர்ப்பது என முடிவு செய்து முதல் தவணையாக 580 சந்தாக்கள் தலைமைக்கு அனுப்பப்பட்டது. மீதி சந்தாக்களை விரைவில் வசூலித்து ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது.

மே மாதம் 26 ஆம் தேதி, ஓமலூரில் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்துடன் நாத்திகர் விழா நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. ஏற்காடு கோடை விழாவின்போது, அரசு கண்காட்சி சாலையில் ஒரு அறை வாடகைக்கு எடுத்து, புகைப்பட கண்காட்சி மற்றும் புத்தக விற்பனை செய்வது என்றும், ஜூன் மாதம் ஏற்காடு பகுதியில் படிப்பகம் அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மே 6 ஆம் தேதி ஆத்தூரிலும், ஜூன் மாதம் அம்மாபேட்டையிலும் பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், சேலம் நகரம் மற்றும் இளம்பிள்ளை பகுதிகளில் தொடர் தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர்கள் இளம்பிள்ளை முத்துமாணிக்கம், நங்கவள்ளி அன்பு, மாவட்ட செயலாளர் டேவிட், மாவட்ட துணைத் தலைவர் ஏற்காடு பெருமாள், துணைச் செயலாளர் ஆத்தூர் மகேந்திரன், பொருளாளர் சேலம் வீரமணி, மாநகர செயலாளர் மூனாங்கரடு சரவணன், மாவட்ட இளைஞரணித் தலைவர் கு.சவுந்திரராசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### விளக்கக் கூட்டம்

2.4.2012 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சேலம் சீலநாய்க்கன்பட்டி சிவசக்தி நகரில், சேலம் மாநகர பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சாமியார்களின் மோசடிகளை விளக்கும் மந்திரமல்ல தந்திரமே என்ற கலை நிகழ்ச்சியுடன் துவங்கிய இப்பொதுக் கூட்டத்திற்கு, சிவசக்தி நகர் பகுதி கழகத் தோழர் வெ.ப.அம்பிகாபதி தலைமையேற்க, சோ.பிரபு வரவேற்புரையாற்றினார். தமிழ் தேசப் பொதுவுடைமை கட்சி பிந்துசாரன் உரையை தொடர்ந்து, தலைமை கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி தமிழர்களிடையே இருக்கும் மூட நம்பிக்கைகளை நகைச்சுவையோடு விளக்கிப் பேசினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஈழத் தமிழர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு, கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினை, தமிழக மீனவர்கள் பிரச்சினை ஆகியவைகளில் மத்திய அரசின் தமிழின விரோத போக்கை விளக்கி சிறப்புரையாற்றினார். சி.பால்பாண்டி நன்றி கூறினார்.

### மல்ல சமுத்திரத்தில்

நாமக்கல் மாவட்டம் மல்ல சமுத்திரம் ஒன்றியம் சார்பாக புதிய தோழர்கள் பங்கேற்ற முதல் கலந்துரையாடல் 26.3.2012 அன்று காலை 11 மணிக்கு, மல்ல சமுத்திரம் ஒன்றியம் காளிப்பட்டியில் நடை பெற்றது. மல்ல சமுத்திரம் கண்ணன், இக்கூட்டத்திற்கான ஏற்பாட்டை செய்தார். புதிதாக வந்திருக்கும் பல தோழர்கள் தங்கள் சந்தேகங்களை கேட்டனர். இளம்பிள்ளை கோகுல கண்ணன் மற்றும் நங்க வள்ளி கிருஷ்ணன் ஆகியோர் பெரியார் கொள்கைகள் பற்றியும், கழகத்தின் செயல்பாடுகள் பற்றியும் தோழர்களிடம் விளக்கம் அளித்தனர். மே மாதத்தில் கழகத் தலைவரை அழைத்து, பொதுக் கூட்டத்துடன் ஒன்றிய கழகம் துவக்குவது என்றும், விரைவில் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கலந்து கொண்டவர்கள்: மல்லசமுத்திரம் கண்ணன், மின்னக்கல் அன்பழகன், ஆட்டையாம்பட்டி சங்கர், காளிப்பட்டி பெரியண்ணன், கோபி, குட்டிராஜ், மோகன், சென்னிமலை முருகன், கோவிந்தராஜ், சேகர், டைலர் அருணாச்சலம், ரமேஷ், ராஜ் ஆகியோர்.

## திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (7)

### 1917ஆம் ஆண்டு நிகழ்வுகள் (2)

நீதிக்கட்சியின் வளர்ச்சியைக் கண்ட காங்கிரஸ் கட்சியினர், தமது கட்சியிலுள்ள பார்ப்பனரல்லாதாரை திருப்தி செய்யவும், பார்ப்பனரல்லாதார் நலனில் காங்கிரசுக்கும் அக்கறையுள்ளது என்பதாகக் காட்டிக் கொள்ளவும், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு பார்ப்பனரல்லாதார் அமைப்பினை ‘சென்னை மாகாண சங்கம்’ என்ற பெயரில் தோற்றுவிக்கலாயினர். இதன் அமைப்புக் கூட்டம் செப்டம்பர் 15 இல் கூட்டப்பட்டு, அடிதடி ரகளையில் முடிந்தது. அதன் பின் மீண்டும் செப்டம்பர் 20 இல் கூட்டப்பட்டு, இதன் அமைப்பாளர் கேசவபிள்ளையால் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர்கள் மட்டும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ‘பார்ப்பனரல்லாதாருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் சீர்திருத்தம் அமைய வேண்டும் என்று மாண்டேகுவிடம் கூறுதல்’ இச்சங்கத்தின் நோக்கம் என்பதால் அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ‘சென்னை மாகாண சங்கம்’ என்பது மதுரைப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் உண்டான ஒரு சங்கம் என்று நீதிக்கட்சியினர் எடுத்துக் கூறினர். ‘இந்து’ நாளிதழ் இச்சங்கம் மிகவும் அவசியமானது என்று எழுதியது. சென்னை மாகாணச் சங்கத்தின் தலைவராக திவான் பகதூர் குத்தியப்பட்டு கேசவ (பிள்ளை) என்பவரும், துணைத் தலைவர்களாக, லார்ட் கோவிந்ததாஸ், சல்லா குருசாமி (செட்டி), தந்தை பெரியார் என்று பின்னாளில் அழைக்கப் பெற்ற ஈ.வெ.ராமசாமி (நாயக்கர்), நாகை பக்கிரிசாமி, சீர்காழி சிதம்பர (முதலியார்), தஞ்சை சீனிவாசம் (பிள்ளை), ஜார்ஜ் ஜோசப் ஆகியோரும், செயலாளராக டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு (நாயுடு)வும், பொறுப்பாளர்களாக டி.வி.கோபாலசாமி (முதலியார்), திரு.வி.க. சர்க்கரை (செட்டியார்), குருசாமி (நாயுடு) ஆகியோரும் இருந்தனர்.

சென்னை மாகாண சங்கத்துக்காக ஆங்கிலத்திலும், தமிழிலும் நாளிதழ்கள் தோற்றுவிக்கப்பட்டன. சி. கருணாகர மேனன் தான் நடத்தி வந்த ‘இந்தியன் பாட்ரியட்’ எனும் நாளிதழை இச்சங்கத்திற்கு வழங்கியதோடு தாமே ஆசிரியராகவும் இருந்து வந்தார். ‘தேச பக்தன்’ என்ற பெயரில் தமிழ் நாளிதழ் ஒன்று டிசம்பர் 7 இல் துவக்கப்பட்டு, திரு.வி.க.வை ஆசிரியராகக் கொண்டு நடைபெற்றது. இச்சங்கத்தின் தலைமையிடம் சென்னையில் அமைந்தது. தமிழகம் முழுவதும் 20 இடங்களில் கிளைகளும், 2 ஆயிரம் உறுப்பினர்களும் இருந்தனர். இச்சங்கம் நூற்றுக்கு அய்ம்பது விழுக்காடு பதவிகள் பார்ப்பனரல்லாதாருக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் செய்தது. இந்த தீர்மானம் கொண்டுவர மூல காரணர் பெரியார் அவர்களே என்பது குறிக்கத்தக்க செய்தியாகும். சத்தியமூர்த்தி போன்ற காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்களுக்கோ இச்செயல் வேதனையை அளித்தது.

**கழக வெளியீடான ‘திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்’ நூலிலிருந்து**

### வரலாறுகளை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

# தமிழகத்தில் நடந்த இராமாயண எதிர்ப்பு இயக்கங்கள்

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை– தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரையி லிருந்து:*

“தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அவர்களுக்கு வால்மீகி இராமாயணமோ, துளசிதாச இராமா யணமோ தெரியாது. அவர்களுக்கு தெரிந்தது கம்ப இராமாயணம தான். இராவணன என்பவன் ஒரு ஒழுக்கமான மன்னன் என்றும், கடத்தி வந்த சீதையைக்கூட மாண்புடன் நடத்திய பண்பாளன் என்றும்தான் நினைக்கிறார்களே தவிர, வில்லன் கொடியவன் என்ற சிந்தனையே தமிழ்நாட்டு மக்களிடம் இல்லை” என்று மற்றொரு ஆய்வாளர் எழுதுகிறார். ஒரு பெரிய பிரச்சார இயக்கம் இரா மனுக்கு எதிராக நடைபெறுகிறது; இராவணனை வைத்து காவியங்கள் உள்ளன என்றும் எழுதியுள்ளார்.

1922 ஆம் ஆண்டு திருப்பூரில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில மாநாடு நடக்கின்றது. கோவில் களில் நுழைய இதுவரை அனுமதிக்கப்படாத நாடார்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் கோவிலுக்குள் நுழைய அனுமதிக்க வேண்டும் என்று, பெரியார் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார். (1950 வரை நாடார்களும் கோவிலுக்குள் நுழைய முடியாத நிலைதான் இருந்தது.) மதுரை வைத்தியநாத ஐயர் (1939 இல் முதன்முதலாக கோவில் நுழைவு போராட்டம் நடத்தியவர் என்று பின்னாளில் சொல்லிக் கொள்ளப்படுபவர்) ஆட்களை அழைத்து வந்து, இந்த தீர்மானத்தைத் தோற்கடிக்க முயற்சிக்கின்றார். பிரச்சினைகள் வந்து தீர்மானம் அப்போதைக்கு ஒத்தி வைப்பது என முடிவு செய்து விடுகிறார்கள். அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் பேசுகிறபோது, “இந்த நாட்டில் மக்கள் அனைவருக்கும் உண்மையில் சுயமரியாதை வந்து சமத்துவமாக நடத்த வேண்டும், சம உரிமை வர வேண்டும் என்றால், இந்த நாட்டில் இருக்கின்ற மனுதர்ம சாஸ்திரம், இராமாயணம், இதையெல் லாம் முதலில் எரிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டில் சமத்துவம் வராது” என்று பேசுகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளே வரக்கூடாது என்று சொல்கின்ற கடவுளை உடைக்க வேண்டும், இராமாயணத்தை எரிக்க வேண்டும், காங்கிரஸ் காரராக இருக்கும்போதே பேச தொடங்கிய பெரியார், 1924 ஆம் ஆண்டு வைக்கம் போராட் டத்தின்போது, வைக்கத்தப்பனை உடைத்து சல்லியாக போடு (சாலை போடுவதற்கு) என்கிறார். இதன் தொடர்ச்சியாக 1927 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில், குடியாத்தத்தில் முதல் நிகழ்ச்சி யாகவும் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இராமாயணத்தையும் மனுதர்மத்தையும் எரித்தார்கள்.

இதே நேரத்தில் அம்பேத்கர் பற்றி சொல்லியாக வேண்டும். மகத் என்ற நகரில் சவுதார் என்ற குளத்தில், யார் வேண்டுமானாலும் தண்ணீர் எடுக்கலாம் என்று 1924 இல் நகராட்சி முடிவு செய்கிறது. 1925 ஆம் ஆண்டு அவ்வுத்திரவை ரத்து செய்கிறார்கள். அப்போது அம்பேத்கர் ‘மூக் நாயக்’ (ஊமைகளின் தலைவன்) என்ற ஒரு பத்திரிகை நடத்துகிறார். அதில் ஒரு தலையங்கம் எழுதுகிறார், அதில் சென்னையில் நடந்த இரண்டு நிகழ்ச்சிகள் என்னை உலுக்கியது என்று எழுதுகிறார். ஒன்று... கேரளாவில் வைக்கத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலைச் சுற்றி நடப் பதற்கு தடுக்கப்படுவதை எதிர்த்து, தென்னிந்தியா வின் பார்ப்பனரல்லாதார் சங்கத் தலைவர் இராமசாமி நாயக்கர் நடத்திய போராட்டம். இரண்டாவது முருகேசன் என்ற ஒரு தாழ்த்தப்பட்டவர், சென்னை யில் ஒரு கோவிலுக்குள் நுழைந்ததற்காக, காவல் துறை அவர் மீது வழக்கு பதிந்து தண்டனை வழங்கி யுள்ளார்கள். இந்த இரண்டு நிகழ்வுகளும் அம்பேத் கரின் உள்ளத்தை உலுக்கியதாக எழுதுகிறார்.

1927 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், மகத்தில் தண்ணீர் எடுத்து குடிக்கப் போவதாக ஒரு போராட்டம் அறிவிக்கின்றார். அதன் பிறகு, அதே ஊரில் ஒரு மாநாடு நடத்துகிறார். மார்ச் மாதம் தாழ்த்தப்பட்டவர்களை மட்டும் வைத்து போராட்டத்தை நடத்தியவர், 1927 ஆம் ஆண்டு டிசம்பரில் இறுதியில் நடத்துகிறபோது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, உயர்ஜாதி என அனைத்து தரப்பு மக்களையும் அழைக்கிறார். ஜோதி பாபுலே அவர்களின் சத்ய சோதக் மண்டல் (உண்மை நாடுவோர் சங்கம்) என எல்லோரையும் அழைக் கின்றார். அந்த ஊர்வலத்தில் ஆறு பார்ப்பனர்களும் கலந்து கொண்டனர். அந்த ஆறு பார்ப்பனர்களில் இருவர் மேடையில் நின்று, மனுதர்மத்தில் நம்மை இழிவுபடுத்தும் பகுதிகளை ஒருவர் படிக்கவும், இன்னொருவர் அதை எரிக்கவும் செய்தனர். (அந்த ஒரு முறை தான் அம்பேத்கர், பார்ப்பனர்-பார்ப் பனியம் என்று பிரித்துப் பேசினார்) பார்ப்பனியம் - பார்ப்பனியம் இல்லாத பார்ப்பனர்கள் என்று அந்த ஒரு முறை மட்டுமே பேசினார்.

சுயமரியாதை இயக்கத்தில் தொடர்ந்து இராமாயண எதிர்ப்பு பிரச்சாரம், மனுதர்ம எதிர்ப்பு பிரச்சாரம் நடைபெற்றது. நாத்திகரான பெரியார் பல கட்டுரைகள் எழுதினார் என்றாலும், கடவுள் நம்பிக்கை உள்ள பலர் எழுதினர். இ.மு.சுப்ரமணிய முதலியார், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் ‘இராமாயண ஆராய்ச்சி’ என்ற தலைப்பில் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட தொடர் ஆய்வு கட்டுரையை எழுதினார். அதை பெரியார் ‘குடிஅரசில்’ வெளி யிட்டதுடன், தனியாக புத்தகமாகவும் வெளியிட் டார். (தற்போது திராவிடர் கழகம் மறுபதிப்பாய் வெளியிட்டுள்ளது) அதேபோல் பா.வே.மாணிக்க நாயக்கர் (சேலம் மாவட்டம் பாகல்பட்டியைச் சார்ந்த பொறியாளர், மேட்டூர் அணை கட்டப் பட்டபோது பொறியாளராக இருந்தவர்) அவர்தான் பெரியாரிடம் திருக்குறள் குறித்து விரிவாக விவாதித்தவர். இவர், ‘வால்மீகியின் வாய்மையும், கம்பனின் புளுகும்’ என்று ஒரு புத்தகம் எழுதினார். பூர்ணலிங்கம் பிள்ளை என்ற ஒரு ஆய்வாளர், ‘இராவணப் பெரியார்’ என்று ஒரு புத்தகம் எழுதினார். இவைகள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தைச் சாராதவர்கள் எழுதிய புத்தகம்.

‘இராமாயண பாத்திரங்கள்’ என்று பெரியார் எழுதிய நூலில், முன்னிலையில் பெரியார் எழுதுகிறார்... “ இராமாயணம் நடந்த கதை அல்ல. அது ஒரு கட்டுக்கதையே. அக்கதையின்படி இராமன் தமிழன் அல்ல. அவன் தமிழ்நாட்டானும் அல்ல. வடநாட்டான். இராமன் கொன்ற மன்னன் இராவணனோ தென்னாட்டான் இலங்கை அரசன். இராமனிடம் தமிழர் பண்பு (குறள் பண்பு) என்பது சிறிதும் இருந்ததாக இல்லை. இராமன் மனைவியும் அது போலவே வடநாட்டவள். அவளிடம் தமிழ்ப் பெண் பண்பு இல்லவே இல்லை. அதில் தமிழ்நாட்டு ஆண்கள் குரங்கு, அரக்கன், ராக்சதன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டுப் பெண்கள் அரக்கிகள் என்ற குறிக்கப்பட்டுள்ளார்கள். இராமாயண போராட்டத்தில் ஒரு பார்ப்பனர்கூட சிக்கவே இல்லை. போரில் ஒரு வடநாட்டானோ ஆரியனோ பார்ப்பானோ சிக்கவே இல்லை. பார்ப்பனப் பையன் நோய் வந்து இறந்ததற்காக சூத்திரன் கொல்லப்பட்டிருக்கிறான். மற்றும் அதில் கொல்லப்பட்டவர்கள், செத்தவர்கள் எல்லோரும் தமிழ்நாட்டவர்களே ஆவார்கள். தன் தங்கையை மானபங்கம் செய்ததற்காக, இராவணன், இராமன் மனைவியை கொண்டு சென்றான். ராமன் மனைவியை கொண்டு போனதற்காக இலங்கை முழுவதிற்கும் ஏன் நெருப்பு வைக்க வேண்டும்? ராக்சதர்களை ஏன் கொல்ல வேண்டும்? இராமாயண கதை தமிழர்களை இழிவுபடுத்துவதை தவிர, அதில் வேறு கருத்து இல்லை. தமிழ்நாட்டில் இராமா யணத்தையோ, இராமனையோ வைத்திருப்பதானது, மனித சுயமரியாதைக்கும், இன சுயமரியாதைக்கும், தமிழ்நாட்டு சுயமரியாதைக்கும் மிக மிக கேடும், இழிவும் ஆனதாகும். இராமாயண இராமன் சீதை ஆகியவர்களைப் பொருத்தவரைக்கும் கடுகளவும் கடவுள் தன்மை என்பது காணப்படவில்லை.


எப்படி நாடு விடுதலைப் பெற்றவுடன், வெள்ளையர்கள் பெயரை மாற்றி இந்நாட்டவர் பெயர் வைத்ததைப் போலவும், வெள்ளையர்களின் உருவங்களை அப்புறப்படுத்தியது போலவும், தமிழன் சுயமரியாதை உணர்ச்சிப் பெற்றப் பிறகு, தமிழர்களை இழிவுபடுத்தி, கீழ்சாதி மக்களாக்கிய, ஆரிய சின்னங்களையும், ஆரிய கடவுள்களையும், ஆரிய கடவுள்கள் என்பதான உருவங்களையும் அழித்து ஒழிக்க வேண்டியது சுத்த இரத்த ஓட்ட முள்ள தமிழன் கடமை ஆகும்” என்றெல்லாம் அந்த புத்தகத்தின் முன்னுரையில் பெரியார் எழுதுகிறார்.

1940-1942 வாக்கில், நமது வெறுப்பை காட்டும் அடையாளமாக, இரமாயணம் - பெரியபுராணம் ஆகியவற்றை எரித்து ஒழிக்க வேண்டும் என்று பெரியார் சொன்னார். பலர் எரிக்க வேண்டாம் என்று சொன்னார்கள். இது தொடர்பாக பல விவாத அரங்குகள் நடந்தன. சுயமரியாதை இயக்கத்தின் சார்பாக அண்ணாவும், ஈழத்து அடிகளும் கலந்து கொண்டனர். 1943 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முதலில் சென்னை சட்டக் கல்லூரியில் நடை பெற்றது. இந்துமத பரிபாலன சபை (இப்போதைய அறநிலைய துறை)யின் இயக்குநர் சி.ஆர்.இராம சந்திர செட்டியார் (கோவையை சார்ந்தவர்), இந்த நிகழ்விற்கு தலைமை தாங்கினார். இவர் ‘கோவில் பூனைகள்’ என்ற புத்தகத்தை ‘கோவை கிழார்’ என்ற புனைப் பெயரில் எழுதியுள்ளார். இவர் கடவுள் நம்பிக்கையாளர். ஆனால், பார்ப்பன எதிர்ப்பாளர். இவருடைய தலைமையில் அண்ணாவும் ஈழத்தடி களும் ஒரு அணியிலும், சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறை தலைவராக இருந்த இரா.பி.சேதுபிள்ளை (சொல்லின் செல்வர் என்று அழைக்கப்பட்டவர்) இன்னொரு அணியிலும் வாதாடினார்கள். அடுத்து மார்ச் மாதம் சேலத்தில் நடந்தது. இங்கும் அதே போல் பார்ப்பன எதிர்ப்பாளரான ஒரு பக்தர் பிரின்சிபால் இராமசாமி கவுண்டர் (சேலம் கல்லூரியில் 27 ஆண்டுகள் முதல்வராக இருந்தவர்) தலைமை தாங்கினார். இங்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை தலைவராக இருந்த நாவலர் சோம. சுந்தர பாரதியார் கலந்து கொண்டார். இந்த இரண்டு விவாதங்களிலும் அண்ணாவின் சொற்பொழிவு, ‘தீ பரவட்டும்’ என்ற தலைப்பில் புத்தகமாக வந்துள்ளது. இப்படி ஒரு பக்கம் இராமாயணத்தை எதிர்த்து பிரச்சாரம்.

இன்னொரு பக்கம் பெரியார் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு, எம்.ஆர்.இராதா போன்றவர்கள் நாடக வடிவில் தந்தனர். திருவாரூர் தங்கராசு எழுதிய இராமாயண நாடகம் என்ற நாடகம், எம்.ஆர்.இராதாவால் நடிக்கப்பட்டது. நாடகம் தொடங்கும்போது, இராமாயணம் குறித்து பல ஆய்வாளர்கள் எழுதிய புத்தகங்கள் எல்லாம் முதலில் காண்பிக்கப்படுமாம். அதில் இராமனாக நடிக்கும் இராதா ஒரு கையில் கள் மொந்தையுடனும், ஒரு கையில் மாமிசத்துடனும் வருவாராம். (இராமன் மாமிசம் சாப்பிடுபவன், மது அருந்துபவன் என்பதற்கு கதைப்படி நிறைய ஆதாரங்கள் உண்டு. இராஜாஜி எழுதிய ‘சக்ரவர்த்தி திருமகன்’ நூலிலும் கூட மாமிசம் சாப்பிடுவது பற்றி எழுதியுள்ளார்) எம்.ஆர்.இராதாவை காவல்துறை கைது செய்தால் இராமன் வேடத்தை கலைக்காமல் தான் செல்வாராம்.

**(தொடரும்)**

## காஞ்சியில் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்



சென்னை தாம்பரத்தில் 31.3.2012 மாலை 6 மணியளவில் பெரியார் திராவிடர் கழகத்தின் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ம.ரே.ராச குமார் தலைமை வகிக்க, க.வே.சேகர் வரவேற்புரையாற்ற, மு.தினேசு குமார், டேவிட் பெரியார் முன்னிலை யில் கா.ரவிபாரதி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந் திரன் கருத்துரை வழங்கினர். நிகழ்வின் இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தனது உரையில் அமெரிக்காவின் ஐ.நா. தீர்மானம் பற்றியும், இராஜீவ் காந்தி ஒப்பந்தத்தால் அழிவை நோக்கியுள்ள கூடங்குளம் நிலை பற்றியும் தனித் தமிழ்நாடு எண்ணத்தை தமிழக மக்களின் மனதில் எண்ண வைக்கும் இந்திய அரசின் நிலை பற்றியும் தெளிவாக கூறியுள்ளார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெரியாரால் பயன்பட்டவர்கள் எங்கே? சந்திரபோசு கேள்வி

முதல் பக்கத் தொடர்ச்சி

கழக அமைப்பாளர் பெரியார் குணாஹாசன், தந்தை பெரியாரின் அடிப்படை கொள்கை சாதி ஒழிப்பு, அதற்காகவே அவர் கடவுள் மறுப்பு பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை விளக்கி உரையாற்றினார்.

பரப்புரை பயணத்தை துவக்கி வைத்து உரையாற்றிய சந்திரபோசு, ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து சாதி பாதுகாக்கப்பட்டு வருகிறது. நமது முன்னேற்றத்திற்கு, அடிப்படையில் சாதி தடையாக இருக்கிறது என்பதை விளக்கிப் பேசியதோடு, கூடங்குளம் அணு உலை, முல்லைப் பெரியாறு, ஈழப் பிரச்சினை ஆகிய பிரச்சினைகளில் நாம் போராடி வெற்றிப் பெறாமல் போனதற்கு காரணம், நாம் சிறு சிறு சாதி குழுக்களாக பிரிந்து கிடப்பதே என்றும் தெளிவுபடுத்தினார். தமிழராய் ஒன்றிணைவோம் என்று கூறுகிற எந்த பிற்படுத்தப்பட்ட தமிழ் தேசியவாதிகளும், தீண்டாமை கொடுமைகளைப் பற்றி பேச முன் வரவில்லை என்றும், ஈழத்தில் இருக்கும் தமிழன் கொல்லப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இவர்கள், தமிழ்நாட்டில் பரமக்குடியில் சமீபத்தில் சுட்டுக் கொல்லப்பட்டபோது ஒரு சிலரைத் தவிர, பலரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து, இட ஒதுக்கீடு கொள்கை சந்தித்த நெருக்கடிப் பற்றியும், அதற்காக இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தையே முதன்முதலாக திருத்து வதற்கு காரணமாய் இருந்தவர் பெரியார் என்பதையும் விளக்கிப் பேசினார். சட்டத்திற்காக மக்களா? மக்களுக்காக சட்டமா? என்ற கேள்வி எழுந்தபோது, மக்களுக்காக தான் சட்டம் இருக்க வேண்டும், சட்டத்தையே எரிப்பேன் என்று சொன்ன பெரியாருக்கு, பின்பு நமக்கு நல்ல தலைவர்கள் கிடைக்கவில்லை. இன்று பெரியார் திராவிடர் கழகம் சாதியை ஒழிக்கப் போராடுகிறார்கள் என்றால் அன்று பெரியாருக்கு பின்னால் லட்சக்கணக்கில் திரண்ட சூத்திரர்கள், பிற்படுத்தப் பட்டவர்கள் இன்று போராட முன் வரவில்லை. காரணம் அன்று பிற்படுத்தப் பட்டவர்கள் அனுபவித்த கொடுமைகள் பெரியாரின் முயற்சியால் நீங்கியது. எனவே, இவர்களுக்கு பெரியாரின் இயக்கங்கள் இன்று தேவைப்படவில்லை. எல்லோரும் தங்கள் சொந்த சாதியில் இணைந்து கொள்கிறார்கள் என்று குறிப்பிட்ட சந்திரபோசு, அப்படி இவர்கள் இணையும் சொந்த சாதி அவர்களுக்கு பாதுகாப்பாகவா இருக்கிறது? என்ற கேள்வியை முன் வைத்தார். எனவே அனைவரும் சாதியை விட்டொழித்து வாருங்கள் என்று பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தும், பயணக் குழுவிற்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தும் உரையை நிறைவு செய்தார்.

நிறைவுரையாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இப் பயணத்தின் நோக்கம் குறித்து சிறப்புரையாற்றினார். சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருக்கும் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தின் போதும், இரட்டை சுடுகாடு களுக்கு எதிராக பரப்புரை செய்து, இதை தடுக்காத காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தின் போதும் கழகத்தினர் தான் கைது செய்யப்பட்டனர். அந்தக் கொடுமைகள் அப்படியே நீடிக்கிறது என்றாலும், இந்தப் பிரச்சினைகள் ஆங்காங்கே விவாதத்திற்கு வந்திருக்கிறது. மக்கள் கவனத்திற்கு நாம் எடுத்துச் சென்றுள்ளோம். எனவே இப்பயணத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டவர்கள் மத்தியில் நியாயங்களை முன் வைப்போம். அதேபோல கடந்த ஆண்டு உச்சநீதிமன்றத்தில் வன்கொடுமை சம்பந்தமான மேல் முறையீட்டு வழக்கில் தண்டனையை உறுதி செய்த நீதிபதிகள், தமிழ்நாட்டில் பல்வேறு தீண்டாமை கொடுமைகள் இருக்கிறது என்றும் இதை தடுக்காத மாவட்ட ஆட்சியர் மீதும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அந்த தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். இதன்படி நாம் அதிகாரிகள் மீது வழக்கு தொடுக்க முடியும். இறுதியாக தோன்றியது முதலில் மறையும் என்பது சமுதாய விதி. எனவே இறுதியாக தோன்றிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக பரப்புரை செய்வோம் என்று தெரிவித்தார்.

தி.இ.சே. பேரவையின் மாநிலச் செயலாளர் ச.இராசு, சி.தே.சிங்குராசா, முனியாண்டி, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகத் தலைவர் அ.நடராஜன், தலைமை கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் தாமரைக் கண்ணன், மதுரை முருகேசன், வழக்கறிஞர் பெரியசாமி, சேகர், மன்னார்குடி, காளிதாசு, சிவகங்கை மாவட்ட கழகத் தோழர்கள் நா.முத்துக்குமார், சி.ராசீவ் காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

15.4.2012 அன்று மதுரை மேலவளவு முருகேசன் நினைவிடத்தில் சாதி ஒழிப்பு உறுதி மொழியேற்ற பயணக் குழு இதுவரை மேலூர், திருப்பரங்குன்றம், செக்கானூரணி, சோழவந்தான், உசிலம்பட்டி, தேனி ஆகிய பகுதிகளில் பரப்புரை நடத்தியுள்ளது.

முதலில் தோழர்கள் பறை முழக்கம் எழுப்புவது, தொடர்ந்து மேட்டூர் முத்துக்குமார், சாதி ஒழிப்பு பாடல் பாடுவது, அடுத்து கருத்துரை என்ற முறையில் பரப்புரை நடைபெற்று வருகிறது. தோழர்கள் துண்டறிக்கை விநியோகம் மற்றும் உண்டியல் வசூல் மூலமாகவும், பரப்புரை நோக்கத்தை மக்களிடையே விளக்குகிறார்கள். முத்துராசு, கழக வெளியீடுகளை விற்பனை செய்து வருகிறார். ஒரு நாளைக்கு மூன்று இடங்களிலும், ஒவ்வொரு இடத்திலும் ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை இந்த பரப்புரை இயக்கம் நடைபெறுகிறது. தோழர்கள் தாமரைக் கண்ணன், பாண்டியன், ஆல்பர்ட் ஆகியோர் முன்னேற் பாடுப் பணிகளை க் கவனிக்கிறார்கள்.

பயணத்தில் முழுமையாக கலந்து கொள்ளும் தோழர்கள்: இராவணன், திருப்பூர், சம்பூகன், இரா. மூர்த்தி, விஜயன், வெள்ளமடை - நாகராசு, மேட்டூர் முத்துக்குமார், முத்துராசு, முத்துரத்தினம், மூர்த்தி, கோவிந்தராசு; கரூர் - ஸ்ரீகாந்த், பழனி - பத்மநாபன், பல்லடம் - வடிவேல் ஆகியோர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு தலித் குழந்தைகூட சேர்க்கப்படாத அரசு தொடக்கப் பள்ளி

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள பச்சயன்காடு என்ற ஊரில் உள்ளாட்சித் துறை நடத்தும் தொடக்கப் பள்ளியில் ஒரு தலித் மாணவர்கூட இல்லை என்ற அதிர்ச்சியான செய்தி வெளி வந்துள்ளது. இது குறித்து 'இந்து' நாளேடு (ஏப், 2012) முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள பச்சயன்காடு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 1980 ஆம் ஆண்டிலிருந்தே தலித் சமூகத்தைச் சார்ந்த ஒரு குழந்தைகூட படிக்க முன் வரவில்லை. இந்தப் பள்ளி இயங்கும் பகுதியில், பச்சயன்காடு, தெருக்காடு கிராமங்களில் தலித் குடியிருப்புகள் இருக்கின்றன. 1980 ஆம் ஆண்டுக்கு முன் இப்பகுதி தலித் மக்கள் தங்கள் குழந்தை களை இப்பள்ளியில் சேர்த்து வந்தனர். அதே ஆண்டின் இடைக்காலத்தில் தலித் குழந்தைகள் மீது அவமதிப்பும், பாகுபாடும் திணிக்கப்பட்டதால், தங்கள் குழந்தைகளை அப்பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்திக் கொண்டனர்.

இந்த அவமதிப்பை எதிர்த்து இப்படி ஒரு முடிவை எடுத்தவரின் பேரன் பிர்லா தங்கதுரை இந்தத் தகவலைத் தெரிவித்தார். இப்போது அந்தப் பள்ளிக்குள் தேர்தலின்போது வாக்களிப்பதற்கு மட்டுமே காலடியை எடுத்து வைக்கிறோம் என்றார், தங்கதுரை. கொத்தடிமை ஒழிப்புக் குழுவின் மாவட்டக் குழு உறுப்பினராகவும் அவர் உள்ளார். இந்தப் பள்ளி உள்ள பகுதியில் 100 தலித் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களில் தொடக்கப் பள்ளியில் சேரும் நிலையில் 54 குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனாலும், இந்த குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் தங்கள் குழந்தைகளை சேர்க்காமல், பக்கத்து கிராமங்களிலுள்ள தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்த்துள்ளனர்.

தலித் குழந்தைகள் 30 ஆண்டுகளுக்கு மேலாக இப்பள்ளியில் சேர்க்கப்பட வில்லை என்பது உண்மைதான் என்ற ஒப்புக் கொண்ட தலைமை ஆசிரியர் அன்பழகன், வரும் ஆண்டில் குறைந்தது 10 குழந்தைகளையாவது சேர்க்க முயற்சிக்கப் போவதாகக் கூறியுள்ளார். அரசுப் பள்ளி ஒன்றில் 30 ஆண்டு களுக்கு மேலாக ஒரு தலித் குழந்தைகூட சேர்க்கப்படவில்லை என்பது குறித்து எந்த கவலையோ முயற்சியோ எடுக்காத நிர்வாக அமைப்பு நடந்திருக்கிறது.

# வடசென்னையில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா




புளியந்தோப்பு பகுதி கழகத்தின் சார்பில் அம்பேத்கரின் 122-வது பிறந்த நாளை முன் னிட்டு "அம்பேத்கரின் எதிர்பார்ப்பு நிறைவேறி யுள்ளதா" என்ற தலைப் பில் மாபெரும் விளக்கப் பொதுக் கூட்டம் நடை பெற்றது. சி.அருள்தாஸ் தலைமை வகிக்க, விசயன், தா.இ.கோவிந்தன் முன்னிலை வகிக்க வரவேற்புரையினை அ.அமுல்ராசு நிறைவேற்றினார். தொடர்ந்து மாவட்டக் கழகத் தலைவர் ஏ.கேசவன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ச.குமாரதேவன், கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் சிற்பிராஜனின் 'மந்திரமல்ல தந்திரமே' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. திரளான பொது மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிற்பிராசன் நடத்தி முடிக்கும்போது ஆரவாரமும், கைத்தட்டலுமாக பொதுமக்கள் வரவேற்பளித்தனர். நிகழ்ச்சியில் புதிதாக ஏழு தோழர்கள் (மது, விஜி, அண்ணாமலை, தமிழ், ராஜசேகர், அப்பு, சுதாகர்) கழகத்தில் இணைந்தனர். நன்றியுரையினை சுப்ரமணியன் நிகழ்த்தினார்.

## பெரியாரின் தொண்டு: தலைமை நீதிபதி பெருமிதம்


கடந்த காலங்களில் சாதி ரீதியான பாகுபாட்டை மிக அதிகமாக கண்டிருக்கிறோம். அவையெல்லாம் இந்திய வரலாற்றின் கருப்பு நாட்கள். தமிழகத்தில் பெரியாரின் அயராத உழைப்பின் காரணமாகத்தான் இன்று ஒரு சில குக்கிராமங்களைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் சாதி பாகுபாடு துடைத்தெறியப்பட்டது. பெரியாரின் குரலை அடுத்துதான், இடஒதுக்கீட்டு கொள்கையை தமிழக அரசு கடைபிடிக்கத் தொடங்கியது. தமிழகத்தில் இன்று பல்வேறு துறைகளில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் போன்ற சாதியினருக்குவேலை கிடைப்பதற்கான வழியை அமைத்துக் கொடுத்தவர் அந்த பெரியார்தான்.

- உயர்நீதிமன்ற வளாகத்தில் நடந்த அம்பேத்கர் விழாவில் தலைமை நீதிபதி எம்.ஒய்.இக்பால் உரையிலிருந்து. (நன்றி: 'தினத்தந்தி' 17.4.2012)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th April 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஏப்ரல் 26, 2012 | புரட்சி 11 | முழக்கம் 15 | விலை: ரூ.2.50


## பரப்புரைப் பயணத்தில் கழகம் வற்புறுத்தல்

# பார்ப்பனியத்துக்கு அடிமையாகாதீர்; தலித் மக்களை அடக்க முயலாதீர்!

*தலித் மக்களை அடக்க முயலாதீர் என்று பிற்படுத்தப்பட்டோருக்கு வேண்டுகோள் விடுத்து, கழகத்தின் பரப்புரை இயக்கம் தொடருகிறது:*

15.4.2012 அன்று மேலூர், திருப்பரங்குன்றம் ஆகிய பகுதிகளிலும், 16.4.2012 அன்று செக்கானூரணி, சோழவந்தான், உசிலம்பட்டி ஆகிய பகுதிகளிலும், 17.4.2012 அன்று தேனி, பெரியகுளம், வத்தலகுண்டு, ஆத்தூர் ஆகிய பகுதிகளிலும் பரப்புரை நடத்தப்பட்டது. 18.4.2012 அன்று சின்னாளப்பட்டி, கோபால்பட்டி, நத்தம் ஆகிய பகுதிகளிலும், 1.4.2012 அன்று திருவெறும்பூர், காட்டூர் ஆகிய பகுதிகளிலும், 20.4.2012 அன்று இலால்குடி, பூவாளூர், கீழப்பளூர், அரியலூர் ஆகிய பகுதிகளிலும், 21.4.2012 அன்று குன்னம், பேரளி, பெரம்பலூர் காந்தி சிலை, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளிலும் பரப்புரைகள் நடைபெற்றன. திருச்சி மாவட்டத்தில் பரப்புரை நடந்த இரண்டு நாட்கள் மூத்த பெரியார் தொண்டர் ஆசிட் தியாகராசன், பயணக் குழுவினரோடு பயணம் செய்து, பரப்புரையை பாராட்டினார். அதேபோல் இலால்குடி முத்துச்செழியன், பயணக் குழுவை சந்தித்து, தனது பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டார்.

பரப்புரை வாகனத்தில் சுற்றிலும், இசையில் சாதி, வாழ்விடங்களில் சாதி, சுடுகாட்டில் சாதி, உணவில் சாதி, நடனத்தில் சாதி என்று பிரித்து வைத்திருப்பதை படங்கள் மூலமாக பார்க்கும் பொது மக்கள் எளிதாக புரிந்து கொண்டு, சிறப்பான பணியை செய்கிறீர்கள் என்று பாராட்டிச் செல்கிறார்கள். பயணக் குழு தோழர்களிடம் பெரியார் இல்லாவிட்டால் நாங்கள் இந்த அளவிற்கு முன்னேறி இருக்க முடியாது என்றும் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். தேனி, திண்டுக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் கழகத் தோழர்கள் பயணக் குழுவை வரவேற்று தேவையான உதவிகளை செய்தனர். அரியலூர் பேருந்து நிலையம் அருகே கழகத் தோழர்கள் தனியாக, ஒலி பெருக்கி மற்றும் மின் விளக்குகள் அமைத்து பொதுக் கூட்ட நிகழ்வாக ஏற்பாடு செய்தனர். இப்பொதுக் கூட்டத்தில், அரியலூர் மாவட்ட கழகத் தலைவர் பகுத்தறிவாளன், ராஜ்குமார், அரியலூர் பகுதி சாதியத்திற்கு எதிரான அமைப்பைச் சார்ந்த செங்கொடி, பரப்புரை குழுவில் இருக்கும் கோவை மாவட்ட செயலாளர் வெள்ளமடை நாகராசு, தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் தூத்துக்குடி பால். பிரபாகரன் ஆகியோர் உரை ஆற்றினர்.

### சைக்கிள் ஓட்டத் தடை

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர்ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரளி என்ற கிராமத்தில் உடையார் சாதி மக்கள் இருக்கும் வீதிகளில், தாழ்த்தப்பட்டவர்கள் சைக்கிள் ஏறி செல்ல முடியாத நிலை இதுவரை அங்கு உள்ளது. இது குறித்து பெரம்பலூர்மாவட்ட கழகம் கவனம் செலுத்தி வருவதால் இந்த பகுதிகளில், கழகப் பரப்புரையின்போது காவல் துறை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது. சுமார் இருபதுக்கும் மேற்பட்ட காவலர்கள் இந்தப் பகுதிகளில் பயணக் குழுவை தொடர்ந்து வந்தார்கள். இந்தப் பகுதியில் உரையாற்றிய மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன், “இந்தப் பகுதியில் தாழ்த்தப்பட்டவர்கள் சைக்கிள் ஓட்டி செல்ல முடியாத நிலை இன்னும் இருக்கிறது. தபால்காரர்கூட தாழ்த்தப்பட்டவர் என்பதால், உடையார் தெருவில் நடந்து தான் செல்கிறார். இந்த கொடுமையை வீடியோ ஆதாரத்துடன் எங்கள் கழக மாவட்ட அமைப்பாளர் இலட்சுமணன், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோரது கவனத்திற்கு எடுத்துச் சென்றார். மாவட்ட ஆட்சியரும் நடவடிக்கை எடுத்தார். காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்கள் சைக்கிள் ஏறி செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், ஒரு வாரத்திற்கு பிறகு மீண்டும் பழைய நிலையே நீடிக்கிறது. இது குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், கழகம் சார்பாக, ஆயிரம் சைக்கிள்களுடன் முற்றுகை போராட்டம் நடத்தப்படும்” என்று அறிவித்தார்.

இதுவரை நடைபெற்ற பரப்புரைகளில், வெள்ளமடை நாகராசு, திருச்சி புதியவன், சூலூர் வீரமணி, பொள்ளாச்சி கா.சு.நாகராசு, பழனி நல்லதம்பி, தூத்துக்குடி பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். பரப்புரையில் பிற்படுத்தப்பட்டவர்களை பார்த்து சொற்பொழிவாளர்கள் வைக்கும் கருத்துகளில் சில......

சாதியால் உங்கள் பொருளாதாரத்தை இழந்துள்ளீர்கள். உயிரை இழந்திருக்கிறீர்கள், எந்த பயனும் இல்லாத சாதியத்தை நீங்கள் உயர்த்திப் பிடிப்பது நியாயம் தானா? சாக்கடை சுத்தம் செய்தல், செருப்பு தைத்தல், முடிவெட்டுதல், துணி வெளுத்தல் ஆகிய நமக்கு தேவையான அடிப்படை வேலைகளை செய்கிறவர்களை கீழ் சாதி என்றும், தீண்டத்தகாதவன் என்றும் சொல்லி அவர்களை ஒருமையில் திட்டுகிறீர்களே! நமக்கு எந்த வகையிலும் பயன்படாத பார்ப்பனர்களைப் பார்த்து உயர்ந்த சாதி என்று சொல்லி, சாமி என்று அழைக்கின்றீர்களே நியாயம் தானா? மிகச் சிறந்த இசை அமைப்பாளரான இளையராசா, ஸ்ரீரங்கம் கோவிலுக்கு தங்க கூரை அமைப்பதற்கு பெருந்தொகையை கொடுத்தும், கும்பாபிசேகத்தின்போது, பார்ப்பனரல்லாதார் என்பதால் ஆகம விதிபடி உள்ளே வரக்கூடாது என்று பார்ப்பனர்கள் தடுத்தார்களே அதற்குக் காரணம் சாதியம் அல்லவா? குற்றாலம் அருகே தென்காசியில் ஒரு ராஜகோபுரம் பழுதடைந்துவிட்டது, அதை புதுப்பிக்க வேண்டும் என்று கேட்ட போது, ‘தினந்தந்தி’ நாளிதழின் உரிமையாளர் சிவந்தி ஆதித்தனார் தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்தார். இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர், மிகப் பெரும் செல்வந்தர் சிவந்தி ஆதித்தனாரை நாடார் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதால் பார்ப்பனர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுத்தார்களே! இந்த சாதியத்தை தூக்கிப் பிடிப்பது நியாயம் தானா? இதே சாதி ஆதிக்கத்தை நீங்கள் உங்களுக்கு கீழானவர்கள் என்று சமூக அமைப்பு வைத்துள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஏன் திணிக்கிறீர்கள்? ஒரு எண்பது ஆண்டுகளுக்கு முன்னாள் திருவாங்கூர் சமஸ்தானத்தில், நாடார் இனப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற நிலை இருந்ததே! மேலாடை அணிந்த காரணத்தினால் மார்பகங்களை அறுத்த வரலாறு இருக்கிறதே, பார்ப்பனர் நம் மீது சுமத்திய இந்த சாதியத்தை இன்றும் நாம் தூக்கிப் பிடிப்பது நியாயம் தானா? ஒருவர் விபத்தில் அடிபட்டு மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டால், அவருக்கு இரத்தம்

**4 ஆம் பக்கம்**

## திருப்பூர் நோக்கி திரளுவீர்!

*பெரியார் கொள்கையைக் கவசமாக உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வரும், கழகத்தின் கொள்கைத் தோழர்களே!*

*காலத்தின் தேவையும், அவசியமும் நமது களச் செயல்பாட்டை தீர்மானிக்கிறது. பார்ப்பனியமும் அதன் கொடூர வடிவமான சாதியமும் உயிர்த் துடிப்போடு மனித மாண்புகளை சிதைத்து வருகிறது!*

*வாழ்வியலை சீரழித்து, வன்மத்தையும், வெறுப்பையும், கொலைகளையும் தூண்டி விடும் சாதியத்தை எதிர்த்து, பரமக்குடியில் பெரியார் திராவிடர் கழகம் தொடங்கிய பரப்புரை பயணம் – தொடருகிறது!*

*சில இடங்களில் எதிர்ப்பு, கல்வீச்சு; பல இடங்களில் இறுக்கம்; அமைதி; வேறு பல இடங்களில் வரவேற்பு; பாராட்டு – என்று வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு சூழல்களை எதிர்கொண்டு, தோழர்கள் பயணிக்கிறார்கள்!*

***சாதிய ஒடுக்குமுறைக்கு பலியாகிக் கிடக்கும் மக்கள் வாழும் பகுதிகளில் அல்ல, சாதியைத் திணிக்கும் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமே இந்தப் பரப்புரை நடக்கிறது!***

*சுய மரியாதை சூடேற்றி – தன்மானப் போருக்கு அழைப்பு விடுத்த நமது அறிவு ஆசான் தந்தை பெரியார் உரத்து முழங்கிய சமத்துவக் குரலை எதிரொலித்து, புரட்சியாளர் அம்பேத்கர் காலமெல்லாம் கருத்துரைத்து களமாடிய அந்த லட்சிய முழக்கத்தை எதிரொலித்து – சாதிக்கும், சாதி அமைப்புக்கும் எதிரான இந்தப் பயணம் – ஏப்.29 ஆம் நாள் திருப்பூரில் நிறைவடைகிறது.*

*அன்று கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள், தலித் முரசு ஆசிரியர் புனித பாண்டியன் பங்கேற்று உரையாற்றுகிறார்கள்.*

***சாதிய வாழ்வியலுக்கு எதிராக ‘சேரி–ஊர்’ பிளவுக்கு எதிராக போராட்ட அறிவிப்புகளை கழக சார்பில் கழகத் தலைவர் அறிவிக்க இருக்கிறார்!***

*பெரியார் திராவிடர் கழகத் தோழர்களே! சாதியை வீழ்த்தத் துடிக்கும் தோழமை சக்திகளே!* ***அனைவரையும் அறைகூவி அழைக்கிறோம்.***

***திருப்பூர் நோக்கித் திரண்டு வாரீர்!***

***ஆம்; அதே திருப்பூர்!***

*இராமாயணத்தையும் மனுநீதியையும் தீயிட்டுப் பொசுக்க வேண்டும் என்று 1922 இல் பெரியார் முழங்கினாரே! அதே திருப்பூர்!*

**– பெரியார் திராவிடர் கழகம்**

**தலையங்கம்**

## சென்றார்கள்; திரும்பினார்கள்

இந்திய நாடாளுமன்ற குழு எதிர்க்கட்சித் தலைவர் பாரதிய ஜனதாவைச் சார்ந்த சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கைச் சென்று, தமிழர் வாழும் பகுதிகளையும் சில அகதிகள் முகாம்களையும் பார்வையிட்டு, ராஜபக்சேவை சந்தித்துவிட்டு திரும்பியுள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய கட்சிகள் இதில் இடம் பெறவில்லை. இலங்கை அரசின் போர்க் குற்றங்களைக் கடுமையாக விமர்சித்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பிரதிநிதிகள், இக்குழுவில் இராசபக்சேவைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது.

ஈழத்தில் இறுதி கட்ட இனப் படுகொலையின்போது போரை நிறுத்தி, தமிழினத்தைக் காப்பாற்றுங்கள் என்று தமிழகமே திரண்டு நின்று குரல் கொடுத்தபோது, அதை காதில் போட்டுக் கொள்ள காங்கிரஸ் ஆட்சி தயாராக இல்லை. இனப் படுகொலை வெற்றிகரமாக நடந்து முடியட்டும் என்றே அதற்கான உதவிகளை செய்து கொண்டு காத்திருந்தார்கள். இப்போது போரின் பாதிப்புகளைக் கண்டறிய குழுவை அனுப்புகிறார்கள். ஏதோ, ராஜபக்சே ஜனநாயக ஆட்சியை நடத்தி வருவது போலவும், குற்றங்குறைகளை சுட்டிக் காட்டினால் அவரது கருணை உள்ளம் அதைக் களைவதற்கு துடித்து எழும் என்பது போலவும் ஒரு பம்மாத்து காட்டப்படுகிறது. இந்தக் குழு இப்போது அவசரமாக இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பது ஏன்? எதிர்வரும் நவம்பரில் இலங்கையின் மனித உரிமை தொடர்பான விவாதம் அய்.நா. மனித உரிமைக் குழுவில் விவாதத்துக்கு வரவிருக்கிறது. அப்போது இந்திய நாடாளுமன்றக் குழு நேரில் பார்வையிட்டு, நிவாரணப் பணிகள் நடந்து கொண்டிருப்பதாக கூறிவிட்டதாக இலங்கை அரசு கூறிக் கொள்ளலாம். அதற்கு வேண்டுமானால் இக்குழுவின் பயணம் பயன்படலாம். இனப்படுகொலை நடந்து முடிந்து மூன்று ஆண்டுகளான பிறகும் ராணுவத்தின் ஆட்சியே தமிழ்ப் பகுதிகளில் தொடருவது மிகப் பெரும் கொடுமை.

இலங்கை அரசு நியமித்த விசாரணை ஆணையமே (எல்.எல்.ஆர்.சி.) இதை ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கை அரசு ஒப்புக் கொண்ட உண்மையைத்தான் இந்தக் குழுவினரும், திரும்பி வந்து கூறிக் கொண்டிருக் கிறார்கள். காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.கே. ரங்க ராஜன் போன்றோர், செய்தியாளர்களிடம் கூறிய கருத்துகள் எல்லாம், ராஜபக்சே தமிழர் பிரச்சினையில் கவலையுடன் இருப்பது போன்ற தோற்றத்தையே உருவாக்கிக் காட்டுகின்றன. இதை எவரும் நம்பத் தயாரில்லை. அதிலும் டி.கே. ரங்கராஜன், தமிழ் ஈழத்தை, ஈழத்தில் தமிழர்கள் எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியிருப்பது தலைசிறந்த நகைச்சுவையாகும். “எங்கள் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கோழிக்கோடு மாநாட்டில் ஈழப்பிரச்சினை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தைத்தான், அகதி முகாம்களில் வாழும் தமிழர்களிலிருந்து நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் வரை அப்படியே ஆதரித்தார்கள்” என்று சொல்லாமல் விட்டாரே! அதற்காக நன்றி கூறலாம்.

இப்போதும் சிங்களவர் பகுதிகளிலே சுதந்திரமான சிவில் நிர்வாகமும், தமிழன் பகுதிகளிலே சிங்களர்களை மட்டுமே கொண்ட ராணுவ நிர்வாகத்தையும் சித்திரவதை முகாம்களையும் கொலை பீடங்களையும் நடத்தி வரும் ஆட்சியில் தமிழர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் “வாழவேண்டும்” என்று பேசுவதில் ஏதேனும் நியாயம் இருக்க முடியுமா?

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தமிழ் ஈழத்தை ஆதரித்து கருத்துக் கூறியதால், ஈழத் தமிழர்களுக்கு மீண்டும் நெருக்கடிதான் உருவாகும் என்று ‘இந்து’ பார்ப்பன ஏடு தலையங்கம் தீட்டுகிறது. ராஜபக்சே என்ற சர்வாதிகாரிக்கு கோபம் வந்துவிடாமல், ‘தாஜா’ செய்து கை கட்டி வாய்ப் பொத்தி தமிழர்கள் வாழும் உரிமைகளை மன்றாடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் கருதுகிறார்கள் போலும்! இனப் படுகொலையும் போர்க் குற்றங்களும் நடக்கும் எந்த ஒரு நாடும் இறையாண்மை பெற்றது அல்ல என்று சர்வதேச சட்டங்கள் தெளிவாகக் கூறுகின்றன.

ராஜபக்சே என்ற போர்க் குற்றவாளிக்கு சர்வதேச அழுத்தங்களும் நெருக்கடிகளும் உருவாக்கப்படும் முயற்சிகளே ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுமே தவிர, கருணை மனுக்களைப் போடுவதால் எதுவும் நடக்காது என்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும்.

மற்றபடி இந்திய குழுவினர் சென்றார்கள்; திரும்பினார்கள் என்பதைத் தவிர எந்தப் பயனும் இல்லை என்று உரத்துக் கூற முடியும்.

# ‘சாதி கவுரவத்திற்காக’ குடும்பத்தினராலே கொல்லப்படும் இளம் பெண்கள்

தாழ்த்தப்பட்ட சமுதாய இளைஞரைத் திருமணம் செய்துவிட்ட “குற்றத்துக்காக” மகளையே தாயும் அவரது மாமியாரும் கொலை செய்து வீட்டில் புதைத்துள்ளனர். ‘சாதி கவுரவத்தை’க் காப்பாற்றிட நடந்த இந்த கொலை, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ‘எவி டென்ஸ்’ தொண்டு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியால் வெளிவந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள கலியூர் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது திருச்செல்வி, தலித் சமூகத்தைச் சார்ந்த டேனியல் ராஜ் என்ற இளைஞரை காதலித்தார். இருவரும் ஊரை விட்டு வெளியேறி திருப்பூரில் ஒரு தொழிற் சாலையில் வேலை செய்தனர். ஆதிக்கசாதியைச் சார்ந்த பெண்ணின் தாய் மற்றும் அவரது மாமியார், திருமணத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறி நாடகமாடியதை நம்பி, அம்மை நோயுடன் பெண் வீடு திரும்பியபோது, தாயும், மாமியாரும் பூச்சி மருந்தை பெண்ணின் வாயில் திணித்து, குடிக்குமாறு கட்டாயப்படுத்தினர். அந்தப் பெண் மறுக்கவே, கையையும் காலையும் பிடித்துக் கொண்டு, பூச்சி மருந்தை வாயில் ஊற்றி, பிறகு கழுத்தை நெறித்து கொலை செய்து வீட்டுக்குள்ளே புதைத்து விட்டனர். ‘எவி டென்ஸ்’ உரிமை அறியும் குழு தந்த புகாரின் அடிப்படையில், காவல்துறை விசாரணை நடத்தி கொலை தான் என்று உறுதி செய்து, வழக்குப் பதிவு செய்து, கைது செய்துள்ளது.

‘எவிடென்ஸ்’ இயக்குனர் கதர் இது பற்றி கூறுகையில், கடந்த 3 ஆண்டுகளில் குறைந்தது 12 ‘கவுரவக் கொலைகள்’ இதேபோல் சாதி வெறியுடன் தமிழகத்தில் நடந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். 2009-10 ல் தமிழ்நாட்டில், 11,483 பெண்கள் தற்கொலை செய்துள்ளனர். அதே காலகட்டத்தில் 1216 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 18-லிருந்து 30 வயதுக்குட்பட்ட பெண்கள் 419. கவுரவ கொலைகள் என்பதோடு இப்போது கவுரவ ‘தற்கொலைகள்’ நடந்து வருகின்றன. சாதியைக் கடந்து காதலிக்கும் பெண்களை, தற்கொலை செய்து கொள்ளுமாறு சாதிக் குடும்பம் கட்டாயப் படுத்துகிறது என்றார் கதிர். இதில் பலியாவது பெரும்பாலும் பெண்கள்தான்.

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (8)

### 1917ஆம் ஆண்டு நிகழ்வுகள் (3)

திராவிடர் சங்கத்தின் பணியும் தொடர்ந்தது. நவம்பரில் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பட்டம் பெற்ற திராவிட மாணவர்கட்கு வழக்கம்போல் விருந்தும் பாராட்டும் நடைபெற்றது. நாயரின் வேண்டுகோளுக்கிணங்க அலெக்சாண்டர் கார்டியூ தலைமை வகித்து, திராவிட மாணவர்கள் கல்வியில் நாட்டம் செலுத்த வேண்டுமென்றும், நாட்டிற்கு நற்றொண்டு செய்ய வேண்டுமென்றும், அறிவுரைகளும், பாராட்டும் வழங்கினார். பனகல் அரசர், பித்தாபுரம் ராஜா, பவானந்தம் பிள்ளை, கே.வி.ரெட்டி, தியாகராயர், ஜஸ்டிஸ் கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்க, நடேசனார் வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். ‘அரசு தலைமைச் செயலாளரான கார்டியூ விழாவுக்கு தலைமை வகித்தது கண்டிக்கத்தக்கதென்றும், ஒரு சார்புடைய இச்சங்கத்தின் நலனில் கார்டியூ போன்ற அரசு அலுவலர்கள் அக்கறை கொண்டிருப்பது தேசீய உணர்ச்சிக்கு வெடி வைப்பதென்றும், அன்னிபெசண்டின் பார்ப்பன பத்திரிகையான ‘நியூ இண்டியா’ நவம்பர் 26 இல் எழுதி ஓலமிட்டது.

முதல் உலகப் போரில் பிரிட்டிஷாருக்கு இந்திய மக்கள் எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கியதைக் கருத்திற் கொண்டு நல்லொழுக்கத்தைக் காட்டும் அறிகுறியாக இந்திய மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்ள பயிற்சி அளிக்கும் நோக்குடன் இந்தியத் துணைக் கண்டத்திற்கு அதிக அதிகாரங்களைத் தர பிரிட்டிஷ் அரசாங்கம் முன் வந்தது. இதனை உணர்ந்து கொண்ட இம்பீரியல் கவுன்சில் உறுப்பினர்கள் 19 பேர் (ஜின்னா உட்பட பலர் இதில் கையெழுத்திட்டுள்ளனர்) இந்தியர்களின் கோரிக்கையை விளக்கி ஓர் அறிக்கையை அன்றைய இந்திய வைஸ்ராய் - செம்ஸ்போர்டுக்கு அனுப்பி வைத்தனர். இந்த அறிக்கையின் பயனோ என்று எண்ணுமளவிற்கு, இந்திய மந்திரி மாண்டேகு, ‘இந்திய அரசியலில் இந்தியர்களுக்கு அதிகப்படியான பங்களித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இந்தியாவுக்கு பொறுப்பாட்சி அளிப்பதே பிரிட்டிஷ் சர்க்கார் நோக்கம்’ என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு ஆகஸ்ட் 20 நாளிட்ட இந்திய அரசின் விசேஷ கெஜட்டில் வெளி வந்தது. இந்த அறிக்கையைக் குறித்து மக்களின் கருத்தை அறிய இந்தியத் துணைக் கண்டம் முழுதும் சுற்றுப்பயணம் செய்த மாண்டேகுவும், செம்ஸ்போர்டும், டிசம்பர் 24 இல் சென்னை வந்தனர். இவர்கள் முன் பார்ப்பனரல்லாதார் சார்பில் 4 வகையான தூதுக் குழுவினர் சாட்சிய மளித்தனர். கேசவ பிள்ளை தலைமையில், சென்னை மாகாண சங்கத்தின் சார்பில், ரெவரண்ட் டாக்டர் ஜே. லாசரஸ், எம்.சி.டி. முத்தையா (செட்டியார்), லட்சுமி நாராயண (செட்டி), ஏ.என்.பரசுராம (நாயக்கர்), மூக்கணாச்சாரி, வி.சக்கரை (செட்டியார்), கே.ஆஷர் பி.தாசர், எஸ்.ஏ.சிங்கு மற்றும் சிலர் அடங்கிய தூதுக் குழுவினர் சாட்சியம் அளித்தனர். “ஹோம் ரூல் கட்சியினரால் ஆதரிக்கப் பெற்ற 19 பிரதிநிதிகளின் அறிக்கையை ஆதரிப்பதாகவும், எல்லா சமூகத்திற்கும் பாதுகாப்பளிக்க வேண்டும்” என்றும் அவர்கள் தமது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தனர்.

நீதிக்கட்சியின் சார்பாக, திவான்பகதூர் பி.ராஜரத்தின (முதலியார்) தலைமையில் தியாகராயர், நாயர் ஆகியோர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் சாட்சியமளித்தனர். இக்குழுவின் சார்பில் தியாகராயர் ஓர் அறிக்கையை மாண்டேகு-செம்ஸ்போர்டு முன் அளித்தார். பார்ப்பனரல்லாதார் எத்துறையிலும் முன்னேற்றமடையாமல் பின் தங்கியுள்ளனர். அரசியல் உணர்வு பெறாதவர்களாக உள்ளனர். இம்பீரியல் கவுன்சில் உறுப்பினர் அறிக்கையை (12 பேர் அறிக்கை) பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது. அதனை ஒப்புக் கொண்டால் பார்ப்பனரல்லாதார் பார்ப்பன சமூகத்திற்கு அடிமையாக நேரும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டால் ஒழிய, பார்ப்பனரல்லாத மக்களுக்கு முன்னேற்றமும் நல்வாழ்வும் கிடைக்க முடியாது. தற்கால நிலையில் எல்லா சமூகங்களுக்கும் சமநீதி வழங்க வேண்டிய பிரிட்டிஷார் இன்னும் கொஞ்ச காலம் இந்தியாவில் இருந்தே தீர வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ‘திராவிடர் சங்கம்’ சார்பில் பனகல் அரசர் தலைமையிலான குழுவினரும், பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் சார்பில் ராவ்பகதூர் வெங்கடரத்தினம் தலைமையிலான குழுவினரும், அதே கருத்துள்ள அறிக்கைகளை அளித்தனர். சென்னை மாகாண சங்கத்தின் தூதுக் குழுவைத் தவிர, ஏனைய மேற்கண்ட 3 தூதுக் குழுவில் இருந்த 50 பேர்களும் ஒன்றாக வைஸ்ராய்க்கும் இந்திய மந்திரிக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். இந்திய மக்களின் கருத்துகளைத் திரட்டிக் கொண்டு, மாண்டேகு லண்டன் பயணமானார். அங்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சீர்திருத்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியைத் தொடங்கினார். **(தொடரும்)**

**கழக வெளியீடான ‘திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்’ நூலிலிருந்து**

### நன்கொடை

தென் சென்னை மாவட்டக் கழகப் பொருளாளர் கரு. அண்ணாமலை-வெ.தமிழ்ச் செல்வி ஆகியோரின் 2வது மகன் அண்.அன்பரசன், 12.4.2012 அன்று 14 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ரூ.2000 அளித்தார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)

பல்லாவரம் பம்மல் அ.பா. செல்வராசு நினைவு (16.3.2012) நாளை முன்னிட்டு தலைமைக் கழக அலுவலக நிதியாக அவரது மகள் ஜோசப் ஸ்டாலின் ரூ.5000 நன்கொடை அளித்தார். தென் சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி குமரன் பெற்றுக் கொண்டார்.

## வரலாறுகளை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

# நடிகவேள் எம்.ஆர்.ராதா நாடகத்தைத் தடுக்க வந்த சட்டம்

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை–தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து:*

எம்.ஆர்.இராதா நாடக உலகில் முழுக்க முழுக்க பெரியார் கருத்துகளைப் பற்றி மட்டுமே பேசியவர். சினிமாவை விரும்பியவர் அல்ல.1937 முதல் 1942 வரை சினிமாவில் நடித்து, சினிமா வேண்டாம் என்று நாடகம் நடிக்க வந்தவர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ‘இரத்தக் கண்ணீர்’ நாடகத்தை சினிமாவாக எடுக்க வேண்டும் என்று, பி.ஏ. பெருமாள் கேட்ட பிறகு சினிமாவில் நடிக்க வருகிறார். அப்போதுகூட, “நான் தினமும் நாடகம் நடிப்பேன், நேரம் இருக்கும்போது மட்டும் தான் படப்பிடிப்பிற்கு வருவேன், என்னை தொல்லை கொடுக்கக் கூடாது” என்று சொல்வாராம். இன்னொன்று ‘இரத்தக் கண்ணீர்’ நாடகத்தில் தன் மனைவியை நண்பனுக்கு திருமணம் செய்து வைக்கும் காட்சியை எந்த காரணத்தைக் கொண்டும் நீக்கிவிடக் கூடாது என்பது எம்.ஆர்.இராதாவின் மற்றொரு கோரிக்கை. அவர் நாடகத்தை துவக்கும் போதெல்லாம் பெரியார் படத்தையும், திராவிடர் கழகக் கொடியையும் காண்பித்துவிட்டு, “வளமார் திராவிட நாடு” என்ற பாடலை பாடிவிட்டு, துவங்குவதும், அரிவாள் சுத்தியலோடு பெண்கள் நிற்கும் காட்சி, உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற முழக்கங்களோடும் தான் அவர் நாடகங்களை நடத்தினார். விதவை மறுமணத்தை வைத்து, பல நாடகங்கள் நடத்தி வந்த இவர், முழுமையாக இயக்கத்திற்கு வந்து இணைந்த பின்னால் நடித்த முதல் நாடகம் சி.பி. சிற்றரசு எழுதிய ‘போர்வாள்’. அதன் பின்னால் கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’. அதன் பிறகு திருவாரூர் தங்கராசு எழுதிய ‘இரத்தக் கண்ணீர்’. இவருக்கு மிகவும் புகழ் வாங்கிக் கொடுத்த நாடகம் ‘இரத்தக் கண்ணீர் (சுமார் மூன்றாயிரத்திற்கும் அதிகமான முறை நடத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர், பெரியார் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டவுடன், திருவாரூர் தங்கராசு, இராமாயண நாடகம் என்ற நாடகத்தை எழுதினார். 1954 நவம்பர் மாதத்தில் நாடகத்தை அரங்கேற்றுகிறார். நிறைய எதிர்ப்புகள் உண்டாகி, டிசம்பர் மாதத்தில் நாடக கட்டுப்பாட்டு சட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். (குறிப்பு: இந்த சட்டத்தை எதிர்த்துத்தான் கடந்த வாரம் எழுத்தாளர் ஞாநி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்-ஆர்.) இந்தச் சட்டம் கொண்டு வந்தவுடன், பெரியார் மேலும் தீவிரமாக, சென்னையில் மட்டுமே முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் இராமாயணம் பற்றி மட்டுமே பிரச்சாரம் செய்கிறார். இந்த சட்டம் வந்தவுடன் ஜீவானந்தம் சட்டசபையில் பேசினார். ஆனால், பெரியார் இயக்கத்தில் இருந்து விலகியவர்கள் எல்லாம் எப்படி மாறிப் போனார்கள் தெரியுமா? பாலசுப்ரமணியம், திருவாசக மணியானார். பெரியார் கத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்ற போது, அண்ணா, ‘கத்தியைத் தீட்டாதே! தம்பி! புத்தியைத் தீட்டு!’ என்றார். ஜீவா, சுயமரியாதை இயக்கத்திலிருந்து விலகியவுடன், கம்ப இராமாயணச் சுவைகளைப் பற்றிப் பேசத் தொடங்கினார். பெரியார் மீது உள்ள கோபத்தை இயக்கத்தின் மீது, கொள்கைகள் மீது காட்டினார்கள். ஜீவா இராமாயண பிரச்சாரத்தை செய்தார் என்றாலும், நாடக தடை சட்டம் வந்தபோது, “நீ போய் கண்ணாடியில் பார்க்கும்போது, உன் முகம் அசிங்கமாக இருந்தால் கண்ணாடியை உடைப்பது என்ன நியாயம்? அதுபோலவே இராமாயணத்தில் இருப்பதை இராதா நாடகமாக காட்டுகிறார். அதை எதற்கு தடை செய்கிறீர்கள்” என்று இராதாவிற்கு ஆதரவாக ஜீவா ஒருவர் மட்டும் பேசினார். ஆனாலும் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் பின்னரே பெரியாரும், திராவிடர் கழகமும் மிக வேகமாக இராமாயணத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார்கள். இதன் தொடர்ச்சியாகத்தான் 1956 இல் இராமாயணத்தை - இராமன் படத்தை எரிப்பேன் என்று பெரியார் சொன்னார். அப்போதுதான் குன்றக்குடி அடிகள், வரதராஜுலு நாயுடு போன்றவர்கள் எல்லாம் பெரியாருக்கு கடிதம் எழுதினார்கள், எரிக்காதீர்கள் என்று.

பெரியார் நடத்திய பல போராட்டங்களில், இரண்டு போராட்டங்கள் மட்டும்தான் நாத்திக போராட்டம். அதில் ஒன்று பிள்ளையார் சிலை உடைப்பு. மற்றொன்று இராமர் பட எரிப்பு. கடைசியாக அவர் அறிவித்த போராட்டம் பக்தர்களுக்கு மட்டுமேயான போராட்டம் அது. அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகராகும் உரிமை கோரும் கோவில் கருவறை நுழைவு போராட்டம். மற்ற அனைத்துப் போராட்டங்களும் அனைத்து மக்களுக்கான போராட்டங்களே!

புத்தர் பிறந்த நாள் அன்று விநாயகர் சிலையை உடையுங்கள் என்று சொன்னார். ஒன்றுக்கு மாற்றாக இன்னொன்றை சொன்னார். புத்தர் அரச மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தபோது, அறிவு தெளிவு பெற்றார். இதை போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றார் என்று சொல்கிறார்கள். அரச மரம் என்பது புத்தருக்கு அடையாள சின்னம். இலங்கையில் இன்றுகூட அரச மரங்கள் தான் தேசிய மரங்களாக பாதுகாக்கப்படுகின்றன. அனுராதாபுரத்தில் ஒரு வெள்ளரச மரம் இருக்கின்றது. அந்த மரத்தடிக்கு தான் புத்தர் வந்தார். என்று ஒரு கதையை வைத்துக் கொண்டு, (புத்தர் அங்கு போகவே இல்லை. அசோகனின் மகள் சங்கமித்திரை இலங்கைக்கு புத்த மதத்தைப் பரப்ப சென்றிருந்தபோது நட்டதாய் இருக்கலாம்) அந்த இடத்தை பாதுகாத்து வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இந்து மதத்திற்கு எதிரான மதம்தான் புத்த மதம். புத்தரை மறக்கடிப்பதற்காக, அரசமரத்தடியில் எல்லாம் விநாயகர் சிலையை வைத்தார்கள். (வி-நாயகர் என்றால் நல்ல தலைவர் எனறு பொருள். புத்தருக்கு இப்படி ஒரு பெயரும் உண்டு) எனவே புத்தர் பிறந்த நாளில் விநாயகர் சிலையை உடைப்பதாக பெரியார் சொன்னார்.

இராஜாஜி, புதிய கல்வி (குலக் கல்வி) திட்டத்தைக் கொண்டு வந்தபோது, அதை எதிர்த்து ஈரோட்டில் பெரியார், குலக் கல்வி எதிர்ப்பு மாநாடு நடத்தினார். அந்த மாநாட்டின் இரண்டாம் நாள் புத்தர் மாநாடு. ஆரியருக்கும், ஆரியர்கள் செய்கிற குழப்பங்களுக்கும் எதிராக, பெரியார் ஒவ்வொரு முறை போராடுகிற போதும்கூட புத்தரை நினைவூட்டியது போலத்தான். புத்தரின் 2500 ஆவது பிறந்த நாள் அன்று (1956) இராமர் படஎரிப்பை அறிவிக்கிறார். அப்போதுதான் குன்றக்குடி அடிகள், வரதராஜுலு நாயுடு போன்றவர்கள் எல்லாம் பெரியாருக்கு கடிதம் எழுதுகிறார்கள். அதற்கு பெரியார் பதில் எழுதுகிறார்... “நீங்கள் எரிக்க வேண்டாம் என்கிறீர்கள் சரி, நட்பையும், பழக்கத்தையும் காட்டி எரிக்க வேண்டாம் என்று சொல்கிறீர்களே தவிர, நான் சொன்ன காரணம் தவறு என்று சொல்லுங்கள். அன்போடு சொல்லாமல், அறிவோடு ஆதாரத்தோடு சொல்லுங்கள். எரிக்காமல் விட்டுவிடுகிறேன். இல்லை என்றால் என்னை மன்னித்துவிடுங்கள். நான் எரிப்பேன்” என்று. (எரிக்காமல் நிறுத்திக் கொண்டதாக, கலைஞர் பேசி உள்ளார், உண்மையில் பெரியார் எரித்தார்) பெரியார் போராட்டத்திற்கு எடுத்த அந்த இராமன் மற்றும் விநாயகர் ஆகிய இரண்டு கடவுள்கள்தான் இந்தியாவில் வரும் அனைத்து குழப்பங்களுக்கும் காரணம்.

1938 இல் ஆட்சியை விட்டு இறங்கியதும் இராஜகோபாலாச்சாரியார் மகாபாரதத்தை ‘வியாசர் விருந்து’ என்றும் எழுதினார். 1953 இல் இராஜாஜி ஆட்சியை விட்டுப் போனார். (பார்ப்பனர்களே நமக்கு ஆபத்து வருகிற போதெல்லாம் இராமாயணத்தைப் புரட்டிப் பாருங்கள், வழி கிடைக்கும் என்று அடிக்கடிக் கூறுவார்) அதன் பிறகு, இராமாயணத்தை ‘சக்ரவர்த்தி திருமகன்’ என்றும் எழுதினார். இராஜாஜி என்பதற்குப் போட்டியாக ‘மூக்காஜி’ என்ற புனை பெயரில், ‘சக்ரவர்த்தியின் திருமகன்’ என்ற தலைப்பில், கருணாநிதி அவர்கள் கட்டுரை எழுதினார். (10.8.1954, 28.5.1954 ஆகிய தேதிகளில் கலைஞர் எழுதிய இரண்டு கட்டுரைகள், நம் கழகம் சார்பாக வெளியிடப்பட்ட ‘சங்பரிவாரின் சதி வரலாறு’ என்ற நூலில்கூட இடம் பெற்றுள்ளது. திராவிடர் கழகத்தை விட்டுப் போனபின்புகூட தி.மு.க.வினர் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார்கள் என்பதற்காக சொல்கிறேன். (தேர்தலில் தி.மு.க. போட்டியிடும் வரை) ‘முரசொலி’யில் வந்த அந்த கட்டுரைகள் 1956 இல் வேலூர் திராவிடன் பதிப்பகம் சார்பாக புத்தகமாக வெளிவந்துள்ளது.

திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கிய தொடக்க விழாவின்போது, “நாங்கள் ஆரியர், திராவிடரென்றெல்லாம் பிரித்து பார்ப்பவர்கள் அல்ல. ‘திராவிட’ என்ற சொல்லில் ‘ர்’ இல்லை. எனவே இது மக்களை குறிக்கும் சொல் அல்ல. மண்ணைக் குறிக்கும் சொல்” என்று சொன்னார்கள். பெரியார் பார்ப்பன எதிர்ப்பு பேசியதற்கு பதிலாக அண்ணா அவர்கள், வடவர் எதிர்ப்பு பேசினார். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று முழக்கத்தை மாற்றினார். அதன் பிறகு நாங்கள் பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை. பார்ப்பனியத்தைத்தான் எதிர்க்கிறோம். எனவே பார்ப்பனர்களும் சேரலாம் என்று 52-53 வாக்கில், தி.மு.க.வில் சேரும் விதியில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். (தலைமை செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது)

‘தனியரசு’ என்ற நாளேட்டை ஏ.வி.பி. ஆசைத்தம்பி (தி.மு.க.வின் முன்னணித் தலைவர், சுயமரியாதை இயக்க உணர்வாளர்) நடத்தி வந்தார். “பார்ப்பனர்களை கட்சியில் உறுப்பினராக சேர்க்கலாம். தி.மு.க. செயற்குழுவில் முடிவு, அண்ணா அறிக்கை என்று செய்தியை அப்படியே போட்டு அண்ணா அவர்களின் படத்தை தலைகீழாக வெளியிட்டார். அதற்காக அவர் கட்சியில் இருந்து ஒரு வருடத்திற்கு நீக்கி வைக்கப்பட்டார். **(தொடரும்)**

## அஞ்சலகத்தில் “தீண்டாமை”யை கண்டித்து கழகம் போராட்டம்

கோவை மாவட்டம் அன்னூர் வடவள்ளி ஊராட்சியில் அஞ்சலகத்தில் அங்குள்ள தலித் மக்களை அனுமதிக்காததை கண்டித்தும் அதே ஊராட்சிக்கு உட்பட்ட தாத்தம்பலயத்தில் செயல்படும் அங்கன்வாடியில் தலித் குழந்தைகளை அனுமதிக்காததை கண்டித்தும் சின்னவடவல்லியில் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் 16.4.2012 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர்கள் து.ராமசாமி, கலங்கல் வேலுசாமி, சூலூர் குமாரவேல், கோவை வே.கோபால், இர. இரஞ்சித் பிரபு, சா.கதிவரன், அன்னூர் பொறுப்பாளர்கள் ஜோதி ராம், ஈஸ்வரன், இராமன், கணேசன், வீரமுத்து மற்றும் நூற்றுக்கணக்கான தோழர்கள், பெண்கள் பங்கேற்றனர்.

கழகம் ஆர்ப்பாட்டத்தை அறிவித்தவுடன் ஊராட்சி தலைவர் கணேசன் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து அங்கன்வாடி செயல்படும் கட்டிடம் தனியாருக்கு சொந்தம் என்பதால் பொது கட்டிடம் தேவை என்று முறையிட்டதை அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் கருணாகரன் தனது சிறப்பு நிதியிலிருந்து ரூ.6.5 லட்சம் ஒதுக்கியுள்ளார்.



PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பன்னாட்டு நிறுவனங்கள் - பார்ப்பனர்கள் - ‘பகவான்கள்’ கூட்டுக் கொள்ளை

*விவசாய மான்யம், உணவு மான்யம் போன்ற மான்யங்கள் வழங்குவதால்தான் கடும் நிதி நெருக்கடிகளை சந்திப்பதாக மத்திய அரசு புலம்புகிறது. அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள சர்வதேச நிதியமைப்புகளான உலக வங்கி, சர்வதேச நிதியமைப்பு போன்ற நிறுவனங்களும் இதே கருத்தையே வலியுறுத்துகின்றன. ஆனால், பெரும் தொழில் நிறுவனங்களான கார்ப்பரேட் நிறுவனங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளில் பெரும் தொகை ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி செய்யப்படுவது பற்றி, பார்ப்பன ஊடகங்களோ, இந்திய பார்ப்பன ஆட்சியோ, சர்வதேச நிதியமைப்புகளோ, வாய் திறப்பதில்லை.*

- **2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை பெரும் கார்ப்பரேட் தொழில் நிறுவனங்களுக்கு ஒவ்வொரு நிதியாண்டிலும் தள்ளுபடி செய்யப்பட்ட வருமான வரி மட்டும் ரூ.3,95,878 கோடி. (2005 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக 48.17 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது)**
- **இதே காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள ‘எக்சைஸ்’ வரி – ரூ.9,55,726 கோடி. (217.81 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது)**
- **இதே காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட சுங்கவரி (கஸ்டம்ஸ் டூட்டி) – ரூ.12,22,438 கோடி. (75.1 சதவீதம் அதிகரிப்பு)**
- **ஆக மொத்தம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 2005–2006 இல் தொடங்கி, 2011–2012 வரை இந்திய அரசு தள்ளுபடி செய்துள்ள வரி – ரூ.25,74,042 கோடி (25 அய்ந்து லட்சத்து 74 ஆயிரத்து 42 கோடிரூபாய்).**

*2005 -06 ஆம் ஆண்டு நிதியாண்டு தொடங்கி, இப்படி தள்ளுபடி செய்வது படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்து 112.6 சதவீத அதிகரிப்பில் வந்து நிற்கிறது. (ஆதாரம்: நிதிநிலை அறிக்கைகள்) (பி.சாய்நாத் - ‘இந்து’ நாளேட்டில் (மார்ச் 21, 2012 எழுதிய கட்டுரையிலிருந்து)*

*பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களும் பெரும் தொழில் நிறுவனங்களும் இப்படி மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டுமல்ல, பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களும் கோடி கோடியாய் சொத்துகளை முடக்கிப் போட்டுள்ளன. திருப்பதியில் ஏழுமலையான் கோயிலில் நடக்கும் பல்வேறு மோசடிகளை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு தொடர் கட்டுரைகளை வெளியிட்டு அம்பலப்படுத்தி வருகிறது. தற்போதைய நிலவரப்படி ஏழுமலையான் என்ற கல் முதலாளியின் சொத்து ஒரு லட்சம் கோடி. ஆண்டுதோறும் வரும் உண்டியல் வருமானம் ரூ.600கோடி. தங்கம் 12 ஆயிரம் கிலோ. விலைமதிப்பற்ற ஆபரணங்கள் 11 ஆயிரம் கிலோ. வெள்ளியின் மதிப்பு ரூ.50 ஆயிரம் கோடி. 8 அடி உயர சிலைக்கு நாள்தோறும் போடப்படும் நகை 65 லிருந்து 70கிலோ தங்கம், கல் முதலாளியின் ஒரு நாள் சராசரி வருமானம். ரூ.80 லட்சத்திலிருந்து ரூ.1.5 கோடி வரை. தலையில் சூட்டப்படும் கீரிடம் 30 கிலோ தங்கத்திலால் ஆனது.*

*விஜய நகர தெலுங்கு மன்னன் கிருஷ்ண தேவராயன், மொழியால் ‘தெலுங்கன்’ என்றாலும் அவன் போற்றி வளர்த்தது தெலுங்கை அல்ல. பார்ப்பானையும் சமஸ்கிருதத்தையும் தான். அவன் தான் ஏழுமலையான் மேலே உள்ள தங்க கோபுரத்தை வழங்கினான். 10,000 கோடி ரூபாய் ரொக்கப் பணத்தின் மீது தான் இந்த கல் முதலாளி அமர்ந்திருக்கிறான். நாடு முழுதும் இந்த முதலாளிக்கு உள்ள நிலம், 4200 ஏக்கர் என்று அண்மையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சந்தை நிலவரப்படி இதன் மதிப்பு, 90000 கோடி என்கிறார்கள் தேவஸ்தான அதிகாரிகள். இது தவிர, தேவஸ்தான கட்டுப்பாட்டில் 40 கோயில்களும் அந்தக் கோயிலுக்கு பல்லாயிரக் கோடிக்கணக்கில் நகைகளும் சொத்துகளும் உள்ளன. சுரங்கக் கொள்ளை மன்னனும் கருநாடக முன்னாள் அமைச்சரும் தற்போது சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருப்பவருமான ஜனார்த்தனரெட்டி 2 ஆண்டுகளுக்கு முன்பு இந்த கல் முதலாளிக்கு ரூ.42 கோடிக்கு வைரம் பொதித்த நகை வாங்கிப் போட்டார்.*

*தேவஸ்தான பாதுகாப்பு மய்யத்தில் (பொக்காசம்) “பகவான்” நகைகள் வைக்கப்பட்டுள்ளன. 2006 ஆம்ஆண்டு சோதனையிட்டபோது 30 தங்கக் காசுகள் காணாமல் போனது தெரிந்தது. இந்த காசுகளை திருடியவர் தலைமை பார்ப்பன அர்ச்சகரான டாலர் சேஷாத்திரி என்பவர்தான் என்று கண்காணிப்பு சோதனையில் கண்டறியப்பட்டது. (இவர் கழுத்தில் டாலரோடு இருப்பவர்; எனவே டாலர் சேஷாத்திரி என்று அழைக்கப்படுகிறார்)*

*தங்க டாலர்களைக் கையாடிய அந்த பார்ப்பனர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும் அதிகார வலிமை யோடு அவர் சன்னிதானத்தில் வலம் வருகிறார். திருப்பதி தேவஸ்தான விதிமுறைகளின்படி ஒவ்வொரு ஆண்டும் இந்த நகைகள் சரிபார்க்கப்படவேண்டும். ஆனால், அப்படி சரிபார்ப்பதே கிடையாது என்கிறார், ‘திருமலா தேவலாய பரிகாசனா சமிதி’ என்ற அமைப்பைச் சார்ந்த பக்தை சுசீலா.*

*ஆந்திர மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு நிகராக ஏழுமலையான் சொத்துகள் இருக்கின்றன. ஆனாலும், நிர்வாகம் இதை ஒழுங்காக பாதுகாக்கும் திறமையுடன் செயல்படுகிறதா என்பது சந்தேகம் தான் என்கிறார், தணிக்கை அதிகாரி இலக்குமணன் ராவ். இது தவிர ஒவ்வொரு ஆண்டும் சேவைக் கட்டணமாக ரூ.300 கோடியும், காணிக்கை செலுத்தும் முடிகளை விற்பதால் ரூ.300 கோடியும், லட்டு விற்பனையில் ரூ.100 கோடியும் கல் முதலாளிக்கு வருமானம் கொட்டுகிறது.*

*பார்ப்பனர்களின் சுரண்டல் மடமாகவும், அதிகார பீடமாகவும் திகழும், இத்தகைய கோயில்களில் பூசைகள் முறையாக நடக்கிறதா? ஏழுமலையானுக்கு பூசை செய்யக் கூடிய அர்ச்சகர்கள், வைகாசன ஆகமத்தைப் பின்பற்ற வேண்டியவர்கள். இவர்கள், ஏழுமலையானைத் தவிர வேறு எங்கும் பூசை செய்யக் கூடாது என்பது இந்த ஆகமவிதி. ஆனால், தலைமை அர்ச்சகப் பார்ப்பனராக உள்ள டாலர் சேஷாத்திரி பெரும் தொழிலதிபர்களுக்காக விசேட பூசைகளையும் யாகங்களையும் நடத்துவதாக குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. பெரும் தொழிலதிபர்கள், திரைப்பட நட்சத்திரங்கள், பிரபலமானவர்களுடன் கோயிலின் தலைமை அர்ச்சகர்களாக உள்ள தீக்சித்துலு மற்றும் சேஷாத்திரி என்ற பார்ப்பனர்கள் நெருக்கமாக இருக்கிறார்கள். அடிக்கடி பம்பாய்க்கு விமானத்தில் பறந்து, பெரும் தொழிலதிபர்களுக்காக யாகம், விசேட பூசைகளை நடத்துகிறார்கள். இதற்காக திருப்பதி நிர்வாகம் ஏப்ரல் 2010 இல் குற்றம் சாட்டி கண்டித்து விளக்கம் கேட்டது. அதுபற்றி எல்லாம் கவலைப்படாமல் ‘ஆகம’ விதிகளை காலில் போட்டு மிதித்து, பழக்க வழக்கங்கள் பற்றியும் கவலைப்படாது, அர்ச்சகர் வேலையை வளம் கொழிக்கும் தொழிலாக மாற்றிவிட்டார்கள். திருப்பதி - திருமலைஅறங்காவல் சட்டத்தின் பிரிவு 34(3)ன் கீழ் அர்ச்சகர்கள் பரம்பரை வழியில் நியமிக்கப்படுகிறார்கள்.*

*வைணவ பார்ப்பனர்களாக வைகாசன ஆகமம் தெரிந்தவர்களாக இருந்தால் போதும், வேறு எந்த தகுதியும் தேவை இல்லை. தமிழ்நாடு, ஆந்திரா, கருநாடகா மாநிலங்களில் இந்தத் தொழிலில் பரம்பரையாக ஈடுபட்டுள்ள 2500 பார்ப்பன குடும்பங்கள் இருக்கின்றன. “ஒவ்வொரு நாளும் ஏழுமலையானுக்கு செய்யப்பட வேண்டிய சடங்குகள் எந்தக் குறையும் இல்லாமல் செய்து வரவேண்டும்” என்பதே ஆகமம் விதிக்கும் கட்டளை என்றும், அதை, இங்கே உள்ள அர்ச்சகர்கள் மதிப்பதில்லை என்றும், ‘ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீட்’ பேராசிரியர் சக்கரவர்த்தி ராகவன் என்ற பார்ப்பனரே குற்றம் சுமத்துகிறார். பெரும் தொழிலதிபர்கள் நடத்தும் ‘பாசு’, ‘சேனா’ என்ற யாகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.10 லட்சம் செலவிடப்படுகிறது. இதில் பெரும் தொகை ‘தட்சணையாக’ கிடைப்பதால் ஆகமவிதிகளை எல்லாம் உதறிவிட்டு, ஏழுமலையான் அர்ச்சகர்கள் ஓடுகிறார்கள் என்கிறார், நாராயண சாஸ்திரி என்ற அர்ச்சகர்.*

***முழுமையாக ஆகமப் பயிற்சிப் பெற்ற பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராவதை எதிர்க்கும் உச்சநீதிமன்றங்களும், பார்ப்பனர்களும் நாட்டின் ‘கல் முதலாளி’ பட்டியலில் முதலிடத்தில் நிற்கும் பணக்கார ‘கடவுளுக்கே’ ஆகமங்கள் மீறப்படுவதைப் பற்றி கவலைப்படுவதில்லை.*** *இவை எல்லாம் ஏதோ நாம் இட்டுக்கட்டி எழுதுவதல்ல. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டில் (மார்ச் 31, ஏப். 4) வெளியிட்ட தகவல்கள் தான் இவை.*

*பன்னாட்டு நிறுவனங்களும் கடவுள் எனும் கல் முதலாளிகளைக் கட்டுப் பாட்டில் வைத்துள்ள பார்ப்பனர்களும் கரம் கோர்த்துக் கொண்டு நாட்டையும் மக்களையும் சுரண்டி வருவதற்கு? இதைவிட சான்றுகள் வேண்டுமா?* **– இரா**

## இதுவா, தமிழ்ப் புத்தாண்டு?

*சித்திரையில் தொடங்குகிறதாம் ‘தமிழ்ப் புத்தாண்டு’. தமிழக முதல்வர் ஜெயலலிதா, இதுதுதான் தமிழர்களின் ‘புத்தாண்டு’ என்று நீட்டி முழக்குகிறார். இப்போது பிறந்துள்ள “தமிழ்” வருடத்தின் பெயர் என்ன தெரியுமா? “நந்தன” – இது தமிழா என்று கேட்டு விடாதீர்கள். வடமொழி தான்! ‘பிரபவ’ தொடங்கி ‘அட்சய’வில் முடியும் 60 ஆண்டுகளின் பெயர் களுமே சமஸ்கிருதம் தான்! மருந்துக்குக்கூடதமிழ் இல்லை. ஆனால், இதற்குப் பெயர் ‘தமிழ்’ப் புத்தாண்டாம்!*

*இதோ 60 ஆண்டுகளின் பெயர்களைப் பாருங்கள்!*

*பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரஜோத்பத்தி, ஆங்கிரஸ, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈஸ்வர, வெகுதான்ய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்ரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, ஸர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துர்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, ராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி, குரோதன, அக்ஷய. – இவைகள்தான் தமிழருக்கு தமிழ்ப்புத்தாண்டுகளாம்.*

*தமிழ்ப் புத்தாண்டா? சமஸ்கிருதப் புத்தாண்டா? மானமுள்ள தமிழன், இதைப் புத்தாண்டாக ஏற்க முடியுமா?*

முதல் பக்கத் தொடர்ச்சி

*அதிக அளவில் வெளியேறிவிட்டால் அவர் செட்டியாரா? கவுண்டரா? எந்த சாதியைச் சார்ந்தவர் என்று பார்த்து அந்த சாதி இரத்தம் வேண்டும் என்று மருத்துவர் கேட்பதில்லையே! ஏ, பி, ஓ வகை ரத்தம் வேண்டும் என்று தானே கேட்கிறார்கள். தாழ்த்தப்பட்டவன் பிற்படுத்தப்பட்டவன் என்று எந்த சாதியை சார்ந்தவரின் ரத்தமும் பயன்படுகிறதே! அப்படி இருக்கும்போது இரத்தத்தை பரிமாறிக் கொண்டு உயிர்வாழ வேண்டிய நாம் இரத்தத்தை வீதியிலே சிந்தி நாம் உயிரை பழிவாங்கிக் கொண்டிருப்பது நியாயம் தானா? நம்மை வேசி மகன் என்று இழிவுபடுத்தும் பார்ப்பனர்களைப் பார்த்துக் கோபப்படாமல், நம்முடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் பார்ப்பனரைப் பார்த்துக் கோபப்படாமல், ஒரு காலத்தில் நாம் அனுபவித்த சாதிக் கொடுமைகளை தாழ்த்தப்பட்டவர்கள் மீது இன்றும் அதே கொடுமைகளை செய்வது நியாயம் தானா? நாங்கள் பெரியார் தொண்டர்கள்; சாதிகளைக் கடந்து நிற்கும் மனிதர்களாக சாதி அடையாளங்களை உதறிவிட்டு உங்கள் முன் நியாயம் கேட்கிறோம் என்ற கருத்துகளைப் பரப்பி வருகிறார்கள்.*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th April 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.